உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 28
விலை - 30 ரூபா

சுடர் 34 கதிர் 355 கார்த்திகை 03ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 19 நவம்பர் 2019 வள்ளுவர் ஆண்டு 2050

சிங்கள மக்கள்தான் எனது வெற்றியின் பங்காளர்கள்

சிறுபான்மையினரும் எனது பயணத்தில் கைகோருங்கள்

நிறைவேற்று அதிகாரத்தையும் பயன்படுத்த தயங்கேன்

பதவியேற்பு நிகழ்வில் கோத்தபாய ராஜபக்ச உரை

கொழும்பு, நவம்பர் 19

எனது வெற்றியின் முதன்மைப் பங்காளர்களாக இந்த நாட்டின் சிங்கள மக்கள்தான் இருப்பார்கள் என்பதை நான் ஆரம்பத்தில் அறிந்து வைத்திருந்தேன். அந்த மக்களின் வாக்குகளால் மாத்திரமே அரச தலைவராகத் தெரிவு செய்யப்படுவேன் என்பதை நான் அறிந்திருந்தபோதும் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களும் எனது வெற்றியின் பங்காளர்களாக இருக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்திருந்தேன். 23

ரணில் சென்றபோது கூட்டத்தில் கூச்சல்!

கொழும்பு, நவ.19
அநுராதபுரத்தில் நேற்று நடைபெற்ற கோத்தபாய ராஜபக்சவின் பதவியேற்பு விழாவுக்கு தலைமை அமைச்சர் ரணில் சென்றபோது அங்கு கூடியிருந்தவர்கள் கூச்சலிட்டுள்ளனர். கோத்தபாய 23

த.தே.கூ. எம்.பிக்கள் இல்லை

கொழும்பு, நவ.19
அநுராதபுரத்தில் நேற்று நடைபெற்ற கோத்தபாய ராஜபக்சவின் பதவியேற்பு விழாவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் கலந்து கொள்ளவில்லை. அரச தலைவர் 23

திருப்பி அனுப்பப்பட்ட ஹிஸ்புல்லா?

கொழும்பு, நவ.19
அநுராதபுரத்தில் நேற்று நடைபெற்ற கோத்தபாய ராஜபக்சவின் பதவியேற்பு விழாவுக்குச் சென்ற எம். 08

நாட்டில் தற்போது 2 அரசுகள்: பொதுத் தேர்தலே பொருத்தம்

மகிந்த ராஜபக்ச கூறுகின்றார்

கொழும்பு, நவ.19
மக்கள் ஆணையை ஏற்று நாடாளுமன்றத் தேர்தலுக்குச் செல்வதே பொருத்தமானதாக இருக்கும் என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.
அரச தலைவரும் தலைமை அமைச்சரும் வெவ்வேறு கட்சிகளைப் பிரதிநிதி த்துவப்ப டுத்தி இரு அரசுகள் தற்போது காணப்படுவதால் வேலைத்திட்டங்களை ஆரம்பிக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.
பழைய அரசே இன்னும் காணப்படுகின்றது. ரணில் விக்கிரமசிங்க 23

மைத்திரியின் படத்தை அகற்றியதால் பரபரப்பு

மட்டக்களப்பு, நவ.19
மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலரின் அலுவலகத்துக்குள் நுழைந்து சுவரில் தொங்கவிடப்பட்டிருந்த முன்னாள் அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சர், உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஆகி 23

கட்சி அலுவலகத்தை தாக்கியவர்கள் கைது

கொழும்பு, நவ.19
கட்டுநாயக்க, வல்பொல, அடிஅம்பலம பிரதேசத்தில் புதிய ஜனநாயக முன்னணின் அலுவலகம் மீது நேற்றுமுன்தினம் இரவு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்றும், அது தொடர்பாக 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் கட்டுநாயக்கப் பொலி 23

பாதுகாப்பு அமைச்சின் செயலர் கமல் குணரத்ன

கொழும்பு, நவ.19
பாதுகாப்பு அமைச்சின் செயலராக மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன அரச தலைவர் கோத்தபாய ராஜபக்சவால் நியமிக்க ப்பட்டுள்ளார்.
கடந்த சனிக்கிழமை நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்ற கோத்தபாய ராஜபக்ச நேற்றுப் பதவியேற்றார். இந்த நிகழ்வு அநுராதபுரத்தில் நடைபெற்றது. கோத்தபாய ராஜபக்ச இன்று உத்தியோக 23

ஐ.தே.க. கூட்டத்தில் அமளி துமளி தீர்மானமேதும் எடுக்காது முடிந்தது

கொழும்பு, நவ.19
எதிர்கால நடவடிக்கைககள் தொடர்பாக ஆராய்வதற்காகக் கூடிய ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் எந்த முடிவும் எடுக்காது கலைந்தது.
நேற்று மாலை நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழு கூடியது.
அரசை விட்டு விலகி ஆட்சியை ஒப்படைப்பதா? அல்லது நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தலுக்குச் செல்வதா? என்ற முக்கிய முடிவை எடுக்கும் நோக்குடன் இந்தக் கூட்டம் 23

கனேபொல தோட்டத்தில் வீடுகளின் மீது தாக்குதல்

கொழும்பு, நவ.19
கோகாலை, எட்டியன்தோட்டை, கனேபொல தோட்டத்தில் உள்ள தமிழ் மக்களின் வீடுகள் நேற்று இரவு இனந்தெரியாதவர்களால் தாக்கப்பட்டன என்று கூறப்படுகின்றது. 23

புதிய அரச தலைவரின் செயலாளர் ஜெயசுந்தர

கொழும்பு, நவ.19
அரச தலைவரின் செயலாளராக பி.பி. ஜெயசுந்தர நியமிக்கப்படுவார் என்று தகவல் வெளியாகியுள்ளது.
கடந்த 16ஆம் திகதி நடந்த தேர்தலில் வெற்றி பெற்ற கோத்தபாய ராஜபக்ச நேற்றுப் பதவியேற்றார். இன்று அவர் தனது கடமைகளை உத்தியோகபூர்வமா 08

பேச்சு நடத்தக் கோத்தா அழைத்தால் நாம் தயார்

மாவை எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, நவ.19
தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக புதிய அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச எம்முடன் பேச்சு நடத்துவதற்கு அழைத்தால் அதற்கு நாம் தயாராகவே இருக்கின்றோம்.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினரு 23

படங்கள் வேண்டாம் – கோத்தா

கொழும்பு, நவ.19
அரச அலுவலங்களில் அரச தலைவர்களின் படங்களைக் காட்சிப்படுத்தத் தேவையில்லை என்று அரச தலைவர் கோத்த 23

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஏழரை சனி எந்த ராசியை ஆட்டிப்படைக்கப் போகிறது தெரியுமா?

2020ஆம் ஆண்டு நடக்கும் போகும் சனிப் பெயர்ச்சியால் எந்தெந்த ராசிக்கு என்ன சனி வருகிறது. அவர்கள் செய்ய வேண்டிய எளிய சனி பரிகாரங்கள் என்ன என்பதை பார்ப்போம்.
ஒவ்வொரு மாதமும் கிரகங்களின் பெயர்ச்சி நடந்து கொண்டுதான் இருக்கின்றது.
ஆனால் அதில் மிக உற்றுநோக்கும், அதன் பலன்களை அறிந்துகொள்ளக் கூடியதாக சனிப்பெயர்ச்சி உள்ளது.
மற்ற கிரகங்களை விட மிக மெதுவாக ஒவ்வொரு ராசிக்கு பெயர்ச்சி ஆகக் கூடிய கிரகம் சனி கிரகம். ஒரு ராசியிலிருந்து மற்றொரு ராசிக்கு நகர இரண்டரை ஆண்டுகள் எடுத்துக்கொள்வார்.
அந்தவகையில்திருக்கணிதபஞ்சாங்கத்தின் படி சனிப்பெயர்ச்சி எதிர்வரும் ஜனவரி 24 ஆம் திகதி நடக்க உள்ளது.

ஏழரை சனி யாருக்கு?
சனிபகவான் ஒருராசியில்சஞ்சரிக்கின்றார் என்றால், அவர் அமரக் கூடிய ராசிக்கும், அதோடு அந்த ராசியின் முன் மற்றும் பின் உள்ள ராசிக்கு ஏழரை சனி என்று பெயர்.
சனிப்பெயர்ச்சியில் சனி பகவான் தனுசு ராசியிலிருந்து மகர ராசிக்கு பெயர்ச்சி ஆகிறார். இதனால் மகர ராசிக்கு ஜென்ம சனியும் (இரண்டாம்நிலை), அதன் முன் உள்ள தனுசு ராசிக்கு பாத சனியும் (மூன்றாம் நிலை), மகர ராசிக்கு பின் உள்ள கும்ப ராசிக்கு முதல் நிலை சனி 21/2 ஆண்டு சனி தொடங்கும். இதற்கு விரய சனி என்று பெயர். கும்ப ராசிக்கு புதிதாக ஏழரை சனி தொடங்க உள்ளது.

பாத சனி – தனுசு
ஜென்ம சனி – மகரம்
விரய சனி – கும்பம்

சனி பாதிப்பிற்கு செய்ய வேண்டிய பரிகாரம்:
சனி பெயர்ச்சியால் மிகவும் பாதிக்கப்பட்டும் ராசியை சேர்ந்த நபர்கள் முதலில் செய்ய வேண்டியது, அவர்கள் செய்த தவறை உணர்ந்து வருந்தி, பாதிக்கப்பட்டவர்களிடம் மன்னிப்பு கேட்பது நல்லது.
அத்தோடுசனிபகவானிடம்இனிஇதுபோன்ற பாவ செயலை செய்ய மாட்டேன் எனக் கூறி தனக்கு நல்லருள் புரிவாயாக என வேண்டிக்கொள்ள வேண்டும். சனிக்கிழமையன்று சனிபகவானை வணங்கி எள் தீபத்தை ஏற்றி வழிபட வேண்டும். அதோடு ஏழரை சனி காலத்தில்நியாயமாகநடந்துகொள்பவர்கள் அந்தளவுக்கு அதிகமாக பாதிக்கப்படுவதில்லை. சனிபாதிப்புகளிலிருந்துவிடுபடநம் முன்னோர்கள் சில எளிய பரிகார முறைகளை கொடுத்துள்ளனர்.
காக்கைக்கு சாதம் எள் மற்றும் நல்லெண்ணெய்கலந்தசாதத்தைகாக்கைக்குவைத்து வணங்குவது நல்லது.
காக்கைக்கு சாதம் வைப்பதால் நம் முன்னோர்களின்ஆசிகிடைப்பதோடு, சனிபகவானின்வாகனம்என்பதால்அவரின்அருளும் கிடைக்கும். ஆதரவற்றவர்களுக்கு உணவு அளித்தல், அவர்களின்சிலஅடிப்படைதேவைகளை நிறைவேற்றுதல் நன்று. எந்த ஒரு பரிகாரத்தை விட நம் வீட்டில் இருக்கும் பெரியோர், மூத்தவர்களை மதித்து நடப்பது மிக முக்கிய பரிகாரம்.
அடிக்கடிசிவன்கோயிலுக்குசென்று வழிபடுதலும், நவகிரகங்களை வழிபட்டு எள் திரி தீபத்தை ஏற்றி வழிபடுதல்நல்லது. சனிஎன்பவர் ஈசனால் நீதியை நிலைநாட்ட நியமிக்கப்பட்ட நீதி அரசன். அவர் மனிதனின் நற்செயலையும், பாவ செயல்களுக்கு ஏற்ப அவர்கள் ராசிக்கு அஷ்டமாத்து சனி, கண்டகசனி, அஷ்டம சனி, விரய சனி, ஜென்ம சனி, பாத சனியாக வரும் போது அதற்கேற்ற பலன்களை கொடுப்பார்.

கடைப்பிடிக்கப்படும் சில சம்பிரதாயங்களும், அதன் பலன்களும்

நடைமுறையில் பல சாஸ்திரங்களும் சம்பிரதாயங்களும் கடைப்பிடிக்கப்படுகின்றன. இவை ஒவ்வொன்றும் நல்ல பலன்களை தரக்கூடியவை என்று நம்பப்படுகின்றது. இவற்றை செய்த உடனே பலனை எதிர்பார்ப்பது தவறு. செய்த செயலுக்கு நிச்சயம் ஒரு நாள் பலன் கிடைக்கும். இந்தப் பகுதியில் நமது வழக்கத்தில் கடைப்பிடிக்கப்படும் சில சம்பிரதாயங்களும், அதன் பலன்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

1. புத்தாடைகளில் மஞ்சள் தடவுதல் :
புத்தாடை அணியும் போது அதன் ஓரங்களில் மஞ்சள் தடவி அணிய வேண்டும். ஏனென்றால் நீங்கள் கடையில் துணியை வாங்கும் முன்னர் வேறு யாராவது அதனை வாங்குவதற்காக போட்டு பார்த்து இருப்பார்கள். அல்லது இந்த ஆடையை நம்மால் வாங்க முடியவில்லையே என்று கூட நினைத்து வருத்தப்பட்டிருப்பார்கள். மஞ்சள் தடவி அணிவதால், தோஷம் நீங்கும். அதுமட்டுமின்றி, புத்தாடையில் மஞ்சள் தடவி அணிந்தால், துணிகள் பெருகும். உங்களுக்கு ஆடை பஞ்சம் வராது.

2. கொடி மரத்தின் தெய்வ சக்தி
கோவில்களில் காணப்படும் கொடி மரத்திற்கு அதீத தெய்வ சக்தி உள்ளது. நாம் சில நிமிடங்களாவது அந்த கொடி மரத்தின் அருகில் நின்று பிராத்தனை செய்தால் நினைத்த காரியங்கள் நிறைவேறும். கோபுர தரிசனமும், கொடிமர தரிசனமும் மிகவும் அவசியம். கொடிமரத்தை புதுப்பிக்கும் போது அதில் நமது பங்கும் சிறியதாவது இருக்க வேண்டும்.
வானுலகில் உலவும் கிரகங்களின் ஆற்றல்களை

தனக்குள் கிரகித்து வைத்திருக்கிறது இந்த கொடி மரம். கொடிமர தரிசனம் செய்தால் நம் பாவங்கள் நீங்கி இறைவனுடைய அருளாசியை பரிபூரணமாக பெறலாம்!

3. தென்திசையை பார்த்து உட்காரலாமா?
தென்திசையை பார்த்தபடி அதிக நேரம் உட்காக்ர கூடாது. அத்திசை யமதர்மராஜாவுக்கு உகந்தது. இறந்தவர்களுக்கு தர்பணம் கொடுக்கும் போது மட்டும்தான் தென்திசையை நோக்கி உட்கார வேண்டும். சுபநிகழ்ச்சி நடக்கும் போதும் தெய்வீக யாகங்கள் செய்யும்போதும் தென்திசையை நோக்கி உட்காரக் கூடாது. எமனின் பார்வை அந்த திசையில் விழுவதால், தெற்கு நோக்கி அமர்ந்தால் உடலில் வசீகரம் இல்லாமல் போகும். ஆனால் தூங்கும் போது கிழக்கு, அல்லது தெற்கு திசையில் தலைவைத்து உறங்கலாம்.

4. தங்கம் சேர..!
அட்சய திருதி அன்று தங்கம் வாங்கினால் மட்டும் தான் தங்கம் சேரும் என்பதில்லை. பரணி, பூரம், பூராடம் போன்ற நட்சத்திரம் வரும் நாட்களில் சுக்கிரன், புதன் ஹோரையில் ஒரு கிராம் தங்கநகை வாங்கினாலும் கூட தங்க நகை அதிகம் வாங்கும் யோகம் வரும். அதேபோல் புதன், வெள்ளி கிழமைகளில் இந்த நட்சத்திரமும் சேர்ந்ததுபோல இருக்கும் நாட்களில் நகை வாங்கினால் உங்களைவிட அதிர்ஷ்டசாலி யாரும் இல்லை.

5. நெல்லிக்காயை தேய்த்து குளித்தல்!
ராஜயோகம் வேண்டும் என்றால் நெல்லிக்கனியை தலையில் தேய்த்து குளிக்க வேண்டும். நெல்லிமரம், ஸ்ரீமகாலஷ்மியின் உள்ளங்கையில் உருவானது. அதனால் நெல்லிவாசம் இருக்கும் இடத்தில் லஷ்மி வாசம் செய்வாள். பெருமாளுக்கு உகந்த தினமான ஏகாதசி அன்று நெல்லிகாயை தேய்து குளித்தால் இராஜயோகம் உங்களை தேடி வரும்.

6. தங்கத்தை உப்பில் வைத்தல்!
புதிதாக நீங்கள் தங்கம் வாங்கியதும் அதனை ஒரு சுத்தமான வெள்ளை துணியில் இட்டு கட்டி, உப்பில் சிறிது நேரம் புதைத்து வைத்து விடுங்கள். இதனால் தங்கத்தின் மீது உள்ள தோஷங்கள் அத்தனையும் நீங்கும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தாவரங்களுக்கும் உணர்ச்சி

வளர்வது, இயற்கைத் தூண்டுதல் பெறுவது ஆகியவற்றைத் தாண்டி தாவரங்கள் வேறு சில வகைகளிலும் இயங்குகின்றன. அதாவது உணர்ச்சிகளை வெளிப்படுத்துகின்றன. இதற்கு ஆங்கிலத்தில் TURGOR MOVEMENT என்று பெயர். தமிழில் வீக்க அசைவு என்று சொல்லலாம்.

இந்த இயக்கத்தை மார்னிங் குளோரி (காக்கட்டான்), மூன்வைன் (நாகனமுக்கோரை) போன்ற மலரும் தாவரங்களில் பார்க்கலாம். அவரைக் குடும்பத் தாவரங்களின் இலைகள், குளோவர் (தீவனப்புல்) போன்றவற்றிலும் இதுபோன்ற இயக்கத்தைக் காணலாம்.

மலர் இதழ்கள், இலைகளில் ஏற்படும் இந்த வீக்கத்தின் அசைவு, தூங்கும் செயல்பாடாகக் கருதப்படுகின்றன. ஏனென்றால், வெளிச்சத்தைப் பொறுத்து இவை மாறுபடுகின்றன. எடுத்துக்காட்டாக, தாமரை மலரின் இதழ்கள், சூரிய உதயத்தின் போது விரியும். ஆனால் இரவில் அந்த இதழ்கள் மெதுவாக மூடி, மொட்டுப் போலாகி விடும். அவரை இலைகள் இரவில் கீழ் நோக்கி நீண்டிருக்கும். பகல் நேரத்தில் கிடைமட்டமாக இருக்கும். இலைகளிலும், மலர் இதழ்களிலும் இதுபோன்ற மாற்றம் ஏற்படுவதற்கு, இலை அல்லது மலர்க் காம்பின் உள்ளே இருக்கும் தண்ணீர் செலுத்தும் அழுத்தமே காரணம் என்று விஞ்ஞானிகள் நம்புகிறார்கள்.

வீனஸ் ஃபிளைட்ராப் எனப்படும் பூச்சியுண்ணும் தாவரமும் இதே வீக்க அசைவு மூலமாகவே தன் இலைகளில் உட்காரும் பூச்சிகளைப் பிடிக்கிறது. ஒவ்வொரு இலையின் ஓரத்திலும் கீல் போன்று வளைந்த நுனிகளும், அதில் தொட்டால் உணரும் உணர்ச்சி கொண்ட தூவிகளும் இருக்கும். ஏதாவது ஒரு பூச்சி அந்தத் தூவியைத் தொட்டவுடன், இலைகள் மூடிக்கொண்டு, பூச்சியை உள்ளே பிடித்துக் கொள்ளும். வீனஸ் தாவரம் அந்தப் பூச்சியைச் செரிமானம் செய்து விடும்.

தொட்டாற்சிணுங்கியும் இது போன்ற வீக்க அசைவு காரணமாகவே மூடிக் கொள்கி றது. இவற்றின் இலையை ஏதாவது தொட்டு விட்டால் உடனே சட்டென்று மூடிக்கொள்ளும். இதற்கு அதி வேக வீக்க அசைவே காரணம்.

மழை

வானத்திலே திருவிழா
வழக்கமான ஒருவிழா

இடியிடிக்கும் மேகங்கள்
இறங்கி வரும் தாளங்கள்

மின்னலொரு நாட்டியம்
மேடை வான மண்டபம்

தூறலொரு தோரணம்
தூய மழை காரணம்

எட்டு திக்கும் காற்றிலே
ஏக வெள்ளம் ஆற்றிலே

தெருவெங்கும் வெள்ளமே
திண்ணையோரம் செல்லுமே

தவளை கூட பாடுமே
தண்ணீரிலே ஆடுமே

அகன்ற வெளி வேடிக்கை
ஆண்டு தோறும் வாடிக்கை

காரைநகர்
கிழவன்காடு கலாமன்றம்
யாழ்கிளை

ஓகன் கலை வகுப்பு அனுமதி

பலரது வேண்டுகோளுக்கு இணங்க நடைபெற்று வரும் ஏனைய கலை வகுப்புகளுடன் ஓகன் கலை வகுப்பும் ஆரம்பமாகவுள்ளதால் ஆர்வமுள்ளவர்கள் பதிவு செய்து கொள்ளவும்.

பதிவாளர்
கிழவன்காடு கலாமன்றம்,
யாழ்கிளை.
077 578 6638

இல.428, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
(வண்ணை சிவன் அருகாமை)

மரண அறிவித்தல்

வையகத்துள்
07
.
05
.
1959

தெய்வத்துள்
18
.
11
.
2019

ஸ்ரீமதி சாயாதேவி ஜீவநாதசர்மா

சரவணை பள்ளம்புலத்தைப் பிறப்பிடமாகவும் நல்லூரடியை வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீமதி சாயாதேவி ஜீவநாதசர்மா நேற்று (18.11.2019) திங்கட்கிழமை அதிகாலை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் பள்ளம்புலம் சரவணை அமரர் சிவஸ்ரீ நா.யோகீஸ்வரக்குருக்கள் மற்றும் சுபதாம்பாள் தம்பதிகளின் மூத்த புதல்வியும் காரைநகர் அமரர்கள் சிவஸ்ரீ வைத்தியநாதசர்மா, சுலோசனாம்மாள் தம்பதிகளின் அன்பு மருமகளும் மாவிட்ட புரம் சிவஸ்ரீ வை.ஜீவநாதசர்மா அவர்களின் அன்பு மனைவியும் ராகினி (லண்டன்), யாழினி (ஆசிரியர்- யா/ சுண்டுக்குளி மகளிர்கல்லூரி) , ஜீவசௌமியா (கனடா), ஜீவசரண்யா ஆகியோரின் பாசமிகு தாயாரும் உ.அனந்தமூர்த்திசர்மா (லண்டன்), சிவஸ்ரீ சோ. கணேசராஜக்குருக்கள் B.A (அரியாலை), கேசவன் (கனடா), ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஜோசிகா, ஜோஸ்னா, தேஜஸ்வினி, அபிக்ஷனா, அக்ஷரசர்மா, ஆயுஷ்யா, ஆரத்யா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் கேதீஸ்வரசர்மா, ஞானேஸ்வரக்குருக்கள், நித்தியானந்தினி, அமரர் பிரபாகரேஸ்வரக்குருக்கள் மற்றும் ரஞ்சிதக்குருக்கள், ஜெகதீஸ்வரக்குருக்கள், அமரர் கிருஸ்ணராஜசர்மா, மற்றும் சுபாஸ்கரக்குருக்கள் ஆகியோரின் சகோதரியும் தனலட்சுமி, கலாராணி,அமரர் கணேஷராஜக்குருக்கள் மற்றும் நாகேஸ்வரி (பாப்பா),ரமாராணி, சத்தியதாரணி, வைதேகி ஆகியோரின் மைத்துனியும் சுபஸ்திகா - சாந்தரூபசர்மா, சுதாத்மிகா, ரமாஜிதசர்மா, லஷ்விகா ஆகியோரின் அன்பு அத்தையு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.11.2019) புதன்கிழமை பி.ப 3.00 மணியளவில் இல.559/A, நாவலர்வீதி, நல்லூர் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

077 306 8996, 077 315 1425

வரைந்து பழகுவோம்



விடைகாண்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்மொழிகள்

- ஒழுக்கம் உண்டாக்காத இலக்கியக் கல்வியால் ஒருவித உபயோகமும் கிடையாது - *காந்திஜி*
- இளமையில் கல்வியைப் புறக்கணித்தவன் இறந்த காலத்தை இழந்தவன்; எதிர்கால வாழ்விலும் இறந்தவன்- *யூரிபிடிஸ்*
- கற்காமல் இருப்பதைவிட பிறக்காமல் இருப்பதே நல்லது; ஏனெனில் அறியாமைதான் தீவினையின் மூலவேர்- *பிளேட்டோ*
- கல்வி ஒரு மூட்டை நூல்களை வாசிப்பது அன்று; அடக்கம், ஒழுங்கு, அறம், நீதி இவற்றின் முன்மாதிரி யாகும் - *எட்மண்ட்பர்க்*
- கல்வி என்பது தெரியாததைத் தெரியச் செய்வதன்று: ஒழுக்கத்தை ஒழுகச் செய்வதும் இன்பம் அளிப்பதுமாகும் - *ரஸ்கின்*
- வாழ்க்கை அனுபவ மில்லாத எவரும் கல்வி கற்றவராக முடியாது! - *பெர்னார்ட்ஷா*

மரண அறிவித்தல்



CS29405(16/17)

றெஜிஸ் L.I கனகசுந்தரி

(முன்னாள் ஆசிரியர், புனித கென்றியரசர் கல்லூரி, இளவாலை,
முன்னாள் அதிபர், புனித பிரான்சிஸ் கல்லூரி, நைஜீரியா)

கரம்பனைப் பிறப்பிடமாகவும், இல.71, வேம்படி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட றெஜிஸ் கனகசுந்தரி 16.11.2019 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசீர்வாதம் மனுவல் கனகசுந்தரி எலிசம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான M.A. ஜோசவ் சிரோண்மணி தம்பதியினரின் மருமகனும், பெயாற்றிஸ் நவமலரின் அருமைக் கணவரும் தமாரா, மனுவல், மார்க்கஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான கெலன், றோசேலியா, சிசிலியா மற்றும் யூலியா, மரிஸ்ரெலா, டேவிட், ஒலிவெற், மார்த்தா, டொறத்தி, டோமினிக் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான L.V. அன்ரனி, அலெக்சாண்டர், ஜெயநாதன், வாமதேவன், Dr. நிக்கொலஸ்பிள்ளை மற்றும் Dr. செபஸ்ரியாம்பிள்ளை, எட்மன்ட், அரசநாயகி, யூலி ஆகியோரின் அன்பு மைத்துனரும், நிக்கொலஸ், டெறெக், றொபி, மொனிக், செபஸ்ரியன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (20.11.2019) புதன்கிழமை முற்பகல் 10 மணியிலிருந்து பிற்பகல் 2 மணிவரை இல.127, சென் பற்றிக்ஸ் வீதியிலுள்ள அவரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 2 மணிக்கு பூதவுடல் இல.71, வேம்படி வீதியிலுள்ள அன்னாரின் பூர்வீக இல்லத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கிருந்து பிற்பகல் 3 மணிக்கு யாழ் புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலியின் பின்னர் புனித மரியாள் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.127, சென் பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

முதலாம் ஆண்டு நினைவேந்தல்

அமரர்
காங்கேசு சிவராசா

அன்னை மடியில்
18.12.1954

ஆண்டவன் அடியில்
29.11.2018

தேய்பிறை சப்தமி திதி

ஆண்டொன்று ஆனதுவோ
ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்
மாறாத நினைவுகளால்
மனம் வெந்து மாய்கின்றோம் - அப்பா
அழகிய உங்கள் சிரித்த முகம்
என்றும் எங்கள் நெஞ்சங்களில்
குடியிருக்கும் அன்பான அப்பாவே
உங்கள் ஆத்மா இறைவனின்
பாதக் கமலங்களை சென்றடைய
எந்நாளும் வேண்டுகிறோம்.

உடையார் லேன்,
பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு.

குடும்பத்தினர்

மரண அறிவித்தல்

சித்தர் கந்தையா

புன்னாலைக்கட்டுவன் தெற்கை பிறப்பிடமாகவும், கைதடி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த சித்தர் கந்தையா கடந்த (14.11.2019) வியாழக்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சித்தர்-கைலாத்தை தம்பதிகளின் அன்பு புதல்வரும் காலஞ்சென்றவர்களான வேலு -நாச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கதிராசிப்பிள்ளையின் அன்புக் கணவரும் சண்முகநாதன் (ஜேர்மனி), தவமணி (கனடா), செல்வரத்தினம் (லண்டன்), மனோன்மணி (சுவிஸ்), புஸ்பமலர், குணரத்தினம் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பரமசிவம், இந்திராணி, வதனா, சந்திரன், ஜெயா, விநாயகமூர்த்தி ஆகியோரின் அன்பு மாமனாரும் தீபா, றூபா, சீபா, மௌனிகா, பௌசிகா, தமிழினி, தாருஜன், மதுசன், மிதுனன், மீனுஜன், அங்கயன், அங்கயா, கீர்த்தீபன், காலஞ்சென்ற சஞ்சீபன் ஆகியோரின் அன்புப் பேரனும், கௌசிகா, ஜெசிலின் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.11.2019) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கைதடி வடக்கு தச்சன்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.



தோற்றம்	மறைவு
10.07.1926	14.11.2019

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி வடக்கு
077 332 9168

தகவல்:-
குடும்பத்தினர்

மரண அறிவித்தல்

பஞ்சலிங்கம் ஜெயராணி

கதிரிப்பாய், அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் நாவலர் வீதி, ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட பஞ்சலிங்கம் ஜெயராணி 17.11.2019 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் சின்னத்தம்பி பஞ்சலிங்கத்தின் (முச்சக்கர வண்டி திருத்துநரும், உரிமையாளரும் - ஆரியகுளம் சந்தி) பாசமிகு மனைவியும் துஷாந்தினி, துஷாந்தன் (பெரியாம்பி), துஷிலன் (குட்டி), துஷிகரன் (சின்னா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாவலர் வீதி, ஆனைப்பந்தியில் உள்ள அவரின் இல்லத்தில் இன்று (19.11.2019) செவ்வாய்க்கிழமை நடைபெற்று, முற்பகல் 10 மணியளவில் பூதவுடல் தனக்கிரியைக் காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
(CS 29395) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரண அறிவித்தல்கள்

பிறப்பு
11 . 07 . 1935

இறப்பு
18 . 11 . 2019

செல்லத்துரை இரத்தினம்

வன்னியசிங்கம் வீதி, தாவடி வடக்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை இரத்தினம் 18.11.2019 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தம்பையா - நாகமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும் விநாயகமூர்த்தி, பாலசுப்பிரமணியம், காலஞ்சென்ற கணேசலிங்கம் மற்றும் கமலாம்பிகை, மகாலட்சுமி, இந்துமதி, காந்திமதி, செந்தில்மதி, செந்தில் செல்வி ஆகியோரின் அன்புத் தாயாரும் அகிலாண்டேஸ்வரி, வசந்தினி, சின்னராசா, காலஞ் சென்ற செல்வராசா மற்றும் கணேஸ்வரன், பாலசுப்பிரமணியம், சிவகுருநாதன், ஸ்ரீதரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், குணரத்தினம், பூபதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் நடராஜா, சிவசுப்பிரமணியம், தியாகராஜா ஆகியோரின் மைத்துனியும் மற்றும் சஞ்சீபன், றஜீபன், கோசிலா, அனுஜீபன், சுஜீபன், சுபஜீபன், சிவசுதன், சுதர்சனா, பிரதீபன், சிவரூபன், நிதேஷன், கோபிநாத், சியாமளன், சுரேசனா, தரிசியா, சங்கீதன், லோகப்பிரியன், சிந்தூரன், சிவமதி, தனுஷன், தனுசிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் லவிஷனின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2019) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வன்னியசிங்கம் வீதி,
தாவடி வடக்கு, கொக்குவில். (CS 29401) (14.17)

தகவல் :
குடும்பத்தினர்.

077 2967723/071 9435853/ 077 4542816

மரண அறிவித்தல்கள்

பிறப்பு
10 . 11 . 1953

இறப்பு
18 . 11 . 2019

செல்லத்துரை மகாலிங்கம்

(ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்)

குப்பிளானை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை மகாலிங்கம் நேற்று (18.11.2019) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்றோஸ் அவர்களின் அன்புக்கணவரும் காலஞ் சென்றவர்களான செல்லத்துரை பார்க்கியம் தம்பதிகளின் புதல்வரும் காலஞ் சென்றவர்களான அருளப்பு பார்க்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், பூபாலசிங்கம் விஷயலட்சுமியின் சகோதரரும் காலஞ்சென்ற பேரின்பநாயகம் மற்றும் பிரகாசம், செல்வராணி, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் பிள்ளைகளான மஞ்சு, ராசி, ரஜன, மயூரன் ஆகியோரின் அன்புத்தந்தையும் அருண், ரவி, சதாத், சுபா ஆகியோரின் மாமனாரும் லிவின்ஸ்ரன், மதுசிகா, அபிசன், அரோசன், டனுசா, டன்சிகா, மார்வின், ரவின், செர்வின், அர்வின், அஸ்ரா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2019) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் குப்பிளான் தெற்கு காடாகடம்பி மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 667 9793

தகவல் : குடும்பத்தினர்

தோற்றம்
27 ..... 08 1935

மறைவு
18 ..... 11 2019

செல்வி அன்னபூரணி இரத்தினம் (அனாஷ்)

(முன்னாள் உப அதிபர் – யா/ இந்து மகளிர் கல்லூரி)

ரங்கூனை பிறப்பிடமாகவும், இல.**65,** வைமன் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி அன்னபூரணி இரத்தினம் நேற்று **(18.11.2019)** திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சி.என். இரத்தினம்- லீலாவதி தம்பதியினரின் கனிஷ்ட புதல்வியும், R.K.பிள்ளை (டொபி), விசாலாட்சி (பெற்றி) மற்றும் காலஞ் சென்றவர்களான கதிரவேலு (ஜெரல்ட்), கனகசபாபதி (பாப்பா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், இந்திரமதி (இந்திரா), காலஞ்சென்ற குகதாசன் மற்றும் யோகாம்பிகை (அம்பிகா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் சிவப்பிரபா- ஈஸா, பிரியதர்சினி - ரமேஸ், கார்த்திகேயன், அஜிதா, தயாபரி - கிருஸ்ணாகரன் ஆகியோரின் அன்பு மாமியும், ஜோதி, ஜெகான், அஞ்சலி, அஸ்வினி, ஹசிக்கா, றிசிக்கா, பவீசன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் **21.11.2019** வியாழக்கிழமை காலை **08**மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் **10** மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

CS29402(16/17)

இல.67, வைமன் வீதி,
நல்லூர்.

தகவல்: குடும்பத்தினர்
077 433 0391



பிறப்பு
27 . 12 . 1960

இறப்பு
16 . 11 . 2019

நடராஜா ஜெகானந்தன்

யாழ். நல்லூர் செட்டித்தெருவைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto வை வதிவிடமாகவும் கொண்ட நடராஜா ஜெகானந்தன் கடந்த (16-11-2019) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் பொன்னுப்பிள்ளை தம்பதிகளினதும் நன்னித்தம்பி சிவகாமி அம்மா (சாத்திரம்மா) தம்பதிகளினதும் அன்புப் பேரனும், காலஞ் சென்றவர்களான நடராஜா பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், யாழ். உரும் பிராயைச் சேர்ந்த குமாரசாமி, காலஞ்சென்ற இராஜேஸ்வரி(பேபி) தம்பதிகளின் அன்பு மருமகனும், வித்தகம் அவர்களின் ஆருயிர்க் கணவரும், சங்கீதா, ஜெனார்த்திகன், ரவித்தகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், நித்தியானந்தன் (தபாலகம்-யாழ்ப்பாணம்) அவர்களின் அன்புத் தம்பியும் பத்மராணி அவர்களின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற வர்களான இராஜசிங்கம் மற்றும் தங்கரட்ணம் இராஜேஸ்வரி ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம் பாக்கியம் தம்பதிகளின் மருமகனும் யதுர்ஷன், துஷாருஷன், சிவானுஜன் ஆகியோரின் சிறிய தந்தையும், ஸ்ரீ வித்தியாவின் ஒன்றுவிட்ட அண்ணாவும், பிரதீஸ், பிரிந்தன், ஆரணி ஆகியோரின் அன்பு மாமனும், பிரதீபன், ரூபி, கஸ்தூரி, ராஜ்குமார், கோசலை ஆகியோரின் அன்பு மைத்துனரும், யோகதாசன், கலைச் செல்வன், கஸ்தூரி, அஸ்மீன் ஆகியோரின் அன்புச் சகலனும், ஜெனனி, நிலாந், அஸ்மிதா, திருமுருகன் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், ரிஷி, அகில், ராஜேஸ்வரன் ஆகியோரின் மாமாவும், சிராஜ், அமான், அடித் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.11.2019) புதன்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
இராஜேஸ்வரி (சிறியதாய்),
நித்தியானந்தன் (தம்பி)

30/32, செட்டித்தெரு, நல்லூர்,
யாழ்ப்பாணம். (CS29403) (15.17)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

19 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

சிதம்பரப்பிள்ளை செல்வரெட்ணம்

திதி :- சப்தமி

அன்னை மடியில்
11.11.1949

ஆண்டவன் அடியில்
17.11.2000

வருடங்கள் பத்தொன்பது ஆனாலும் உங்கள் நினைவு எங்கள் இதயத்தை விட்டு மறையாது நீங்கள் இல்லாமல் எங்கள் வாழ்வு நீர்க்குமிழி ஆனதையா! நாள்தோறும் கண்ணீரில் மூழ்கின்றோம் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி!!!

20A ஈச்சமோட்டை
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

கண்ணீருடன்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், மச்சான்.

விற்பனை

147 - 5823 வெல்டி
சிடி 125 ஜ மோட்டார்
சைக்கிள் விற்பனைக்கு உண்டு.
(VZ 5371) 077 543 0731

கணக்காளர் தேவை

கிளிநொச்சியில் இயங்கும்
நிறுவனத்திற்கு கணினி
அறிவுள்ள பிரதான கணக்காளர்
(ஆண்) தேவை. (CS 29400)

0772105286, 0777660396

பெயர்மாற்றம்

வெள்ளாம்போக்கட்டி கொடிகாமத்தைச் சேர்ந்த **பார்க்கவி** ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து **கெவின்ராஜ்** எனப் பெயர்மாற்றி இனிவரும் காலங்களில் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

கெவின்ராஜ்.

(AC 4251)(4.17)

11 ஆம் ஆண்டு நினைவு

மகேந்திரன் கௌரி

அன்னை மடியில் 02.08.1989

ஆண்டவன் அடியில் 19.11.2008

பாரினிலே இன்று நீ பிரிந்து
பதினொரு ஆண்டுகள்
ஆனதம்மா
தாங்க முடியவில்லை
உந்தன் பிரிவை
முகத்திலே சிரிப்புதனை
உதிர்த்துவிட்டு
முத்தான கதைகளும்
உன் குறும்புத் தனமும்
காண எம் விழிகள்
ஏங்குதம்மா

விடிவெள்ளி வீதி,
வேம்படி, உடுத்துறை வடக்கு,
ஆழியவளை.

குடும்பத்தினர்.
தாய்,தந்தை, சகோதரிகள்,
மைத்துனன், பெறாமகன்,
பெறாமகள்.

புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு.

பகிரங்க ஏல அறிவித்தல் - 2020

கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்ட நிலையங்களை 01.01.2020 இலிருந்து 31.12.2020 வரையான காலப்பகுதிக்கு நடாத்துவதற்காக குத்தகைக்கேள்விகள் கீழ் காட்டப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

பகிரங்க ஏலம் :- 2019.11.27(புதன்கிழமை), மு.ப. 10.30 மணிக்கு.

பகிரங்க ஏல இடம் :- புதுக்குடியிருப்பு பிரதேச சபை தலைமையலுவலகம், புதுக்குடியிருப்பு.

இல	குத்தகை வகை	மீளளிக்ககூடிய கேள்வி வைப்புப்பணம் (NBT,VAT நீங்கலாக)	ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை (NBT,VAT நீங்கலாக)
புதுக்குடியிருப்பு உப அலுவலகம்.			
01	உடையார்கட்டு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை	5,500.00	513,225.00
02	உடையார்கட்டு பொதுச்சந்தை கோழியிறைச்சிக்கடை	2,000.00	172,000.00
03	விசுவமடு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை	6,000.00	575,000.00
04	விசுவமடு பொதுச்சந்தை கோழியிறைச்சிக்கடை	7,000.00	665,000.00
05	இரணைப்பாலை மாட்டிறைச்சிக்கடை	3,000.00	270,000.00
06	மந்துவில் பொதுச்சந்தை	1,500.00	101,101.82
ஒட்டுசுட்டான் உப அலுவலகம்.			
01	கற்சிலைமடு பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக)	1,500.00	91,170.00
02	கற்சிலைமடு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை	1,500.00	100,350.00
03	முத்துஐயன்கட்டு இடதுகரை பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை	1,000.00	50,850.00
04	ஒட்டுசுட்டான் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை	2,000.00	153,000.00
05	ஒட்டுசுட்டான் பொதுச்சந்தை கோழியிறைச்சிக்கடை	4,500.00	422,500.00
06	கற்சிலைமடு கோழியிறைச்சிக்கடை	3,000.00	255,500.00
07	ஒட்டுசுட்டான் ஆட்டிறைச்சிக்கடை	1,000.00	21,375.00
08	ஒட்டுசுட்டான் கருவாட்டுக்கடை	1,000.00	5,643.00
ஒலுமடு உப அலுவலகம்.			
01	திருமுறிகண்டி கட்டண கழிப்பறை	1,000.00	86,000.00
02	மாங்குளம் மாட்டிறைச்சிகடை	1,000.00	55,791.00
03	மாங்குளம் ஆட்டிறைச்சிக்கடை	1,000.00	21,375.00
04	மாங்குளம் கருவாட்டுக்கடை	1,000.00	5,658.00

நிபந்தனைகள்.

1. பகிரங்க ஏலத்தில் பங்குபெற்ற விரும்புவோர் வடக்கு மாகாண எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தினைக்கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்பத்துடன் தேசிய அடையாள அட்டையின் பிரதி, தாம் வதியும் கிராம சேவையாளரிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட வதிவிடத்தின் வதிவிட சான்றிதழ் ஆகியவற்றினை சமர்ப்பித்தல் வேண்டும்.
2. பகிரங்க ஏலத்தில் பங்குபற்றுபவர்கள் 2019..11.19ஆம் திகதி தொடக்கம் 2019.11.26 ஆம் திகதிமு.ப10.00 மணிக்கு முன்பு (அலுவலக நேரத்தில் பி.ப2.30 மணிக்குள்) தங்கள் ஆவணங்களையும், மீளளிக்கூடிய வைப்புப் பணத்தினையும் செலுத்தி பதிவினை மேற்கொள்ளல் வேண்டும்.
3. எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்குபூரண அதிகாரமுண்டு. ஏற்றுக் கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்பட மாட்டாது. சித்திகர கேள்விதாரர் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை 2019.11.29 ஆம் திகதி மு.ப 11.45 மணிக்கு முன்னர் குத்தகை வைப்பாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தமொன்றினை செய்து கொள்ள வேண்டும். முதலாம் சித்திதாரர் 1/3 பகுதியை செலுத்த தவறினால் அடுத்த நிலை சித்திதாரர்கள் தங்கள் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை 2019.12.02ஆம் திகதி மு.ப 11.45 மணிக்கு முன்னர் குத்தகை வைப்பாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தமொன்றினை செய்து கொள்ளலாம். மிகுதித் தொகையினை 6 சமபங்குப் படி தை தொடக்கம் ஆனி வரையான காலப்பகுதிக்குள் அம் மாதம் 31ஆம் திகதிக்கு முன் னைய வேலைநாட்களில் செலுத்த வேண்டும். தவறுமிடத்து மாதக் கட்டணத் தொகையின் 10 வீதம் தண்டமும் மேலதிகமாக அற விடப்படும்.
4. கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை 2019.10.01 ஆம் திகதிய உதயன் பத்திரிகையின் 02ஆம் பக்கத்திலும், பிரதேச சபையின் தலைமையலுவலத்திலும் மற்றும் உபஅலுவலகங்களிலும் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

திரு.செ.பிறேமகாந், தலைவர்,
பிராந்திய பெறுகைக் குழு, புதுக்குடியிருப்பு பிரதேசசபை,
புதுக்குடியிருப்பு. 2019.11.19.

(C 11705)

மரண அறிவித்தல்கள்

தோற்றம்
15 ... 05 ... 1931

மறைவு
18 ... 11 ... 2019

திருமதி தவமணி (கட்டியம்மா) நல்லதம்பி

ஊரிக்காட்டினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணி (கட்டியம்மா) நல்லதம்பி நேற்று (18.11.2019) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா நல்லதம்பியின் (பாலர்) அன்பு மனைவியும். நந்தினி. நளாயினி. நளினி (லண்டன்). நவஞானவேல் (ராஜன் - கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும். ஜெயசீலன். அருந்தவராசா. அம்பிகைபாலன் (லண்டன்). கவிதா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும். கனகராஜா ருக்மணி. அருட்பிரகாசம் தங்கரட்ணம். சதாசிவம் தங்கலட்சுமி (நீலா). நடராஜா மகேந்திரராணி. ஞானசம்பந்தப்பிள்ளை பத்மாவதி. சிவக்கொழுந்து பரமசிவன் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2019) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரிக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

077 081 4874



நாகமுத்து கந்தராசா (சிறி)

மாதகலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து கந்தராசா (சிறி) 18.11.2019 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - இராசம்மா தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான நடராசா - நேசம்மா தம்பதிகளின் மருமகனும் சறோஜினிதேவியின் அன்புக் கணவரும் கேசவன் (கனடா). கௌசல்யா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நாகேஸ்வரியின் (கனடா) அன்புச் சகோதரனும் சண்முக நாதனின் (கனடா) மைத்துனரும் சிவகுமார் (கனடா). மதுஷா(கனடா) ஆகியோரின் மாமனாரும் சத்தியமூர்த்தி (கனடா). காலஞ்சென்ற ஜெயவதனி மற்றும் ஜெயசுதா(கனடா) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற மல்லிகாதேவி மற்றும் மலர் ஆகியோரின் மைத்துனரும் எல்லாளன். தமிழினி. அன்பரசி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2019) செவ்வாய்க் கிழமை காலை 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மாதகல் போதி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(CS 29393)(14.17)

தகவல் :
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்பனைக்கு
கோழிக்குஞ்சுகள்
(ஒருமாத கலப்பு இனம்)
விற்பனைக்குண்டு.
077 212 2154
(CS 29399(11.17)

மரத்தின் அவசியம்

ஒரு ஊரில் ஒரு பெரிய மாமரம் இருந்தது. ஒரு சிறுவன் அந்த மரத்தைச் சுற்றி விளையாடுவது வழக்கம். அந்தச்சிறுவன் பள்ளி செல்லத் தொடங்கினான். விடுமுறையில் ஒருநாள் அம்மரத்தினிடம் வந்தான்.

மாமரம் அவனை தன்னிடம் விளையாட அழைத்தது. "நான் பாடசாலை செல்ல ஆரம்பித்துவிட்டேன். அதனால் உன்னுடன் விளையாட முடியாது. எனக்கு இப்போது கிரிக்கெட் மட்டை வாங்கவேண்டும்" என்றான் அவன்.

உடனே மரம்.."என்னிடம் உள்ள பழங்களை பறித்து விற்று நீ கிரிக்கெட் மட்டை வாங்கிக்கொள்" என்றது.

'சரி' என அவன் எல்லாப் பழங்களையும் பறித்துச் சென்றான். பின் அவன் மரத்தையே மறந்துவிட்டான். அவன் பெரிய மனிதனாக வளர்ந்தான் .பின் ஒருநாள் மரத்திடம் வந்தான்,

மரம் அவனை விளையாட அழைத்தது. "எனக்கு என் குடும்பத்தைப் பார்க்கவே நேரமில்லை. எனக்கு வீடு ஒன்று வேண்டும். அதற்கு உன்னால் உதவ முடியுமா" என்றான்.

மரம் தன் கிளைகளை உடைத்து இவற்றை வீட்டுக்கு உபயோகப்படுத்திக்கொள் என்றது. அவனும் பல மரக் கிளைகளை எடுத்து சென்றான்.

மீண்டும் பல நாள் அவன் மரத்திடம் வரவில்லை. வயது முதிர்ந்து கிழவனாக ஒரு நாள் மரத்திடம் வந்தான். மகிழ்ந்த மரம் "இப்போது முன் போல் என்னிடம் விளையாடு" என்றது.

எனக்கு வயதாகிவிட்டது .என்னால் விளையாட முடியாது. ஆனால் எனக்கு உட்கார்ந்து இளைப்பாற ஒரு சாய்வு நாற்காலி வேண்டும் என்றான்.

மரமும் தன் கிளைகளில் ஒன்றை அவனிடம் கொடுத்து நாற்காலி செய்து கொள்ளச் சொன்னது.

சிறிது காலம் கழித்து அவன் மீண்டும் வந்தான். இப்போது மரம் "எனக்கும் வயதாகி விட்டது. என்னிடம் இப்போது பழங்கள் கூடக் கிடையாது" என்றது.

"என் வாழ் நாள் முழுவதும் உதவினாய் நீ...ஆனால் ,உன்னைப் பற்றி இது வரை நான் நினைத்துக் கூடப் பார்க்க வில்லையே" என்று வருந்தினான் அவன்.

மரமோ "அதற்காக வருத்தப்படாதே . யாரோ நட்ட செடியான நான் வளர்ந்து உனக்கு பலனளித்தேன். நீ ஒரு செடியை நடு அது மரமாகி வேறு யாருக் கேனும் பயனளிக்கும். எங்கள் வம்சமும் வளரும்" என்றது.

நாமும் எம்மால் முடிந்தால் நம் வீடுகளில் குறைந்தது ஒரு மரத்தையாவது வளர்க்க வேண்டும். மரத்தினால் சுத்தமான காற்று கிடைக்கிறது. மழை வர மரங்களும் காரணமாக அமைகின்றன என்பதை நாம் உணர வேண்டும்.

சேவை
நீங்கள் அடகுவைத்த நகைகளை மீட்க முடியாத நிலையில் நாங்கள் அதனைத் திருப்பி அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும்.
தொடர்புகளுக்கு
077 206 9096
CS4184 (15.17)

நன்றி நவிலலும் அந்தியேட்டி ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



கடந்த 03.11.2019 அன்று சிவபதமடைந்த கோண்டாவில் அதிபதீஸ்வரன் கோயிலின் முன்னாள் பரிபாலகர்
வேலுப்பிள்ளை தங்கவடிவேல்
அவர்கள் காலமான செய்திகேட்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், எங்களுக்கு உறுதுணையாயிருந்து உதவிய அன்பு உள்ளங்கள் அனைவருக்கும் எங்களது இதயம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் நாளை (20.11.2019) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் மற்றும் 21.11.2019 வியாழக்கிழமை வேதாந்தமடத்தில் (இல.18. குமாரசாமி வீதி. கந்தர்மடம். யாழ்ப்பாணம்) நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.
தனித்தனி அழைப்புக் கொடுக்க முடியாமைக்கு வருந்துகின்றோம்.
அம்மன் கோவிலடி,
புகையிரத நிலையவீதி, கோண்டாவில். பெறாமக்கள்.
(CS29399(11.17)

மணிவிழா வாழ்த்து

யா/பாஷையூர் சென். அன்ரனிஸ் றோ.க.பெண்கள் வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றி இன்று ஓய்வுபெறும்
திருமதி செலஸ்ரினா கயசிந் அருள்நேசன்
(SLTS - I, Spl.Trd Ho.Ec)

அவர்களது சேவையைப் பாராட்டுவதுடன் ஓய்வுகாலம் சீரும் சிறப்புமாக அமைய வாழ்த்துகின்றோம்.

சேவைக்கால விவரம்:-
யா/ஊர்காவற்றுறை புனித மரியாள் றோ.க. மகளிர் வித். - 9 வருடங்கள்.
யா/ கரம்பொன் சிறிய புஸ்பம் மகளிர் வித்தியாலயம் - 3 வருடங்கள்.
யா/கன்னியர் மடம் மகா வித்தியாலயம் - 1 வருடம்
யா/ பாஷையூர் சென். அன்ரனிஸ் றோ.க பெண்கள் வித்.- 18 வருடங்கள்.

வாழ்த்துவோர்: ஆசிரியர் நலன்புரிச்சங்கம், யா/பாஷையூர் சென். அன்ரனிஸ் றோ.க. பெண்கள் வித்தியாலயம். பாஷையூர்.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
இராஜ்குமார் விஜெய்
(மானிப்பாய்)

அன்னையின் மடியில்
18 - 09 - 1987
ஆண்டவன் அடியில்
29 - 11 - 2018
திதி: 19.11.2019

உன் பிரிவால் துயருறும்
அன்பு அப்பா. அம்மா. அண்ணா. உற்றார். உறவினர். நண்பர்கள்.

எங்கள் அன்பு மகனே விஜெய்
வாழ்ந்த காலங்களை வசந்தமாக்கிச் சென்றுவிட்டாய்
சென்ற இடம் தெரியவில்லை
செவிதனில் உன்குரல்தான் ஒலிக்கின்றது
எங்கள் வீட்டு முற்றத்தில் உன் காலடிச்
சுவடுகளைத் தேடுகின்றோம்
நீ நடந்த பாதை எல்லாம் வெறுமையாகிப் போனதுவே
நீ இல்லாத வீடும் பொலிவிழந்து போனதுவே
ஒரு கூட்டுக் கிளியாக நாம் இருந்தோம் இன்று
கூட்டை விட்டுச் சென்று விட்டாய்
பாசத் தம்பி எங்கே என்று உன் அன்பு அண்ணன்
ஏங்கித் தவிக்கின்றான்
ஊரில் உள்ளோர்க்கெல்லாம் உனைத் தெரியும்
இன்று நீ ஊரில் இல்லை
கள்ளம் கபடம் இல்லாப் பிள்ளை நீ
வஞ்சகம் சூதும் உனக்கில்லை உன் அன்பும்
பாசமும் புன்னகை பூத்த முகமும் எம்மைத்
தேம்பி அழவைக்கின்றது
நடை பயின்ற நாள் முதலாய் எங்கள் கையிடித்து
நடந்து வந்தாய் இன்று கையை விட்டு
எங்கு சென்றாய் மகனே
விஜெய் விஜெய் என்று ஆசை ஆசையாய் நாம்
யாரை அழைப்போம் இனி ஒரு விஜெயை
எங்கு காண்போம்
உன் நினைவுகள் எல்லாவற்றையும் விட்டுச்
சென்று விட்டாய் ஆறாத் துயர் எம்மை
அனலாய் சுடுகின்றதே
இனி ஒரு பிறப்பு உனக்கு வேண்டாம் மகனே
உன் ஆத்மா பிறப்பில்லாப் பெருவாழ்வு வாழ எல்லாம்வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

மரண அறிவித்தல்

திருமதி செ. கிறிஸ்ரீன் மரியதயாளசீலி (யாழினி)

" உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார் (யோவான் 11/25)

தாயின் மடியில் 11.09.1985 — இறைபதம் 18.11.2019

நாணாட்டான் பெரிய கட்டைக்காட்டைப் பிறப்பிடமாகக்கொண்ட திருமதி கிறிஸ்ரீன் மரிய தயாளசீலி (யாழினி) நேற்று (18.11.2019) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் திரு.திருமதி பத்திநாதா - சரோஜா தம்பதிகளின் பாசமிகு மகளும் செபமாலை றெவன் அவர்களின் அன்பு மனைவியும் மரினோ அன்ரனி (மதுசன்). மரின் பிரசன்சியா (மதுசா) ஆகியோரின் அன்புத்தாயாரும் அருட்சகோதரி அருள் (திருக்குடும்ப கன்னியர் சபை). பேபி ஆகியோரின் பெறாமகளும் அருட் பிரகாசம். காலஞ்சென்ற சூசைரெட்ணம் ஆகியோரின் மருமகளும் அருட்தந்தை நியூட்டனின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி கட்டைக்காடு புனித செபஸ்தியார் ஆலயத்தில் இன்று 19.11.2019 செவ்வாய்க்கிழமை பி.ப 3.30 மணியளவில் ஒப்புக்கொடுக்கப்பட்டு கட்டைக்காடு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல் : குடும்பத்தினர்

மரண அறிவித்தல்

தர்மலிங்கம் திருமகள்

இனுவில் கிழக்கு வங்கியடியைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் Lausanne ஐ வதிவிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் திருமகள் அவர்கள் 15.11.2019 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - பொன்னம்மா தம்பதியரின் இளைய மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும் பாக்கியநாதன், லோகநாதன் (துரை), கலைவாணி (லண்டன்), சத்தியபாமா, ஞானபண்டிதன் ஆகியோரின் அன்புத் தாயும் வினோதினி, கண்ணன், தவபாலன், சோபனா ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான சிவசம்பு, சரவணமுத்து மற்றும் பொன்னம்பலம், சிவஞ்ஞானவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் விதுசன், விதுனா, அப்சரா, பிரவீண், சேஸ்திரஞ்ஞன், சங்கவை, ஆராதனா, அட்சயன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.11.2019 புதன்கிழமை சுவிஸில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
குடும்பத்தினர்

(CS 29397)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ.தே.க. தீவிர அபிமானி மாரடைப்பால் உயிரிழப்பு

கொழும்பு, நவ.19

மாத்தளையில் ஒருவர் மாரடைப்பால் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் ஐக்கிய தேசியக் கட்சியின் தீவிர ஆதரவாளர் என்றும், தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியடைந்தமை, கட்சிப் பதவியில் இருந்து சஜித் பிரேமதாச விலகியமை என்பவற்றால் பெரிதும் அதிர்ச்சியடைந்திருந்தார் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் மாத்தளைப் பிரதேச சபை உறுப்பினர் நுவன் ரணசிங்க தெரிவித்தார். (எ)

தொடர்ச்சிகள்...

புதிய...

கப் பொறுப்பேற்பார்.

அவரது செயலாளராக பி.பி.ஜெயசுந்தர நியமிக்கப்படுவார் என்று தெரியவருகின்றது.

பி.பி.ஜெயசுந்தர முன்னர் நிதியமைச்சின் செயலாளராக் கடமையாற்றியிருந்தார். 2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் பின்னர் அவர் சிங்கப்பூர் சென்றிருந்தார்.

தற்போது அவர் அரச தலைவரின் செயலாளராக நியமிக்கப்படுவார் என்று தகவல் வெளியாகியுள்ளது. (எ)

திருப்பி...

எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா திருப்பி அனுப்பப்பட்டார் என்று தெற்கு இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அரச தலைவர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற கோத்தபாய ராஜபக்ச நேற்று அரச தலைவராகப் பதவியேற்றார். இந்த நிகழ்வு அநுராதபுரத்தில் நடைபெற்றது.

அந்த நிகழ்வில் கலந்து கொள்வதற்காக எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா சென்றிருந்தார் என்றும், எனினும் அவர் திருப்பி அனுப்பப்பட்டார் என்றும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளதுடன், ஒளிப்படம் ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

அதேவேளை, நடந்து முடிந்த அரச தலைவர் தேர்தலில் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா சுயேச்சையாக ஒட்டகச் சின்னத்தில் போட்டியிட்டிருந்தார்.

இது தொடர்பாக எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாவைத் தொடர்பு கொண்டு அறிய முயன்றபோதும் அது பயனளிக்கவில்லை.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்களின் தியாகங்கள் மதிக்கப்பட வேண்டியன!

இன்று உலக ஆண்கள் தினம்.
இதை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

பன்னாட்டு மகளிர் தினத்தில் பெண்கள் போற்றப்படுவதைப் போன்று, உலகில் ஆண்களை மதிப்பதற்காகவும் ஆண்களின் உரிமைகள் மற்றும் பாதுகாப்புக் குறித்த விழிப்புணர்வு கருதியும் பன்னாட்டு ஆண்கள் தினம் ஒவ்வொரு ஆண்டும் கடைபிடிக்கப்படுகிறது.

குடும்ப உறுப்பினர்கள், பணியிடம், வாழ்க்கை முறை உள்ளிட்ட பல சந்தர்ப்பங்களில் போற்றக்கூடிய அளவிலான தியாகங்களை மேற்கொண்டு வரும் ஆண்கள் குலத்தின் பெருமையை, சமுதாயம் அங்கீகரிக்க இந்த நாள் ஒரு நினைவுப்படுத்தும் நாளாகவும் அமைகிறது. ஆண்களுக்கென்று ஏன் ஒரு தனியான நாள் கொண்டாடப்பட வேண்டும் என்று சிலர் கேள்வி எழுப்புகின்றனர். அவர்களுக்கு வாழ்நாளில் என்னதான் பிரச்சினை என்றும் குறிப்பிட்டுள்ளனர். ஆண்களுக்கும் பிரச்சினைகள் உள்ளன.

ஒரு சில சம்பவங்களில் ஆண்களுக்கு அநீதி இழைக்கப்படுகின்றது. ஆணுக்கும் பாலியல் தொந்தரவு உள்ளது என்பதை நம் சமூகம் நிச்சயம் உணர வேண்டும். அவனின் பாதுகாப்புக்காகவும், உரிமைக்காகவும் நிச்சயம் ஒரு நாள் ஒதுக்கப்பட வேண்டும். அவ்வாறான நாள்தான் இன்றைய ஆண்கள் தினம். 1999ஆம் ஆண்டு மேற்கிந்தியத் தீவுகளில் உள்ள டிரினிடாட் டொபாகோ நாட்டில் இந்தத் தினம் தொடங்கப்பட்டது. ஐ.நாவால் அங்கீகரிக்கப்பட்ட தினமாகவும் இது விளங்குகிறது. மகத்தான தியாகங்கள் பல புரிந்து வரும் ஆண்குலத்தின் பெருமையை சமுதாயம் அங்கீகரிக்க இந்த நாள் ஒரு நினைவுபடுத்தும் நாளாகவும் அமைகிறது.

வேண்டுகைகள்

ஆண்கள் மற்றும் இளைஞர்களின் சுகாதார மேம்பாடு, ஆண், பெண் இருபாலரும் சம உரிமையுடன் மனமொருமித்த செயல்பாடு போன்றவற்றை வேண்டுவது, ஆணினத்தின் வழி காட்டுதலுக்கு நேர்மையும், மனத்திண்மையும் ஒருங்கே கொண்ட முன்மாதிரிகளை அடையாளம் காண்பது, அனைத்துத் துறைகளிலும் கடினமான செயல்பாடுகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு, பல இடர்களுக்கு மத்தியில் முழுமையான அர்ப்பணிப்புடன் பணி புரிந்துவரும் ஆணினத்தின் சாதனைகளை அடையாளம் கண்டு அதற்கு நியாயமாகக் கிட்ட வேண்டிய அங்கீகாரத்தை சமுதாயத்திலிருந்து பெறுதல் என்பன இந்தத் தினத்தின் நோக்கமாகும்.

வரலாறு தோன்றிய காலத்திலிருந்து ஆண் என்பவன் சமுதாயத்தின் காப்பாளனான, சமூகத்தின் அடிப்படைத் தேவைகளை தன் உழைப்பால் பூர்த்தி செய்பவனாக அறியப்படுகிறான். அது தான் ஆணின் முக்கிய கடமையாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. ஆனால் ஆணின் இந்த மிக முக்கிய பங்களிப்பு சமூகத்தில் எந்தவித அங்கீகாரத்தையும் பெறவில்லை. இத்தகைய தவறான போக்கை எதிர்த்து குரல் கொடுக்கும் நாளாக இந்த ஆண்கள் தினம் அமைகிறது.

முக்கியமாக இன்றைய நிலையில் ஆண்கள் எதிர்கொள்ளும் சட்டபூர்வ பயங்கரவாதத்தையும், ஆண்களை பொருளாதார ரீதியிலும் மன ரீதியாகவும் கொடுமைப்படுத்தும் போக்கையும், பல ஆணைதிர் சட்டங்களின் செயல்பாடுகளால் ஆண்கள்தொடர்ந்து எதிர்கொள்ளும் சித்திரவதைகளையும், ஆணினத்தையே அழிக்கச் செய்யும் ஒருபால் சார்பு நிலையையும் எதிர்த்துப் போராடுவது போன்றவற்றிற்காகவுமே ஆண்கள் தினம் கொண்டாடப்பட வேண்டியிருக்கிறது.

சுமத்தப்படும் உழைப்பு

ஒரு வீட்டில் ஆண் குழந்தை பிறந்தால் போதும். அடசிங்கக்குட்டி பொறந்துட்டானா? இனி குடும்பத்தை காப்பாத்திடுவான் என்று பெருமை கொள்வார்கள். குழந்தை பால்குடியை கூட மறந்திருக்காது.

அட இவன் வளர்ந்ததும் நமக்கு சம்பாதிச்சு போடுவான் என்று பெற்றோர்கள் கனவு காண்பார்கள். வளரும் ஆண் குழந்தையிடம், எப்போது சம்பாதிச்சு அம்மாவுக்கு வளையல் வாங்கித் தருவாய் என்று விளையாட்டாக கேட்க ஆரம்பித்து விடுவோம். அந்த நேரத்தில் குழந்தைக்கு 7 வயது தாண்டியிருக்காது. இப்படி ஆண் குழந்தைகள் வளரும் போது, அவர்கள் சந்தோஷமாக அனுபவிக்க வேண்டிய குழந்தைப் பருவத்திலேயே அவர்களுக்குள் ஒரு நெருக்கடியை உண்டாக்கி விடுகிறோம்.

பையன் தானே..? அவனுக்கு என்ன பிரச்சினை வரப்போகுது எங்கேயாவது சுத்திட்டு வீட்டுக்கு வந்துருவான் என 10 வயதுச் சிறுவனை அசால்டாக கையாள்கிறோம். அவன் மனக் குமுறல்களைக் காது கொடுத்துக் கேட்பதில்லை. சிறுமிகளுக்கு எப்படி பாலியல் துன்புறுத்தல் கொடுக்கப்படுகிறதோ..? அதேபோன்று ஆண் குழந்தைகளுக்கும், சிறுவர்களுக்கும் பாலியல் தொந்தரவு கொடுக்கும் கயவர்கள் இருக்கிறார்கள். சிறுவர்கள் தங்களுக்கு நடக்கும் பாலியல் தொந்தரவுகளை அவ்வளவு எளிதில் வெளியில் சொல்லி விடமாட்டார்கள். அவர்களைக் கனிவுடன் பெற்றோர்கள் அணுகினால் உண்மை வெளிவரும்.

திருமணம் ஆன ஆண்களுக்கோ ஒருமாதம் சம்பளம் வரவில்லையென்றால், கையும் ஓடாது. காலும் ஓடாது. அம்மாவுக்கும், மனைவிக்கும் இடையேயான சின்ன சின்ன சச்சரவுகளில், அம்மா பக்கம் சேர்ந்துக் கொண்டால் அப்படியே நீ போய்விடு என்று மனைவி சொல்வாள். அதே மனைவி பக்கம் சென்றால், இவ்வளவு நாள் வளர்த்தது எல்லாம் வீணாப் போச்சே என்று அம்மா அழுவாள். என்னதான் சொல்வது என்று தினம்தினம் தவிக்கும் ஆண்கள் ஏராளம். இப்படித் தங்களுக்கு நிகழும் பிரச்சினைகளிலிருந்து இந்த வாழ்க்கையே வேண்டாம் என்று முடித்துக் கொள்ளும் இளைஞர்கள் பலரும் இருக்கிறார்கள்.

பெண்கள் தீபங்களாக ஜொலிக்கிறார்கள் என்றால் அதற்கு காரணமாக இருக்கும் எண்ணெய்யும், திரியும் ஆண்கள்தான். ஒட்டுமொத்த ஆண்கள் சமுதாயத்தைக் குற்றவாளி போன்று சிலர் எண்ணுகிறார்கள். அது தவறானது.

பெற்றோருக்கு நல்ல மகனாகவும், தன் மனைவிக்கு நம்பிக்கையான கனவானாகவும், குழந்தைக்கு நல்ல அப்பாவாகவும், சொந்த பிரச்சினைகளை வெளியில் சொல்ல முடியாமல் தவிக்கும் ஒவ்வொரு ஆணும் இங்கு போற்றப்பட வேண்டியவர்கள். ஒவ்வொரு குடும்பத்தையும் தனது விடா முயற்சியாலும், கடின உழைப்பாலும் தூக்கி நிறுத்த நினைக்கும், அதனை நடத்திக் கொண்டிருக்கும் அத்தனை ஆண்களுக்கும் ஆண்கள் தின நல் வாழ்த்துகள். ■

டெங்கு நோய் பற்றி உங்களுக்குத் தெரியுமா?

குளிர்சாதனப் பெட்டியின் பின் பகுதியில் அமைந்துள்ள நீர் தேங்கக் கூடிய தட்டு

இந்தத் தட்டை வாரத்துக்கு இரண்டு முறையாவது கழற்றி உரஞ்சிக் கழுவுதல் வேண்டும். அல்லது குறித்த தட்டை நுளம்பு உட்புகாத வலையினால் நுளம்புகள் உட்செல்லா வண்ணம் மூடிக் கட்டுதல் வேண்டும்.

மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

காரணத்தை ஆராய வேண்டும்

இலங்கையின் 7 ஆவது நிறைவேற்று அதிகார அரச தலைவராகப் பதவியேற்றுக் கொண்டுள்ளார் கோத்தபாய ராஜபக்ச. அவர் இன்று தனது கடமைகளையும் பொறுப்பேற்கவுள்ளார்.

நேற்று அநுராதபுரத்தில் பதவியேற்ற பின்னர் உரையாற்றிய அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச ஒரு விடயத்தைத் தனது உரையில் தொட்டுக்காட்டினார்.

எனது வெற்றிக்கு பெரும்பான்மையான சிங்கள மக்கள்தான் காரணமாகும். நான் எமது வெற்றியில் ஒன்றிணையுமாறு தமிழ் முஸ்லிம் மக்களிடம் கோரியிருந்தேன். அது நிறைவேறவில்லை. எதிர்காலத்தில் என்றாலும் எனது செயற்பாடுகளுக்கு ஒத்துழைக்குமாறு நான் அனைத்து மக்களிடமும் கேட்டுக் கொள்கிறேன்என்றுஅவர்தனதுஉரையில்குறிப்பிட்டிருந்தார்.

கோத்தபாய ராஜபக்சவின் இந்த அழைப்பு வரவேற்கத்தக்கது.

தமிழ் முஸ்லிம் மக்களின் தனக்கு எதிரான போக்குக்குக்கான காரணங்களை அவர் அறியாதவரல்ல. போரின்போதும், போருக்குப் பின்னரான காலத்திலும் கோத்தபாய ராஜபக்சவிடம் அதிகாரம் இருந்தபோதுசிறுபான்மைமக்கள்தொடர்பானவிடயங்களில் இறுக்கமான போக்கைக் கடைப்பிடித்தவர் என்பது அவரைத் தமிழ், முஸ்லிம் மக்களிடம் இருந்து தூரத்தள்ளி வைத்திருக்கின்றன.

இப்போது கோத்தாபாயராஜபக்சஇலங்கையின்அரச தலைவராகப் பதவியேற்றுள்ளார். அவர் சிங்கள பெரும்பான்மை மக்களின் வாக்குளால் வெற்றி பெற்றுள்ளபோதும், அவர் இலங்கை மக்கள் அனைவருக்குமான அரச தலைவர் என்பதே உண்மை.

தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரும் தனது எதிர்காலப் பயணத்தில் இணைய வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ள அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச, சிறுபான்மை மக்கள் கொண்டுள்ள அச்சத்தைப் போக்க முயல வேண்டும். நாட்டில் பெரும்பான்மையின மக்கள் அனுபவிக்கும் சுதந்திரமும், சலுகைகளும்சிறுபான்மையினமக்களுக்கும்கிடைக்கும் வகையில் நாட்டை நிர்வகிக்க வேண்டும்.

தமிழ், முஸ்லிம் மக்கள் தனது எதிர்காலச்செயற்பாட்டில்ஒன்றிணையவேண்டும்என்றுகோருகின்றஅரச தலைவர், அவர்கள்ஏன்விலகிச்சென்றுள்ளனர்என்ற காரணத்தையும் ஆராய வேண்டும். அவர்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சிறுபான்மை மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளைகரிசனையோடுஅணுகித்தீர்க்கஎடுக்கும்முயற்சிகளே, அவர் எதிர்பார்க்கும் நிலமையைத் தோற்றுவிக்கும். அவர் உறுதியளித்த பாதுகாப்பான, அமைதியான, ஒழுக்கமுள்ள நாட்டை உருவாக்குவதற்கு இது அவசியமானது. தனக்கு வாக்களிக்கவில்லை என்பதால் தமிழ், முஸ்லிம் மக்களை ஒதுக்கி வைத்துத்தனது செயற்பாடுகளைமுன்னெடுத்துச்செல்வாரானால் அது எதிர்மறையான விளைவுகளையே தோற்றுவிக்கும்.

வார்த்தைகளைவிடஅவர்எதிர்காலத்தில்மேற்கொள்ளவிருக்கும் செயல்களே முக்கியமானவை. சிறுபான்மைமக்களும், நாட்டுமக்களுக்கும்அச்சமின்றி சுதந்திரமாக வாழும் நிலமை உருவாக்கப்பட்டால் மட்டுமே பாதுகாப்பான, அமைதியான, ஒழுக்கமுள்ள நாடு உருவாகும் என்பதை அரச தலைவர் புரிந்து கொள்ள வேண்டும்.



யார் இந்த கோத்தபாய?

இலங்கையின் 7ஆவது அரச தலைவராக கோத்தபாய ராஜபக்ச தேர்தெடுக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் அறிவித்துள்ளார். வரலாற்றில் முதல் தடவையாக புதிதாகவே ஆரம்பிக்கப்பட்ட கட்சியொன்றிலிருந்து ஒருவர் அரச தலைவராகத் தெரிவாகியுள்ளமை சிறப்பு அம்சமாகும்.

இலங்கையின் போர்க் காலத்தில் அதிகமாக முணுமுணுக்கப்பட்ட பெயர் கோத்தபாய ராஜபக்ச. இலங்கையை கடந்து பன்னாட்டு அளவில் அந்தப் பெயர் உச்சரிக்கப்பட்டது. இலங்கையில் போரை அரசு சார்பில் முன்னெடுத்தவர் கோத்தபாய. இப்போது இலங்கையின் அரச தலைவராகப் பொறுப்பேற்க இருக்கும் கோத்தபாய ராஜபக்ச யார்? அவரது கடந்த காலம் என்னவாக இருந்திருக்கிறது? இலங்கையில் போர்க் காலத்தில் அவர் பங்கு என்ன? என்பது பற்றி அறிய தொடர்ந்து பயணிப்போம்.

இலங்கையின் தென் மாகாணத்தில் மாத்தறை மாவட்டத்திலுள்ள ஹம்பாந்தோட்டை வீரகெட்டிய எனும் பகுதியில் 1949ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20ஆம் திகதி அரசியல் வாதியான டி.ஏ.ராஜபக்ஸ தம்பதியினருக்கு நந்தசேன கோத்தபாய ராஜபக்ஸ பிறந்தார். முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச, முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ச மற்றும் முன்னாள் அமைச்சர் பஷில் ராஜபக்ச ஆகியோரின் சகோதரரே கோத்தபாய ராஜபக்ச. தனது ஆரம்ப கல்வியை கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் கோத்தபாய ராஜபக்ச பயின்றுள்ளார்.

இராணுவ வாழ்க்கை

1971ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26ஆம் திகதி கேடட் அதிகாரியாக இலங்கை இராணுவத்தில் இணைந்து, தனது இராணுவப் பயணத்தை கோத்தபாய ராஜபக்ச ஆரம்பித்துள்ளார். அதனைத் தொடர்ந்து, கோத்தபாய ராஜபக்ச 1972ஆம் ஆண்டு மே மாதம் 25ஆம் திகதி இலங்கை இராணுவத்தின் இரண்டாம் நிலை லெப்டினனாக பதவி உயர்த்தப்பட்டுள்ளார். இலங்கை இராணுவத்தின் சிறிலங்கா சிங்ஹ ரெஜிமென்ட், ரஜரட்ட ரயிபெல்ஸ் ஆகிய படைப்பிரிவுகளில் கடமையாற்றிய அவர், 1983ஆம் ஆண்டு இராணுவத்தின் கஜபா ரெஜிமென்ட்டில் இணைந்துள்ளார்.

கோத்தபாய ராஜபக்ச, தனது 20 ஆண்டு கால இராணுவ வாழ்க்கையில் இலங்கை இராணுவத்துக்காக ஆற்றிய சேவைக்காக அந்த காலப் பகுதியில் ஆட்சி பீடத்தில் இருந்த மூன்று அரச தலைவர்களான ஜே.ஆர்.ஜயவர்தன, ரணசிங்க பிரேமதாஸ மற்றும் டி.பி.விஜேதுங்க ஆகியோரிடம்விருதுகளையும் பெற்றுள்ளார்.

1983ஆம் ஆண்டு முதல் 1990ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான உள்நாட்டுப் போர் ஆரம்பித்த காலப் பகுதியில் இலங்கை இராணுவத்தில் கோத்தபாய ராஜபக்ச முன்னின்று பணியாற்றியுள்ளார். அதனைத் தொடர்ந்து, 1992ஆம் ஆண்டு இலங்கை ராணுவத்தின் பல பிரிவுகளில் கட்டளைத் தளபதியாகவும் அவர் கடமையாற்றியுள்ளார். இந்த நிலையில், பாதுகாப்புத் துறையில் பல உயரிய பதவிகளை வகித்த அவர், 1992ஆம் ஆண்டு இலங்கை இராணுவ சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

அமெரிக்க குடியுரிமையும் பாதுகாப்புச் செயலரும்

இலங்கை இராணுவத்திலிருந்து 1992ஆம் ஆண்டு ஓய்வு பெற்ற கோத்தபாய ராஜபக்ச, அந்தக் காலப் பகுதியிலேயே அமெரிக்காவுக்குக் குடியேறி அமெரிக்கக் குடியுரிமையைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

தனது சகோதரனான மகிந்த ராஜபக்ச, 2005ஆம் ஆண்டு நடைபெற்ற அரச தலைவர் தேர்தலில் வெற்றியீட்டியதன் ஊடாக, அமெரிக்கக் குடியுரிமையைப் பெற்ற கோத்தபாய ராஜபக்ச, இலங்கையை நோக்கி மீண்டும் வருகைத் தந்தார். 2005ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலில் வெற்றியீட்டிய மகிந்த ராஜபக்ச, அந்த ஆண்டு நவம்பர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மாதம் கோத்தபாய ராஜபக்சவை பாதுகாப்பு செயலராக நியமித்தார். உள்நாட்டுப் போர் வலுப்பெற்றிருந்த நிலையிலேயே கோத்தபாய ராஜபக்ச இலங்கையின் பாதுகாப்பு செயலராக நியமிக்கப்படுகின்றார்.

விடுதலைப் புலிகளின் கொலை முயற்சி

பாதுகாப்பு செயலாளராக கடமையாற்றிய கோத்தபாய ராஜபக்சவை கொலை செய்யும் வகையில் தமிழீழ விடுதலைப் புலிகளால் தற்கொலை குண்டுத் தாக்குதல் ஒன்றும் நடத்தப்பட்டிருந்தது.

கொழும்பு கொள்ளுபிட்டி பகுதியில் 2006ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதலாம் திகதி கோத்தபாய ராஜபக்ச பயணித்த வாகன தொடரணி மீது, தமிழீழ விடுதலைப் புலிகள் தற்கொலை குண்டுத் தாக்குதலை நடத்தியிருந்தனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் கோத்தபாய ராஜபக்ச உயிர் தப்பியிருந்த பின்னணியில், அந்தத் தாக்குதல் சம்பவத்தில் இரண்டு பேர் உயிரிழந்திருந்ததுடன், 14 பேர் காயமடைந்திருந்தனர்.

அதனைத் தொடர்ந்து, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற உள்நாட்டுப் போரை நிறைவு செய்ய கோத்தபாய ராஜபக்ச கடும் பிரயத்தனத்தை வழங்கியிருந்தார். இந்த நிலையில், 2009ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி உள்நாட்டுப் போர் நிறைவடைந்ததாக அப்போதைய அரச தலைவர் மகிந்த ராஜபக்சவால் அறிவிக்கப்பட்டது.

போர்க் குற்றச்சாட்டு

ஈழப் போரின் போது, இலங்கை இராணுவத்திடம் சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலித் தலைவர்களை கொலை செய்ய உத்தரவிட்டதாக முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ச மீது குற்றம் சுமத்தப்பட்டது. அத்துடன், வெள்ளை வானில் பலர் கடத்தப்பட்டதாக கூறப்படும் சம்பவத்துக்கும், கோத்தபாய ராஜபக்சவுக்கும் தொடர்பு காணப்படுவதாகவும் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராக அமெரிக்காவில் இருவேறு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பன்னாட்டு உண்மை மற்றும் நீதிக்கான அமைப்பு கடந்த ஏப்ரல் மாதம் அறிவித்திருந்தது.

ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க கொலை செய்யப்பட்டமைக்கு, முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ச பொறுப்பேற்க வேண்டும் என தெரிவித்து, லசந்த விக்ரமதுங்கவின் மகளான அஹிம்சா விக்ரமதுங்கவினால் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராக தமிழ் இளைஞர் ஒருவரும், அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்கொன்றை தாக்கல் செய்திருந்ததாக பன்னாட்டு உண்மை மற்றும் நீதிக்கான அமைப்பு தெரிவித்திருந்தது.

கனேடியக் குடிமகனான ரோயி சமாதானம் 2007ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் கொழும்பில் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் சித்திரவத்தைக்கு உட்படுத்தப்பட்டிருந்ததாகவும், 2010ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அவர் விடுவிக்கப்பட்டதாகவும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டது.

சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டதாக குற்றஞ்சுமத்தியே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அந்த அமைப்பு வெளியிட்டிருந்த அறிக்கையில் அன்று சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

அமெரிக்கா கலிபோர்னியா நீதிமன்றத்திலேயே இந்த இரண்டு சிவில் வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

மேலும், தனது தந்தையான டி.ஏ.ராஜபக்சவின் பெயரில் அமைக்கப்பட்ட அருங்காட்சியக நிதியில் மோசடி இடம் பெற்றதாக கூறப்படும் வழக்கொன்றும் கொழும்பு விசேட மேல் நீதிமன்றத்தில் தற்போது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது.

ஈழப் போரின் போது, இலங்கை இராணுவத்திடம் சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலி தலைவர்களை கொலை செய்ய உத்தரவிட்டதாக பாதுகாப்பு முன்னாள் செயலர் கோத்தபாய ராஜபக்ச மீது குற்றம் சுமத்தப்பட்டது. அத்துடன், வெள்ளை வானில் பலர் கடத்தப்பட்டதாக கூறப்படும் சம்பவத்துக்கும், கோத்தபாய ராஜபக்சவுக்கும் தொடர்பு காணப்படுவதாகவும் குற்றம் சுமத்தப் பட்டிருந்தது.

அமெரிக்க குடியுரிமை துறப்பு

இரட்டைக் குடியுரிமை கொண்டவர்கள் இலங்கையில் நடைபெறும் தேர்தல்களில் போட்டியிட முடியாது என அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அமெரிக்கா மற்றும் இலங்கை இரட்டை குடியுரிமை கொண்டிருந்த கோத்தபாய ராஜபக்ச, தனது அமெரிக்க குடியுரிமை யைக் கைவிடும் ஆவணத்தை இந்த ஆண்டின் ஆரம்பத்தில் சமர்ப்பித்திருந்தார்.

இதன்படி, அமெரிக்கக் குடியுரிமையைக் கைவிடும் வகையில் கோத்தபாய ராஜபக்சவினால் விண்ணப்பிக்கப்பட்டிருந்த ஆவணத்துக்கு அமெரிக்கா கடந்த மே மாதம் 3ஆம் திகதி அனுமதி வழங்கியுள்ளதாக அமெரிக்காவுக்கான வெளிநாட்டு குடியுரிமை சேவை தீணைக்களத்தின் முத்திரையுடன் அமெரிக்கா இந்த ஆவணத்தை வெளியிட்டுள்ளது.

இலங்கையின் முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்சவின் அமெரிக்க குடியுரிமை கைவிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்ட போதிலும் தேர்தல் காலங்களிலும் அமெரிக்க குடியுரிமை தொடர்பில் சர்ச்சைகள் வெளியாகியிருந்தன.

அமெரிக்க குடியுரிமை கொண்ட ஒருவர் தேர்தலில் போட்டியிடவுள்ளதாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டு, அந்த மனுவை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

இந்த நிலையில், தேர்தல் நடைபெறுவதற்கு மூன்று நாள்கள் காணப்பட்ட சந்தர்ப்பத்தில் கோத்தபாய ராஜபக்சவின் அமெரிக்க குடியுரிமை தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே தேர்தல் நடைபெற்று கோத்தபாய ராஜபக்ச அரச தலைவராகத் தெரிவாகியுள்ளார். ■

கார்த்திகை - 01-30

வடக்கு மாகாண மரநடுகை மாதம்

"காடும் நம் தாய். தாயிடத்தில் பால் குடிக்கலாமே தவிர, நாம் அவளின் இரத்தத்தையே உறிஞ்சிவிடக் கூடாது.

-தமிழகக் கவிஞர் அறிவுமதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், நவ.19

கஞ்சாவை கொண்டு சென்றார் என்ற குற்றச் சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலை மொற வெவபொலிஸ்பிரிவுக்குட் பட்ட பகுதியில் வைத்து சந்தேகநபர் நேற்றுமுன் தினம் கைது செய்யப் பட்டார்.

அவரிடம் இருந்து 2 கிலோ 150 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்த னர். பேராறு, கந்தளாய் பகுதியைச் சேர்ந்த 39 வயதுடைய ஒருவரையே மொறவெவ பொலிஸா ருக்கு கிடைத்த தகவ லின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேக நபர் ஹேரோ யின் வழக்கொன்றில் பிணையில்விடுவிக்கப்பட் டுள்ள நிலையிலே கஞ் சாவுடன் கைது செய்துள் ளதாகவும், சந்தேக நபர் பயன்படுத்திய உந்து ருளி பொலிஸ் நிலையத் தில் தடுத்து வைத்துள்ள தாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரை திருகோ ணமலை நீதிவான் நீதி மன்றில் முன்னிறுத்த வுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

அரச நியமனம் பெற்ற 7 ஆயிரம் பேர் ஏமாற்றம்

யாழ்ப்பாணம், நவ.19

நாடளாவிய ரீதியில் கிராம அலுவலர்களுக்கு உதவியாளர்களாகப் பணியாற்றும் வகையில் தேசிய ரீதியில் க.பொ.த உயர்தரத்துடன் பயிலுநர்களாக ஒப்பந்தப் பணியாளர்களை நியமிப்பதற்காக கடந்த மாதம் நியமனம் வழங்கப்பட்டும் அவர்கள் இன்னமும் பணிக்கு அமர்த்தப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான நேர்முகத் தேர்வு கள் கொழும்பில் கடந்த ஜூன் மாதம் இடம்பெற்றது. நேர்முகத் தேர்வுகளின் அடிப்படையில் கடந்த செப்ரெம்பர் 16 ஆம் திகதி 7 ஆயி ரம் பேருக்கு நியமனம் வழங்கப் பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்துக்கு 105 பேரும் முல்லைத்தீவு மாவட்டத் துக்கு 144 பேரும், மன்னார் மாவட் டத்துக்கு 100 பேரும், வவுனியா மாவட்டத்துக்கு 92 பேரும் நியமிக் கப்பட்டனர். இவர்கள் நியமிக்கப்பட்ட பயிற்சிக் காலத்துக்கு மாதாந்தம் 15 ஆயிரம் ரூபா வழங்கப்படும். அந் தக் காலத்தில் ஊழியர் சேமலாப நிதி செலுத்தப்படும் எனவும் வழங் கப்பட்ட நியமனத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

வழங்கப்பட்ட நியமனத்தின் அடிப்ப டையில் புதிதாக நியமனம் கிடைத் தவர்கள் மிகவும் ஆவலாக மாவட் டச் செயலகங்களில் தமக்கான கட மைகளை எதிர்பார்த்துக் காத்திருந் தனர். தமக்கான பிரதேச செயலகம் வழங்கப்படும் என்று எண்ணியி ருந்த வேளையில், அரச தலைவர் தேர்தல் முடிவடைந்த பின்பே பணி வழங்குமாறு தேர்தல்கள் ஆணைக் குழுவின் தவிசாளர் பணிப்புரை அனுப்பியதோடு, தேர்தலின் பின்பு பணி வழங்கப்படும் எனத் தெரிவித்து அவர்கள் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டனர்.

இருப்பினும் குறித்த நியமனத்தின் வகை, இதற்காக நேர்முகப் பரீட்சை இடம்பெற்ற காலம் , பெறப்பட்ட அனுமதிகள் என்பன தேர்தல் ஆணைக்குழுவின் கவனத்துக்கு மீண்டும் கொண்டு செல்லப்பட்டது. அவற்றின் அடிப்படையில் குறித்த நியமனத்தை வழங்குமாறு தேர்தல் கள் ஆணைக்குழு அனுமதி வழங்க வேண்டும் என்று தெரிவா னோர் தேர்தல்கள் ஆணைக்குழு வின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர்.

இருப்பினும் தேர்தல் நிறைவுற்ற பின்பே நியமனம் எனத் தெரிவிக் கப்பட்ட நிலையில் இவ்வாறு நியம னம் கிடைத்தவர்கள் நேற்று மாவட் டச் செயலகங்களுக்குப் படையெ டுத்தனர். இருப்பினும் அவர்கள் பணிக்கு அனுமதிக்கப்படவில்லை. இதனால் நியமனம் கிடைத்தவர்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பியதாகத் தெரிவித்தனர். (க-105)

வெற்றுக்காணியில் இருந்து கைக்குண்டு மீட்பு

மட்டக்களப்பு, நவ.19

மட்டக்களப்பு இருதயபு ரம் பிரதேசத்தில் வெற்றுக்காணியில் இருந்து கைக்குண்டு ஒன்றைப் பொலிஸார் நேற்றுமுன்தினம் மீட்டுள்ள னர்.

குறித்த பகுதியில் உள்ள வெற்றுக்காணி யில் சிறுவர்கள் பந்து விளையாடிக்கொண்டி ருந்த போது பந்து வீழ்ந்ததையடுத்து அதை தேடும் போது பந்து வடிவிலான குண்டு ஒன்றை சிறுவன் ஒருவன் கண்டுள்ளான்.

அதனை எடுத்து வீட்டுக்கு கொண்டு சென்று பெற்றோரிடம் காட்டியுள்ளான்.

பெற்றோர் சிறுவனிடம் இருந்து அதனை பறித்து குறித்த வெற்றுக் காணியில் வீசியுள்ளதாக பொலிஸாரின் ஆரம்ப விசாரணை யில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து குறித்த குண்டு தொடர்பாக இரவு 7 மணியளவில் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதைய டுத்து குண்டை மீட்டுள்ளதாக தெரி விக்கப்பட்டது.

இந்நிலையில் இது தொடர்பான மேலதிக விசாரணையை மட்டு தலைமையக பொலி ஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ஐ)

கற்றல் உபகரணங்கள் வழங்கிவைப்பு

முல்லைத்தீவு, நவ.19

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் கனகரத்தினபுரம் பகுதியில் உள்ள கிருபன் முன்பள்ளியில் கல்வி கற்கும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்களுக்கு கற்றல் உப கரணங்கள் வழங்கப்பட்டன.

உலகச் சிறுவர் நலன் காப்பகத்தால் நடைமுறைப்ப டுத்தப்படும் வறிய மாணவர்களின் கல்வி கற்றலை ஊக்கப்படுத்தும் வேலைத்திட்டத்தின் மூலம் இந்த உதவி அண்மையில் வழங்கப்பட்டது.

சிறிபதி நிசான் தனது பிறந்த நாளை முன்னிட்டு கற் றல் உபகரணங்கள் வழங்கியதோடு சிறுவர்களுக்கு மதிய போஷணமும் வழங்கப்பட்டது. (ஐ-222)

வவுனியாவில் படுகொலை செய்யப்பட்ட மாணவர்களின் நினைவேந்தல் நிகழ்வு

வவுனியா, நவ.19

இராணுவத் துப்பாக்கி வேட்டுக்களுக்கு இலக் காகிப் படுகொலை செய்யப்பட்ட வவுனியா விவசாயக் கல்லூரி மாணவர்களின் 13 ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்று கடைப்பிடிக் கப்பட்டது.

கல்லூரியின் மாணவர் ஒன்றியத்தால் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந் தன. உயிரிழந்தவர்களின் திருவுருவ படங்களுக்கு நினைவுச்சுடர்ஏற்றப்பட்டது. மலரஞ்சலி செலுத்தப்பட்டது. மாணவர் களின் நினைவாகக் குருதிக் கொடை நிகழ்வையும் விவசாயக்கல்லூரி மாண வர்கள் நடத்தினர். மரக்கன்றுகளும் நடுகை செய்யப்பட்டன.

கடந்த 2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18 ஆம் திகதி வவுனியா விவசாய கல்லூரிக்கு அண்மையில் இராணுவத் தினர் மீது கிளைமோர் தாக்குதல் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. கிளைமோர் தாக் குதலுக்குப் பின்னர் இராணுவத்தினர் துப்பாக்கிவேட்டுக்களைத்தீர்த்துக்கொண்ட னர். விவசாயக் கல்லூரியில் நின்ற மாண வர்கள் மீதே இராணுவம் இந்த துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டது என்று தெரி விக்கப்பட்டது. 5 மாணவர்கள் அதில் படு கொலை செய்யப்பட்டனர். 10 பேர் காய மடைந்திருந்தனர். அவர்களுடையநினைவு தினமே நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டி ருந்தது. (ஐ-80)

தென்மராட்சியில் அதிகரிக்கும் டெங்கு

15 நாள்களில் மட்டும் 75 பேருக்கு சிகிச்சை

சாவகச்சேரி, நவ.19

தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்குத் தொற்றுக்கு இலக்காகி சிகிச்சைக்காகச் சேர்க்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. பிரதேசத்தில் கடந்த 15 நாள்களில் மட்டும் 75 பேர் டெங்குத் தொற்றுக்கு இலக்காகி சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொடிகாமம், சாவகச்சேரி நகரம், மட்டு வில் ஆகிய பிரதேசங்களில் டெங்கின் தாக்கம் அதிகளவில் காணப்படுவதால் மக்கள் தமது காணிகள் மற்றும் குடியி ருப்புகள் போன்றவற்றில் டெங்கு நுளம் புகள் உருவாக்கக்கூடிய பகுதிகளை இனங்கண்டு அவற்றைத் துப்பரவாக வைத்திருக்குமாறு சாவகச்சேரி சுகா தார மருத்துவ அதிகாரி அறிவித் துள்ளார்.

அத்துடன் மூன்று நாள்களுக்கு மேல் காய்ச்சல் காணப்பட்டால் அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெறுமாறும் அறிவித்துள்ளார்.

சாவகச்சேரி மருத்துவமனையில் கடந்த 15 தினங்களில் வெளிநோயா ளர் பிரிவில் 8 ஆயிரத்துக்கும் மேற்பட் டோரும், விடுதிகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோரும் சிகிச்சை பெற்றுள்ள னர் என்று புள்ளிவிபரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

அதேவேளை டெங்குத் தொற்றால் துன் னாலையைச் சேர்ந்த 44 வயது குடும் பப் பெண்ணும் தெல்லிப்பழையைச் சேர்ந்த 16 வயதுச் சிறுவனும் உயிரி ழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோண்டாவில் கிழக்கு சிறி ஞானப்பழனி முருகன் ஆலயத்தில் ஐப்பசி வெள்ளி இறுதி நாளன்று சமய தீட்சை வழங்கும் நிகழ்வு சிவஸ்ரீ ரவீந்திரராசாக் குருக்கள் தலைமையில் இடம்பெற்றது. பாடசாலை மாணவர்களும், தொண்டர்களும் சமய தீட்சையைப் பெற்றுக் கொண்டனர்.(சு-159)

வாவியிலிருந்து பெண்ணின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு வாகரைப் பொலிஸ் பிரிவிலுள்ள பனிச்சங்கேணிப் பாலத்தை அண்டிய வாவிப் பகுதியிலிருந்து பெண்ணொருவரின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டது.

கடந்தஞாயிற்றுக்கிழமை மாலை வெளியூரிலிருந்து பேருந்தில் பனிச்சங்கேணிப் பகுதிக்கு வந்திறங்கிய குறித்த பெண் காணாமல் போயிருந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

பனிச்சங்கேணிப் பாலத்தை அண்டிய வாவி மருங்கிலுள்ள விடுதியொன்றில் பொருத்தப்பட்டிருந்த சீ.சீ.ரீ.வி காணொளிக் கமராவில் அந்தப் பெண் வாவியில் குதிப்பதான காட்சி பதிவாகியிருந்ததாகப் பிரதேச இறப்பு விசாரணை அதிகாரி வடிவேல் ரமேஷ் ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

வாகரைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க)

ஐயப்ப சாமிகளுக்கு மாலை அணிவிப்பு

வவுனியா,நவ.19

இந்துக்களால் முன்னெடுக்கப்படும் ஐயப்ப விரதத்தை முன்னிட்டு வவுனியா தாண்டிக்குளம் ஐயனார் ஆலயம் மற்றும் உக்குளாங்குளம் பிள்ளையார் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் சிறப்புப் வழிபாடுகள் இடம்பெற்றன.

இதன் போது குருசாமிகளான மணி மற்றும் கிருஸ்ணா ஆகியோரால் ஐயப்ப சாமிகளுக்கு மாலை அணிவிக்கப்பட்டு சிறப்புப் பூஜை நிகழ்வுகளும் நடத்தப்பட்டன.

மனிதனை புனிதராக்கக் கூடிய விரதமான இவ் ஐயப்ப விரதமானது தொடர்ந்தும் 41 நாட்கள் அனுஸ்டிக்கப்படும்.

இந்த பூஜை நிகழ்வில் ஐயப்பசாமிகள் மற்றும் பக்தர்கள் அனைவரும் கலந்து கொண்டு ஐயப்பனின் ஆசியை பெற்றுக்கொண்டனர்.(ஜ-110)

குடி தண்ணீருக்கு அலையும் கார்மேல் நகர் கிராம மக்கள்

மன்னார், நவ.19

முசலி சின்ன புள்ளச்சி பொற்கேணி கிராம அலுவலகர் பிரிவுக்குட்பட்ட கார்மேல் நகர் கிராமத்தில் சுமார் 70 குடும்பத்துக்கும் அதிகமான மக்கள் குடி தண்ணீருக்குப் பெரும் அவதி நிலமையை எதிர்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கார்மேல் நகர் கிராமத்திலிருந்து ஆழ்துளைக் கிணறு மூலமாக சிலாவத்துறைப் பகுதிக்கு குழாய் மூலமாக தண்ணீர் கொண்டு செல்லப்பட்டு, சிலாவத்துறைப்பகுதியில் உள்ள 56 வீட்டுத்திட்டம் உட்பட அனைத்து பகுதிகளுக்கும் குடி தண்ணீர் விநியோகிக்கப்படுகிறது. ஆனால் ஆழ்துளைக் கிணறு மூலமாக தண்ணீர் பெறப்படும் இந்தக் கிராமத்து மக்கள் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை.

கிராமத்திலிருந்து தண்ணீர் செல்லும் குழாயில் ஏற்பட்டுள்ள துவாரத்தின் வழியாக கீழே சிந்தும் தண்ணீரையே இந்த மக்கள் பல காலமாகக் குடிப்பதற்குப் பயன்படுத்தி வருகின்றனர். இங்குள்ள ஆழ்துளைக் கிணறு மூலமாக நீர் உறிஞ்சப்படுவதால் அருகில் உள்ள கிணறுகளில் தண்ணீர் வற்றி விடுகிறது.

இது தொடர்பாக அனைத்து அரச அதிகாரிகளுக்கும் கடிதம் மூலமாகத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

"எமது குடி தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு எவரும் முன்வரவில்லை. குறித்த பகுதியில் மோட்டார் போடுவதற்கு முன்பாகவே மக்கள் வரிசையில் காவல் நின்று வீணாகப் போகும் நீரைப் பெறுவதற்குப் பெரும்பாடுபடுகின்றனர்" என்று மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.



முசலி பிரதேச சபை தவிசாளர் எமது குடி தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு முன்வர வேண்டும் என்றும் அந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கார்மேல் நகர் பகுதியில் ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டுள்ள இடம் முசலி பிரதேச சபைக்குச் சொந்தமான இடம். குடி தண்ணீர் வழங்குவதும் பிரதேச சபையே ஆகும்.

இது தொடர்பாக முசலி பிரதேச சபை தவிசாளர் சுபிஹானைத் தொடர்பு கொண்டு கேட்ட போது,

முசலி கார்மேல் நகர் மக்களுக்கு குடி தண்ணீர்ப் பிரச்சினை உள்ளது உண்மை. அவர்களது ஊரில் இருந்து தண்ணீர் பெறப்பட்டு இடங்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. ஆனால் அந்த மக்களுக்குக் குடி தண்ணீர்ப் பிரச்சினை உள்ளமை கவலையளிக்கிறது. இவர்களது குடி தண்ணீர்ப் பிரச்சினையை முன்னைய பிரதேச சபை நிர்வாகத்தினர் நிவர்த்தி செய்திருக்க வேண்டும். இந்த மக்களின் குடி தண்ணீர்த் தேவையை நிவர்த்தி செய்வதற்கு பெருந் தொகை நிதி தேவைப்படும்.

ஆகவே எதிர்வரும் 26 ஆம் திகதி முசலி பிரதேச செயலாளர், பிரதேச சபை உறுப்பினர்கள், பொது அமைப்புக்கள் மற்றும் கார்மேல் நகர் மக்களுடன் சிறப்புக் கலந்துரையாடலை மேற்கொண்டு அந்த மக்களுக்குரிய குடி தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு உறுதியான நடவடிக்கை எடுக்கப்படும். - என்றார். (க-213)

குழுக்களிடையே மோதல் மூவர் காயம்

கொழும்பு,நவ.19

மூன்று குழுகளுக்கிடையே இடம் பெற்ற மோதலில் மூவர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் புத்தளம் மன்னார் முதன்மை வீதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

இந்த வன்முறைச் சம்பவத்தில் ஈடுபட்ட ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மூன்று வாகனங்களையும் கைப்பற்றியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க)

கற்றல் உபகரணங்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம்,நவ.19

முன்பள்ளியில் இருந்து தரம் ஒன்றுக்கு பாடசாலைக்கு செல்லும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. கல்வி, பொருளாதார அபிவிருத்தி அமைப்பால் இந்த உதவி அண்மையில் வழங்கப்பட்டது.

வடக்கு கிழக்கில், பொருளாதார ரீதியில் பின்தங்கிய இடங்களில் அமைந்துள்ள முன்பள்ளிகளுக்கு இந்த அமைப்பு வருடா வருடம் உதவிகளை செய்து வருகின்றது.

அந்த வகையில், எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு தரம் ஒன்றுக்கு செல்லும் 21 முன்பள்ளிகளைச் சேர்ந்த நூற்றி அறுபத்தைந்து (165) மாணவர்களுக்கு இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

இச் செயற்திட்டத்தின் முதல் நிகழ்வாக, வவுனியா, ஓமந்தை, கள்ளிக்குளம் நாவலர் முன்பள்ளியைச் சேர்ந்த 14 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

முன்பள்ளி ஆசிரியைகள் திருமதி. ஆர். பிரியதர்சினி, ப. சஞ்சிகா ஆகியோர் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் அமைப்பின் செயலர் ஜ. யசோதரன் செயற்திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். (ஜ-222)

இணைந்து பணியாற்றவே பாகிஸ்தான் விரும்புகிறது

அந்தநாட்டு அரசதலைவர் ஆரிப் அல்வி கோத்தாவுக்கு வாழ்த்துத் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 19

இலங்கையின் புதிய அரசதலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள கோத்தபாய ராஜபக்சவுக்கு வாழ்த்துத் தெரிவித்திருக்கும் பாகிஸ்தான் அரசதலைவர் ஆரிப் அல்வி, இருநாட்டு மக்களினதும் வாழ்க்கைத்தர மேம்பாட்டுக்காகத் தொடர்ந்து இணைந்து பணியாற்றுவதற்கு எதிர்பார்த்துள்ளதாகக் கூறியிருக்கிறார்.

தனது கீச்சகத்தில் (டுவிட்டர்) பாகிஸ்தான் அரசதலைவர், இவ்வாறு பதிவிட்டுள்ளார். உங்களுக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் அதே வேளை, எமது இருநாட்டு மக்களினதும் வாழ்க்கைத்தர மேம்பாட்டுக்காக தொடர்ந்து இணைந்து

பணியாற்றுவதற்கு எதிர்பார்க்கின்றேன். பிராந்திய அமைதி, உறுதிப்பாடு மற்றும் சுபீட்சம் ஆகியவற்றுக்கான ஒத்துழைப்புக்களைப் பரிமாறிக்கொள்வதற்கும் தயாராக இருக்கின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உர மானிய பட்டியலில் விவரங்களில் குழறுபடி

5 ஆண்டுகளுக்கு மானியத்தை இழந்த விவசாயிகள்

யாழ்ப்பாணம், நவ.19

கிளிநொச்சி மாவட்டத்தில் சட்ட விரோதமாக விதைப்பு மேற்கொண்டவர்கள் எனும் பட்டியலில் விதைப்பை மேற்கொண்டவர்களின் பெயர்களுக்குப் பதிலாக நில உரிமையாளர்களின் பெயர் வழங்கப்பட்டமையால், 49 விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர் என்று சம்மேளணத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைமடுக்குளத்தின் 2019 ஆம் ஆண்டு 15 ஆயிரம் ஏக்கர் நெற் செய்கையும், 500 ஏக்கர் சிறுதானியமும் அனுமதிக்கப்பட்டு அதற்கேற்ப அளவீடுகள் பகிர்ந்தளிக்கப்பட்டு, சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. பலர் மேலதிக விதைப்பிலும் ஈடுபட்டதாக முறையிடப்பட்டது.

இவ்வாறு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் திணைக்களங்கள் கமக்கார அமைப்புக்களின் உதவியுடன் அளவீட்டிலும் ஈடுபட்டனர்.

இவ்வாறு இடம்பெற்ற அளவீடுகளில் 900 ஏக்கர் நெற்செய்கை அத்துமீறிய விதைப்பாகவும், 200 ஏக்கர் மேலதிக விதைப்பாகவும் மேற்கொள்ளப்பட்டமை கண்டறிப்பட்டு மாவட்டச் செயலருக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அதில் இனம் கானப்பட்ட அளவுகளில் அதிக பட்சமாக பெரியகுளம் பகுதியில் 200 ஏக்கரும், குமரபுரத்தில் 150 ஏக்கர், வலது கரை 70 ஏக்கர் பகுதி என அழைக்கப்படும் பிரதேசத்தில் 100 ஏக்கரும் கானப்பட்டதோடு, பழைய வட்டக்கச்சியில் உடையார் வளவை அண்டிய பகுதிகளில் 150 ஏக்கர் நிலமும் அத்துமீறிய விதைப்பாகவும் அடையாளம் காணப்பட்டன.

இதன் காரணமாக அத்துமீறிய செய்கை தொடர்பில் இறுதித் தீர்வை எட்டும் நோக்கில், மாவட்டச் செயலகத்தில் கமநல சேவைத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், விவசாய சம்மேளணம் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்ட கலந்துரையாடலில் முக்கிய 4 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தில் சட்ட விரோதமாக விதைப்பு மேற்கொண்டவர்களுக்கு எதிர்வரும் 5 ஆண்டுகளுக்கான உர மானியம் மற்றும் இலவச காப்புறுதி என்பவற்றை கமநல சேவைத் திணைக்களம் நிறுத்த வேண்டும், அத்துமீறிய விதைப்பை மேற்கொண்டவர்களுக்கு ஓர் ஆண்டுக்குக் குறையாமலும் 5 ஆண்டுகளுக்கு மேற்படாமலும் சிறுபோக மானியத்தையும் இலவச காப்புறுதியையும் நிறுத்த வேண்டும், எதிர்வரும் காலத்தில் சிறுபோகத்தின் போது அத்துமீறிய செய்கையைத் தடுப்பதற்காக அனுமதிக்கப்பட்ட பிரதேசத்தில் இருந்து 500 மீற்றருக்குள் இருந்து கால் நடைகளுக்கான மேய்ச்சல் தரைகளை அனுமதிப்பதெனவும், அந்தப் பகுதியில். கால் நடைக் கட்டுப்பாடோ அல்லது அத்து மீறிய விதைப்புப் பகுதியில் மேற்கொண்ட வயல்களில் மாடுகள் நுழையும் பட்சத்தில் சட்டப்படி தண்டிக்கும் அதிகாரம் வழங்கப்பட மாட்டாது.

இதேநேரம் கழிவு நீர்கள் கால்நடைகளின் தேவைக்காக சிறு குளங்களுக்குச் செல்ல வேண்டிய நீரை மறித்து வைத்துள்ள பிரதேசங்கள் உடன்சீர்செய்துநீர்குளங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும் உள்ளிட்ட 4 தீர்மானங் களும் எட்டப்பட்டன.

இவற்றின் மூலம் சுமார் 50 விவசாயிகள் எதிர்காலத்தில் சிறுபோக மானியத்தையும், 100 விவசாயிகள் காலபோக மானியத்தையும் இழப்பர்எனவும்சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இருப்பினும் ஆரம்ப காலத்தில் 5 ஏக்கர் நிலத்தைச் சொந்தமாகக் கொண்டிருந்த நிலையில், அதில் ஒருபகுதியை கைமாற்றிய விவசாயிகள் 49 பேரும் முதலாம் உரித்தாளர்களின் பெயர்களைச் சமர்ப்பித்த நிலையில், கமநல சேவைத் திணைக்களம் அவர்களுக்கான மானியத்தை முழுமையாக நிறுத்தியதால், தாம் பாதிப்படைவதாக சுட்டிக்காட்டி இரண்டாம் உரிமையாளர்கள் இனம் கானப்பட்டனர். இதனையடுத்து முதலாம் உரித்தாளர்களான தமது தடையை உடன் நீக்கி தமக்கான மானியத்தை வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இரணைமடு விவசாய சம்மேளனச் செயலர் மு.சிவமோகனிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது, அனுமதிக்கப்பட வேண்டிய விவசாயிகளின் பட்டியல், அதேநேரம் மானியம் நிறுத்தப்பட வேண்டிய விவசாயிக ளின் பட்டியல் கடந்த வாரம் கமநல சேவைத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றார்.

இவ்வாறு சம்மேளனச் செயலரின் பதில் தொடர்பில் கமநல சேவைத் திணைக்கள அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது, மாவட்டச்செயலரின் அனுமதியுடன் தடை செய்யப்பட்டமையால், புதிய அனுமதி மற்றும் தடைக்காக மாவட்டச்செயலருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்தவுடன் நடைமுறைப்படுத்தப்படும். என்று பதிலளித்தார். (க-105)

பெரிய புராண படல நிகழ்வு

பளை, நவ.19

பளை நரசிம்ம வைரவர் ஆலயத்தில் பெரிய புராண படல நிகழ்வு நாளை புதன்கிழமை தொடக்கம் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் புரணிகர்கள் மற்றும் அடியவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ)

20,000 ரூபா ஈருருளியை திருடி ரூ.500க்கு விற்பனை

புதிய ஈருருளி ஒன்றை திருடிய இளைஞன் அதை 500 ரூபாவுக்கு விற்பனை செய்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. அவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் மட்டக்களப்பு வாழைச்சேனையில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றுள்ளது.

வாழைச்சேனை மீராவோடை பகுதியில் மீனவர் தனது ஈருருளியை ஆற்றோரம் நிறுத்திவிட்டு மீன் பிடிக்கச் சென்றுள்ளார். அவர் திரும்பிவந்த போது ஈருருளி காணப்படவில்லை. அங்கு பொருத்தியிருந்த மறைகாணி பதிவை அவதானித்தபோது ஓர் இளைஞன் குறித்த ஈருருளியைத் திருடிச் செல்வது பதிவாகியுள்ளது. பொலிஸில் முறையிடப்பட்டது. சந்தேகநபர் அடையாளங்காணப்பட்டு பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். 20 ஆயிரம் ரூபாமதிப்புடையகுறித்தஈருருளியை 500 ரூபாவுக்கு விற்றுள்ளேன் என்று சந்தேகநபர் கூறியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (கு)

கோத்தாவுக்கு வாழ்த்துக்கள் எமது மக்களுக்கு நன்றிகள்

ரவூப் ஹக்கீம் உளடக அறிக்கை

அரசதலைவர் தேர்தலில் அமோக வெற்றியீட்டியுள்ள கோத்தபாய ராஜபக்சவுக்கு சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அதேவேளை, எமது கட்சியின் நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்டு சஜித் பிரேமதாசவுக்கு வாக்களித்த எமது ஆதரவாளர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம். இவ்வாறு சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது:

நாட்டின் பல பகுதிகளில் சீரற்ற காலநிலைக்கு மத்தியிலும் எங்கள் ஆதரவாளர்கள் ஜனநாயக விழுமியங்கள் மற்றும் தங்களுடைய வாக்குரிமையின் பலத்தைப் பாதுகாக்கும் வகையில் செயற்பட்டுள்ளார்கள். இது தொடர்ந்தும் எங்களுக்கோர் உந்து சக்தியாக அமைந்துள்ளது.

நாடு தழுவிய ரீதியில் அதிகூடிய வாக்களிப்பு வீதம் பதிவாகியுள்ளமை பொதுமக்கள் ஜனநாயகத்தின் மீது கொண்டுள்ளநம்பிக்கையைப்பிரதிபலிக்கின்றது. ஆனாலும் வாக்களிப்பு நடந்த விதம் எமது சமூகங்களுக்கு இடையிலான ஆழமான துருவப்படுத்தலை வெளிக்காட்டுகின்றது.

சகல இலங்கையர்களினதும் நலன் கருதிய செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான கடினமான முடிவுகளை எடுப்பதில் பலத்த சவால்களை நீங்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. சட்டம், ஒழுங்கை நிலைநாட்டு தல், சட்டத்தின் ஆட்சி, நாட்டின் பன்முகத்தன்மை மற்றும் ஜனநாயகத்தின் பெறுமதிகள் என்பவற்றைப் போஷிப்பதற்கான செயற்பாடுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டியுள்ளது.

உங்கள் நிர்வாகத்தின் கீழ் அமைதி, ஒற்றுமை, இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் மற்றும் சகல இனங்களுக்கும் மத்தியில் நிலைத்து நிற்கக் கூடிய நல்லெண்ணம் என்பவற்றுக்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்று நம்புகின்றோம்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலானது சமூக உறுதித் தன்மை மற்றும் பாதுகாப்பு என்பவற்றில் மன்னிக்க முடியாததும், அழிக்க முடியாததுமான வடுவை ஏற்படுத்தியுள்ளது. அத்தகைய பாரதூரமான இடரின் உண்மைத் தன்மையைக் கண்டறிவதற்கு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் முயற்சிகளில் எதிர்க்கட்சி பங்குபற்றாமை ஒரு கறையாகப் படிந்துள்ளது.

தேர்தல் பரப்புரைகளின்போது தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் தலைமைகள் மீது அநீதியானதும், அடிப்படையற்றதுமான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டதும் வருந்தத்தக்கவை.

எவ்வாறாயினும், தேர்தல் பெறுபேறுகளை உற்று நோக்குகையில், பெரும்பான்மை மேலாதிக்க மனோபாவமுள்ள நாட்டில் சகல சமூகத்தினரையும் உள்ளடக்கிய ஒன்றுபட்ட தேசமொன்றைக் கட்டியெழுப்புவதற்கான புதிய வாய்ப்பொன்று கிட்டியுள்ளது.

தேர்தலோடு ஒட்டியதான இனங்களுக்கிடையான துருவப்படுத்தலை நீக்கும் முயற்சிகள் துரிதமாக முன்னெடுக்கப்பட வேண்டும். வெவ்வேறு சமூகங்களுக்கிடையில் நல்லிணக்கம் மற்றும் உரிமைகளைப்பாதுகாப்பதற்கான சந்தர்ப்பமொன்று உங்களுக்கு வாய்த்துள்ளது.

வரலாறு அதற்கான சாளரமொன்றை மீண்டும் ஒருமுறை உங்களுக்குத் திறந்து தந்துள்ளது. இவ்வாறான ஒரு சந்தர்ப்பம் 2009ஆம் ஆண்டில் போர் நிறைவின் பின்னர் உங்களுக்கு முன்னொரு தடவையும் கிட்டியிருந்தது. உங்களுடைய வெற்றியில் பங்கெடுக்காத சிறுபான்மை மக்களின் கணிசமானோரின் மனங்களை வென்றெடுத்து, இனங்களுக்கிடையிலான இணைப்புப் பாலமாக அமைவதற்கும், குறுகிய வேறுபாடுகளுக்குஅப்பால்அனைத்து மக்களும் சமமானவர்கள் என்ற மனப்பதிவை ஏற்படுத்துவதற்கும் முன்வருவீர்கள் என்று நம்புகின்றோம். - என்றுள்ளது. (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையகத்தில் வெற்றிக் கொண்டாட்டம்



மலையகம்,நவ.19

நாட்டின் அரச தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட கோத்த பாயராஜபக்சநேற்றையதினம் தனது கட மை களைப்பொறுப் பேற்றுக்கொண்டார். இதனை யடுத்து சிறிலங்கா பொதுமக் கள் முன்னணியின் ஆதரவா ளர்கள் மலையகத்தில் பட்டாசு கள் கொளுத்தி மகிழ்ச்சியை வெளிக்காட்டினர்.அரச தலை வர் கோத்தபாய ராஜபக்சவின் உருவப் படங்களை ஏந்தி அவருக்கு வாழ்த்து தெரிவித்துக் கோசங்களையும் எழுப்பினர். இதன்போது தலவாக்கலை, லிந்துலை நகர சபையின் உறுப்பினர் உட்பட நகரவாசிகள், பிரதேசவாசிகள்எனப்பலரும்கலந்துகொண்ட னர். வழமைக்கு மாறாக அங்கு பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது.

இனங்களுக்கு இடையில் ஐக்கியம் ஏற்படுத்துவார்

கோத்தாவுக்கான வாழ்த்தில் ரிசாத் பதியுதீன் நம்பிக்கை

கொழும்பு, நவ. 19

புதிய அரசதலைவர் சகல இனங்களுக்கிடையிலும் சமாதானம், ஐக்கியம், சகோதரத்துவம், நம்பிக்கை மற்றும் பாதுகாப்பு ஆகியன நிலைகொள்ளும் வகை யில் செயற்படுவாரென்று நம்புகின்றோம் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் அமைச்சரு மான ரிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

இது பற்றி அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிறை வேற்று அரசதலைவராகக் கோத்தபாய ராஜபக்ச தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளார். அவருக்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மற்றும் எமது மக்கள் சார்பில் வாழ்த் துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசதலைவர் தேர்தலில் புதிய ஜனநாயக முன்னணி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளித்து வாக் களித்த அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது நாடென்ற வகையில் இன ஐக்கியத்துடனும் சகோதர மனப்பாங்குடனும் அனைத்துச் சவால்களை யும் எதிர்கொண்டு நாட்டை அபிவிருத்தியின் பால் இட்டுச்செல்ல புதிய அரசதலைவருக்கு வலிமையும் மனோதைரியமும் கிடைக்க வேண்டுமென்று பிரார்த் திக்கின்றேன்- என்றுள்ளது. (கு)

தோல்வியாளரைப் பார்ப்பதற்கு கண்ணாடி முன் செல்லுங்கள்!

வேட்பாளர் மகேஸ் சேனநாயக்க கருத்து

கொழும்பு, நவ. 19

நடைபெற்று முடிந்த அரச தலைவர் தேர்த லில் வெற்றிபெற்ற நப ரைப் பார்க்க வேண்டு மெனில் தொலைக் காட்சி முன்பாக நில்லுங் கள். தோல்வியடைந்த வேட்பாளரைப் பார்க்க வேண்டுமெனில் கண் ணாடிக்கு முன்பாகச் செல்லுங்கள் என்று தெரிவித்துள்ளார் அரச தலைவர் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர் களில் ஒருவரான மகேஸ் சேனநாயக்க. அரச தலைவர் தேர்தல் முடிவு கள் அறிவிக்கப்பட்ட பின்னர் கருத்து வெளியி டுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது:

அரச தலைவர் தேர்தல் முடிவுகள் வெளிவந்துள் ளன. மக்கள் வெற்றிய டைந்த நபரைப் பார்க்க வேண் டு மெ னின் தொலைக்காட்சிகளுக்கு முன்பாகச் செல்ல வேண்டும். தோல்விய டைந்த நபரைப் பார்க்க வேண்டுமெனில் கண் ணாடிக்கு முன்பாகச் செல்லவேண்டும். எனது அரசியல் பயணம் தொட ரும். இனிவரும் தேர்தல் களில் பெரிய கட்சிகளு டன் கூட்டணி அமைத்து தேர்தல்களில் போட்டியி டுவேன் -என்றார். (ம)

20 கோரிக்கைகள் கோத்தா நிறைவேற்றுவார்

பிரபா கணேசன் கூறுகின்றார்

கொழும்பு, நவ. 19

ஜனநாயக மக்கள் காங்கிரஸின் 20 அம்ச கோரிக்கைகளை அரசதலைவர் கோத்தபாய ராஜபக்ச ஊடாக நிறைவேற் றுவோம் என்று ஜனநாயக மக்கள் காங் கிரஸ் தலைவர் பிரபா கணேசன் தெரி வித்தார். இது பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:

கோத்தபாய வெற்றியடைய வாக்களித்த மக்களுக்கு நன்றி. அவருக்குச் சிங்கள மக்களே அதிகளவில் வாக்களித்துள்ள னர். வன்னி மாவட்டத்தில் தமிழர்களின் கரங்களைப் பலப்படுத்த வேண்டும். அடுத்த ஓரிரு மாதங்களில் வரப்போ கின்ற நாடாளுமன்றத் தேர்தலில் மாபெ ரும் வெற்றியை எனக்கு தருவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டிருக் கின்றது- என்றார். (த)

கோத்தாவுக்கு ஆனந்தசங்கரி வாழ்த்து

கோத்தபாய ராஜபக்ச அரசதலைவராகத்தெரிவு செய்யப்பட்டமைக்கு தமிழர் விடுதலைக் கூட் டணியின் செயலர் நாய கம் வீ.ஆனந்தசங்கரி வாழ்த்துத் தெரிவித்துள் ளார். ஒரு குழுவினர் ஒன்றிணைந்து தாங் கள் அரசதலைவராகத் தெரிவுசெய்யப்பட்டால் தமது கோரிக்கைகள் 13 இனை நிறைவேற்ற வேண்டுமென்று கூறியி ருந்தனர். அந்தக் குழு வில் பலர் இருந்தபோ தும் ஒருஅமைப்பைச் சேர்ந்தவர்கூடதம்முடன் இணை யும்படி என்னி டம் கோரிக்கை விட வில்லை. என்னுடன் தொடர்புகொண்டுஇணை யுமாறு கோரிக்கை விடப்பட்டிருந்தால் நிச்ச யமாக நான் அவர்களு டன் இணைந்திருக்க மாட்டேன் என்று அவர் ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோத்தாவுக்கு சங்கங்கார ஆலோசனை

கொழும்பு,நவ.19

புதிய அரச தலைவரான கோத்தபாய ராஜபக்சவுக்கு வாழ்த்து தெரிவித்துள்ள முன்னாள் கிரிக்கெட் நட்சத்திரம் குமார் சங்கக்கார அவருக்கு சில ஆலோசனைகளையும் வழங்கியுள்ளார்.

அரசியல்கட்சி, ஆதரவாளர்கள், குடும்பம் என்பவற்றுக்கு மேலாக அனைத்து இலங்கையர்களையும் உண்மையாக ஒன்றிணைக்கும் பார்வையும், வலிமையும் பெற வேண்டும்.

நாட்டிலுள்ள அனைத்து இலங்கையர்களினதும் பாதுகாப்பு, செழிப்பான வாழ்க்கையை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அவர் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். (க)

இறால் வளர்ப்பை மேம்படுத்த திட்டம்

கொழும்பு, நவ. 19

நாட்டில் இறால் வளர்ப்பை மேம்படுத்துவதற்கானதிட்டம்ஒன்றை முன்னெடுப்ப தற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தேசிய நீரியல் வள அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இறால் வளர்ப்பில் ஈடுபடுவோருக்குத் தேவையான தொழில்நுட்பம் சார்ந்த தெளிவூட்டல்களையும், அதற்கான உதவிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானம் இலங்கை இறாலுக்குப் பன்னாட்டுச் சந்தையில் நிலவும் கேள்வியைக் கருத்தில் கொண்டு எடுக்கப்பட்டுள்ளது என்றும் சபை தெரிவித்துள்ளது. (க)

சிறுபான்மையின மக்களுக்கு

அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுத்து இரு தேசங்களையும் ஒன்றாக்குங்கள்

வடக்கு - கிழக்கு சிவில் சமூக அமைப்பு அரசதலைவரிடம் கோரிக்கை

கொழும்பு, நவ. 19

சிறுபான்மை மக்களுக்கு அதிகாரப் பகிர்வை வழங்கி, ஜனநாயக ரீதியில் பிளவுபட்டு நிற்கும் இரண்டு தேசங்களையும் ஒன்றாக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுங்கள் என்று புதிய அரசதலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள கோத்தபாய ராஜபக்சவிடம் வடக்கு - கிழக்கு சிவில் சமூக அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையின் ஏழாவது அரசதலைவர் தேர்தலில் வடக்கு - கிழக்கு தமிழர்களான நாம் மீண்டும் ஒரு வரலாற்றுப் பதிவை ஏற்படுத்தியுள்ளோம்.

இலங்கை சுதந்திரம் பெற்ற காலம் தொட்டு தமிழ் மக்கள் இலங்கையின் தேசிய இனம் என்ற அடிப்படையில் தனக்கான உரிமைகளுக்காகப் போராடி வருகின்றனர்.

இலங்கையின் சுயநிர்ணய உரிமைக்கோரிக்கைக்கு உரித்துடைய தனியான இனக் குழுமம் என்ற அடிப்படையில் இலங்கையில் தனியான தாயகம், மொழி, பண்பாடு, கலாசார வரலாற்றைக் கொண்ட இனம் என்ற அடிப்படையில் நடந்து முடிந்த ஏழாவது அரசதலைவர் தேர்தலில் தமிழ் மக்களாகிய நாம் எமது தனித்துவத்தை மேலும் நிரூபித்துள்ளோம். எழுபது ஆண்டுகளைக் கடந்தும் தமிழர் தேசம் மீண்டும் தனது தனித்துவத்துடன் தனியாக நிமிர்ந்து நிற்கிறது.

அகிம்சைப் போராட்ட காலத்திலும், ஆயுதப்போராட்டகாலத்திலும் தமிழ்மக்கள்எந்தநிலைப்பாட்டை எடுத்தார்களோ அதே நிலைப்பாட்டை போர் நிறைவடைந்து பத்து ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் கையில் எடுத்துப் பயணிக்கின்றனர். நடந்து முடிந்த அரசதலைவர் தேர்தலில் வடக்கு - கிழக்கு தமிழர்கள் தங்களுடைய உரிமைக்காக மீண்டும் தன்னெழுச்சியாக ஒன்று பட்டு நிற்கின்றனர்.

இதனூடாக தமிழர் தேசம் சிங்கள தேசத்துக்கு மீண்டும் மீண்டும் தங்களுடைய சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கையைப் பறைசாற்றியுள்ளது. தமிழர்கள் இலங்கை பூமிப்பந்தில் தங்களுடைய வாக்குகளைக் கொண்டு ஜனநாயக ரீதியில் ஒரு வரைபடத்தை மீண்டும் உருவாக்கிக் காட்டியுள்ளனர்.

இதன் ஊடாக தமிழ் மக்கள் இந்த நாட்டில் கோரி நிற்பது அபிவிருத்தியையோ அல்லது சலுகைகளையோ அல்ல. சுயநிர்ணய உரிமையுடன் வாழக்கூடிய அதிகாரப் பகிர்வையே வேண்டி நிற்கின்றனர்.

இந்து சமுத்திரத்தின் முத்து என்று வர்ணிக்கப்படும் இலங்கை நாடு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்காது எந்த விதநிரந்தர அபிவிருத்தியையோ நல்லிணக்கத்தையோ கட்டியெழுப்ப முடியாது.

இந்த நாட்டில் தமிழ் மக்களின் உயிர் பலிகளும் தியாகங்களும் மதிக்கப்பட்டு அவர்களுடைதாயக பூமியில் அவர்கள் முழு அதிகாரம் கொண்ட மக்களாகக் ஒரு மித்த நாட்டுக்குள் வாழ்வதற்கு பதவி ஏற்கும் அரசு வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

வடக்கு - கிழக்கு தமிழர் தேசத்துக்கு தனது நேசக்கரத்தை நீட்டி இந்த நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முன்வர வேண்டும்.

இந்தத் தேர்தலில் தமிழ் மக்களின் முடிவை முடிந்த முடிவாக எடுத்து இலங்கை அரசும் பன்னாடுகளும் சிறுபான்மை இன மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைத்து அல்லது கடந்த அரசு ஆரம்பித்துள்ள அரசமைப்புத் திருத்தப் பணிகளை முன்னெடுக்க வேண்டும்.

அதனூடாக சிறுபான்மை மக்களுக்கான அதிகாரப் பகிர்வை வழங்கி ஜனநாயக ரீதியில் பிளவுபட்டுநிற்கும்இரண்டுதேசங்களையும் ஒன்றாக்குவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றுஇலங்கையில்புதிதாகபதவி ஏற்கவுள்ள அரசதலைவரிடம் இந்தக் கோரிக்கைகளை முன்வைக்கின்றோம்- என்றுள்ளது.(கு)

புதிய அரச தலைவராக கோத்தபாய ராஜபக்ச பதவி ஏற்றமை மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவின் பிறந்த தினக் கொண்டாட்டம் பதுளை மற்றும், பசறை போன்ற பகுதிகளில் இடம்பெற்றன. (க)

தேஞ்சுபோன தலைமைகளை நம்பினால் நன்மையே இராது

கூட்டமைப்பைச் சாடினார் கருணா

கொழும்பு, நவ. 19

தமிழ் மக்களின் தேசியக் கூட்டமைப்பின் தேஞ்சுபோன தலைமைகளை நம்பிக் கொண்டு வாக்குகளை வீணடித்துக் கொண்டிருந்தால் எதுவித நன்மையையும் தமிழ் மக்கள்பெறப்போவதில்லை. என்று தெரிவித்துள்ளார் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவரான கருணா அம்மான் என்றழைக்கப்படும் வி.முரளிதரன்.

அரசதலைவர் தேர்தல் முடிவுகள் வெளியாகிய பின்னர் களுவாஞ்சிக்குடியிலுள்ள அவருடைய அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த வெற்றியில் பங்கு பற்றாததன் மூலமாக, வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள்சிறந்தவாய்ப்பை இழந்திருக்கின்றார்கள்.

தமிழ் மக்கள் கோத்தபாயவுக்கு வாக்களித்திருந்தால் நாங்கள் உரிமையுடன் எங்கள் விடயங்களைக் கேட்டுச் சாதிப்பதற்கான நிலையிருந்தது.

மகிந்த ராஜபக்சவே தலைமைஅமைச்சராக வரவிருக்கின்றார். பாரபட்சமற்ற வகையில் விடயங்களைச் செய்வார்.

இருந்தபோதிலும் தமிழ் மக்கள் புத்திசாதுரியமாகச் செயற்பட வேண்டிய காலமாகவுள்ளது.

இந்த அரசதலைவர் தேர்தலில்கோத்தபாய தோல்வியடைந்திருந்தால் கிழக்கு மாகாணம் குழி தோண்டிப்புதைக்கப்பட்டிருக்கும் - என்றார். (கு)

ஐ.தே.க முழுமையாக சீரமைக்கப்பட வேண்டும்

சரத் பொன்சேகா தெரிவித்தார்

கொழும்பு, நவ. 19

ஐக்கிய தேசியக் கட்சி முழுமையாக மறுசீரமைக்கப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேக தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும்தெரிவித்ததாவது: ஐக்கிய தேசியக் கட்சி சீரமைக்கப்பட வேண்டும். குறிப்பாகக்கட்சித்தலைவரின் எண்ணங்களிலும் மாற்றங்கள் உருவாக வேண்டும். மக்கள்வழங்கியுள்ள ஆணையை ஏற்று அதற்கு ஏற்றால் போல் எனது எதிர்கால நடவடிக்கைகள் அமையும் -என்றார் (ஒ)

சட்டவிரோத தங்கத்துடன் இந்தியக் குடிமக்கள் கைது

கொழும்பு, நவ. 19

சட்டவிரோதமாகத் தங்கத்தைக் கடத்த முயன்ற இந்தியக்குடிமக்கள்மூவர் கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சென்னை செல்ல முயற்சித்தவேளை இவர்களின் செயற்பாட்டில் சந்தேகமடைந்து சோதனை மேற்கொண்டவேளை 1.540 கிலோ கிராம் தங்கத்தைக் கொண்டு செல்ல முயற்சித்த நிலையில் மூவரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்ப ட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் அனைவரும் மேலதிக விசாரணைகளுக்காக சுங்கப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டு ள்ளனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடங்கிய அபிவிருத்தி இனிமேல் தொடரும்

பொதுமக்கள் முன்னணியின் மட்டு அமைப்பாளர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, நவ. 19

மட்டக்களப்பு மாவட்டம் கடந்த நான்கரை வருடங்களாக அபிவிருத்தியில் பின்தங்கியிருக்கின்றது. இனி அபிவிருத்தி தொடரும் என்று சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் ப.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கோத்தபாய ராஜபக்ச அரசதலைவராகத் தெரிவாநிலையில் நேற்றுமுன்தினம் நடந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசதலைவர் தேர்தலின்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் சில கட்சிகள் இனவாதம் கதைத்ததனால்தான் எமது கட்சிக்கு இந்த மாவட்டத்தில் எதிர்பார்த்த அளவு வாக்குகள் கிடைத்திருக்கவில்லை. மாறாக பொதுமக்கள் முன்னணி கட்சி இனவாதக் கட்சியல்ல. அனைவரையும் அரவணைத்துச் செல்கின்ற கட்சி. இனவிகிதாசார அடிப்படையில்சகலருக்கும்அபிவிருத்திகளைப் பகிர்ந்தளிப்போம். இதுபோன்று இந்த மாவட்டத்தில் எமது கட்சி அமோக வெற்றிபெறும் - என்றார். (த)

புதிய அரச தலைவருக்கு வடக்கு ஆளுநர் வாழ்த்து

யாழ்ப்பாணம்,நவ.19

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 7 ஆவது நிறைவேற்று அதிகாரமுள்ள அரச தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள கோத்தபாயவுக்கு வடக்கு மாகாண மக்களுடன் இணைந்து வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன்.

அவரது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பன்னாட்டு ரீதியிலும், உள்நாட்டிலும் தனக்கான ஒரு இடத்தை மீள் நிலைநாட்டிக் கொள்வதற்குப் புதியதொரு வழி காட்டலும், தூரநோக்கும், அர்ப்பணிப்பு நிறைந்த கடின உழைப்பும் நமது தாய் நாட்டுக்குத் தற்போது தேவையாகவுள்ளது.

இன, மத, அரசியல் பேதமின்றி இலங்கையின் அனைத்து மக்களையும் தனது வெற்றிப் பயணத்தில்இணைத்துக்கொண்டு முன்னோக்கிச் செல்வதற்கு புதிய அரச தலைவருக்கு தைரியமும் நம்பிக்கையும்கிடைப்பதற்கு வடமாகாண மக்கள் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜனநாயகம், சமத்துவம் நிறைந்த வளமான ஒன்றுபட்ட இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கு வடமாகாண மக்கள் தம்மை அர்ப்பணித்துள்ளார்கள். நமது தாய்நாடு எப்பொழுதுமே ஆசீர்வதிக்கப்படும். என்றுள்ளது. (க)

கோத்தாவின் கொண்டாட்டத்தில் பங்கேற்ற மகிழுந்து விபத்து

ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, நவ. 19

கோத்தபாய ராஜபக்சவின் பதவியேற்பு விழாவில் பங்குபற்றி சிலர் பயணித்த மகிழுந்து விபத்துக்கு உள்ளானது. அதில் பயணித்த நபரொருவர் உயிரிழந்தார்.

300 அடி பள்ளத்தில் பாய்ந்து குறித்த மகிழுந்து விபத்துக்கு உள்ளானது. 48 வயதுடைய நிமல் திஸநாயக்க என்ற நபரே உயிரிழந்தார். மூன்றுபேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ம)

தமிழ் மற்றும் சிங்கள மக்களின் சமகால வேணவாக்கள் வேறு

அவற்றையே தேர்தல் முடிவுகள் காண்பிக்கின்றன செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. தெரிவிப்பு

வவுனியா,நவ.19

தமிழ் மக்களினதும் சிங்கள மக்களினதும் சமகாலத்து வேணவாக்கள் வேறு வேறானவை என்பது தேர்தல் முடிவுகளில் பிரதிபலிக்கின்றன என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

அவர் அனுப்பிய ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நடந்து முடிந்த இலங்கையின் அரசதலைவர் தேர்தலில் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச பெரும்பான்மை வாக்குகளால் வெற்றிபெற்று அரசதலைவராகியுள்ளார். இந்தத் தேர்தலின் முடிவுகள் தமிழ் மக்கள் ஜனநாயகக் கடமையை ஒற்றுமைப்பட்டு வெளிப்படுத்தியுள்ளமையும் என்னென்ன காரணங்களுக்காக சஜித் பிரேமதாசவுக்கு வாக்களிக்கவேண்டுமென்று தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (தமிழ்தேசிய கூட்டமைப்பு) மக்களை உரிமையோடு கேட்டுக்கொண்டதோ, அந்தக் காரணங்கள் அனைத்தும் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டதையும் வெளியப்படுத்தியுள்ளது.

தமிழ் மக்களில் மிகப் பெரும்பான்மையானவர்களின்உணர்வுகளும் உள்ளக்கிடக்கைகளும் ஒவ்வொரு வாக்குகளினாலும் உலகத்துக்கு உணர்த்தப்பட்டுள்ளது. எமது மக்களின் நீண்டகால அபிலாசைகள் தீர்த்துவைக்கப்படாத அன்றாட பிரச்சினைகள், கேள்விகளுக்குள்ளாக்கப்பட்டுள்ள எதிர்கால வாழ்வு என இவையெல்லாம் ஏமாற்றங்களாக தொடர்வதின் நீட்சியே வாக்குகளுடாகப்பிரதிபலிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, பெரும்பான்மைச் சிங்கள மக்களின் நிலைப்பாடு தமிழ் மக்களின் நிலைப்பாட்டிலிருந்து வேறுபட்டு நிற்கின்றது. காலம் காலமாக சிங்கள தலைமைகள் தமிழ் மக்களின் உணர்வுகளையும் கோரிக்கைகளையும் ஏமாற்றிக் கொண்டிருப்பதும் உதாசீனப்படுத்துவதும் தெரிந்தும் பெரும்பான்மை இனம் துணைநிற்பது வருத்தமானதே.

சிங்கள தலைமைகள் சிங்கள பெரும்பான்மை மக்களைத் தவறாக வழிநடத்திக்கொண்டு அரசியல்நன்மைகளை அனுபவிக்கவே விரும்புகின்றார்கள். ஒன்றுபட்ட இலங்கைக்குள் சிங்கள தேசம் அனுபவிக்கின்ற அனைத்து உரிமைகளையும் தமிழ் மக்களும் அனுபவிக்கவேண்டும் என்று கோருவதில் தவறொன்றும் காணமுடியாது.

புதிதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள அரசதலைவர் கோத்தபாய ராஜபக்சவும் சிங்கள மக்களும் இதைப் புரிந்துகொள்ளவேண்டும். தமிழ் மக்களினதும் தெற்கின் சிங்கள மக்களினதும் சமகாலத்து வேணவாக்கள் வேறு வேறானவை என்பது தேர்தல் முடிவுகளில் பிரதிபலிக்கின்றன. வெவ்வேறான பார்வைகளினூடாகவும், அணுகுமுறைகளினூடாகவுமே தமிழ் சிங்கள மக்களின் பிரச்சினைகள் ஆராயப்பட்டு தீர்க்கப்படவேண்டும். புதிய அரசதலைவர் தனது 5 வருடங்கள் பதவிக் காலத்தில் இயலுமான வரை கடந்த அரசுகள் விட்ட தவறுகளை பாடமாகக்கொண்டு திருத்தங்களுடன் பயணித்தால் நாட்டின் ஒவ்வொரு குடிமக்களுக்கும் வாழ்வுண்டு.

இந்தநிலையில் தமிழ் மக்களின் எண்ணச் சிந்தனைகளை ஏற்றுக் கொண்டு இரு முதன்மை வேட்பாளர்களில் சிறந்தவர் யாரென்று எமது மக்களிடம் நாம் கூற அதை சிரமேல் ஏற்று

தமிழர் ஒற்றுமையை மீண்டும் ஒரு தடவை நிரூபித்துக் காட்டிய எமது உறவுகளுக்கு எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்து கொள்கின்றேன்.

வீட்டுக்கு வீடு ஊடகங்கள் ஊடாக எமது கோரிக்கைகளை எடுத்து சென்று மக்களிடம் கொண்டு சேர்த்து அரும்பணியாற்றிய ஊடகவியலாளர்கள் அனைவருக்கும் மனமுவந்து நன்றிகளைத் தெரிவித்துகொள்கின்றேன்.

பெரும்பான்மை தமிழ் மக்களால் கோத்தபாய ராஜபக்ச நிராகரிக்கப்பட்டாலும் இன்னொரு பெரும்பான்மை இனத்தை சார்ந்தவருக்கே தமிழ் மக்கள் வாக்களித்திருந்தார்கள். இது அரசியல் ரீதியான முடிவே தவிர இன ரீதியானதல்ல என்பதைப் புதிய அரசதலைவர் புரிந்துகொள்ளவேண்டும். அவர் ஒட்டுமொத்த நாட்டின் அரசதலைவர் என்பதனை ஏற்றுக் கொண்டு மக்கள் மனங்களை வெல்ல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் - என்றுள்ளது. (த-110)

அரச தலைவர் பதவியேற்பு; மன். வெற்றிக்கொண்டாட்டம்

மன்னார்,நவ.19

நாட்டின் அரசதலைவராக தெரிவு செய்யப்பட்ட கோத்தபாய ராஜபக்ச நேற்றைய தினம் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்நிலையில் மன்னார் மாவட்டத்தில் உள்ள அவரது ஆதரவாளர்கள் மதியம் மன்னார் பஸார் பகுதியில் பாற்சோறு வழங்கி வெற்றிக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணிக் கட்சியின் மன்னார் மாவட்ட அமைப்பாளரும்,மன்னார் நகர சபை உறுப்பினருமான செல்வக்குமரன் டிலான் தலைமையில் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

இதன்போது பஸார் பகுதியில் பட்டாசு கொழுத்தியதுடன் பொது மக்களுக்கு தமது மகிழ்சியைத் தெரிவித்து பாற்சோறு வழங்கப்பட்டது.

இது தொடர்பில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் மன்னார் மாவட்ட அமைப்பாளரும்,மன்னார் நகர சபை உறுப்பினருமான செல்வக்குமரன் டிலான் கருத்து தெரிவிக்கையில் "இலங்கை நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட 7 ஆவது அரச தலைவராக பதவியேற்றுள்ள சிறிலங்கா பொது மக்கள் முன்னணியின் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவின் வெற்றியை சிறுபான்மை மக்களாகிய நாம் கொண்டாடுகின்றோம்.

இவரின் வெற்றிக்காக பாடுபட்ட அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ-56)

புதையல் அகழ்வில் ஈடுபட்டவர்கள் கைது

கொழும்பு, நவ. 19

தெதிகம- கெடவல தெனிய பிரதேசத்தில் புதையல் அகழ்வில் ஈடுபட்ட நான்கு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று பிற்பகல் 3.15 மணியளவில் 119 என்ற பொலிஸ்அவசரதொலைபேசிசேவைக்குகிடைக்கப்பெற்றதகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தெதிகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு, கிழக்கில் மழைக்கு வாய்ப்பு

யாழ்ப்பாணம், நவ. 19

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலும் பல தடவைகள் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பல இடங்களில் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மேல், சப்ரகமுவ, மத்திய, ஊவா மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 தொடக்கம் 100 மில்லி மீற்றர் அளவான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் மின்னல் தாக்கங்களினாலும் பலத்த காற்றினாலும் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

அதேவேளை மன்னாரிலிருந்து புத்தளம், கொழும்பு மற்றும் காலி ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளில் பல இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

கொழும்பிலிருந்து காலி வரையான கடற்பரப்புகளில் ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. நாட்டின் கிழக்குப் பகுதி கடற்பரப்புகளில் சிறிதளவான மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது வடகிழக்கு முதல் கிழக்கு வரையான திசைகளிலிருந்து வீசக்கூடுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 20 தொடக்கம் 30 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற்பகுதிகளில் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 70 தொடக்கம் 80 கிலோ மீற்றர் வரை பலமான காற்று வீசுவதுடன் அக்கடற் பிரதேசங்கள் மிகவும் கொந்தளிப்பாகவும் காணப்படும் என்றுள்ளது. (ம)

கோத்தபாயவின் வெற்றி தொடர்பான

தேரர்களின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள முடியாது

இ.தொ.கா. கண்டிக்கிறது

பதுளை, நவ. 19

கோத்தபாய ராஜபக்சவின் வெற்றிக்குப் பெரும்பான்மை மக்களின் பங்களிப்பு மட்டுமே காரணமென்று தேரர்களும், ஒரு சிலரும் கூறுவதை ஏற்றுக்கொள்ளமுடியாது. இத்தகைய கருத்துக்கள் வேதனையளிக்கின்றன என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் துணைச்செயலரும் பதுளை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான டி.வி. சென்னன் தெரிவித்தார்.

அவருடைய பதுளைப் பணிமனையில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கோத்தபாயவின் வெற்றிக்கு பங்குதாரர்களாக நாமும், எமது மக்களும் இருந்து வருகின்றோம். அப்படியிருக்க பௌத்த தேரர்கள் வெளியிட்ட கருத்துக்கள் கண்டிக்கப்பட வேண்டியது. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின், கருத்துக்களையும் எம்மால் ஜீரணிக்க முடியவில்லை.

நாட்டின் அரசதலைவர் இன, மத, கட்சி பேதமின்றி அனைத்து மக்களையும் அரவணைத்துச் செல்லவேண்டும். அவருடைய சேவைகள் பாகுபாடுகள் பாரபட்சங்களின்றி அமைய வேண்டும். அதனை புதிய அரசதலைவர் எள்ளளவும் குறையாமல் மேற்கொள்வாரென்பதில் மாற்றுக் கருத்துக்களுக்கு இடமில்லை.

நாட்டின் அரசதலைவர் எனும்போது, அவர் ஒரு சமூகத்துக்கு அல்லது மதத்துக்குச் சார்ந்தவராக இருக்க முடியாது. இதனை தேரர்களும், ஒரு சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் உணர்ந்துகொள்ள வேண்டும். பௌத்த தேரர்கள் தமிழ், முஸ்லிம் மக்களின் மனம் புண்படும் விடயத்தில் கருத்துக்களை வெளியிடுவதை இனியாவது நிறுத்திக் கொள்ளல் வேண்டும். அவர்கள் அணிந்திருக்கும் காவி உடைகளுக்கு அவர்கள் மதிப்பளிக்க வேண்டும். மதகுருமார்கள் அனைத்து மத மக்களையும், அரவணைத்துச் செல்லவேண்டும்.

புதிய அரசதலைவர் அனைத்தையும் கடந்த நிலையில், அனைத்து இன, மத மக்களையும் இணைத்துச் செயற்படவே செய்வார். இன, மத விரோத செயற்பாடுகளை, எவர் மேற்கொண்டாலும் , அவர்களுக்கெதிராக தகுதி, தராதரம் பாராது எதிர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்- என்றார். (த)

2 அமைச்சர்கள் பதவி விலகினர்

கொழும்பு, நவ. 19

இலங்கை அரச தலைவர் தேர்தலில் புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாச தோல்வியடைந்ததை அடுத்து, இரு அமைச்சர்கள் நேற்றுப் பதவி விலகினர். அமைச்சர்கள் சம்பிக்க ரணவக்க, அசோக அபேசிங்க ஆகியோரே அவ்வாறு பதவி விலகியவர்களாவர். தேர்தல் முடிவுகள் வெளியானதை அடுத்து, ஜதேகவைச் சேர்ந்த மங்கள சமரவீர, கபீர் காசிம், மலிக் சமரவிக்ரம, ஹரின் பெர்னான்டோ, அஜித் பெரேரா ஆகியோர் நேற்றுமுன்தினம் பதவி விலகினர்.

இந்த நிலையில், ஜாதிக ஹெல உறுமயவின் தலைவரான, அமைச்சர் சம்பிக்க ரணவக்க நேற்றுப் பதவி விலகினார். அதேவேளை போக்குவரத்து, சிவில் வானூர்தி சேவைகள் இராஜாங்க அமைச்சர் அசோக அபேசிங்கவும் பதவி விலகியுள்ளார். (ம)

அச்சமின்றி வாழும் சூழல் இனி ஏற்படும்

பசில் ராஜபக்ச தெரிவிப்பு

கொழும்பு, நவ. 19

அச்சமின்றி, அனைவரும் தேசிய பாதுகாப்புடன் வாழும் சூழல் இனித் தோற்றுவிக்கப்படும்.

அரச தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள கோத்தபாய ராஜபக்ச அதற்காகச் செயற்படுவார் என்று பொதுமக்கள் முன்னணியின் நிறுவுநர் பசில் ராஜபக்ச தெரிவித்தார்.

முன்னணி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

எதிர்பார்த்ததைப் போன்று அரசதலைவர் தேர்தலில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி அமோக வெற்றிபெற்றுள்ளது. கிடைக்கப் பெற்றுள்ள வெற்றியை அனைவரும் அமைதியான முறையில் கொண்டாட வேண்டும். மாறுபட்ட வழிமுறைகளில் பல்வேறு நெருக்கடிகள் ஏற்படுத்தப்பட்டன.

நாட்டின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு பொதுமக்கள் முன்னணியின் அரசதலைவர் வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்ட கோத்தபாய ராஜபக்சவுக்கு ஆரம்பத்திலிருந்து உதவி வழங்கியவர்களுக்கு நன்றி.

கோத்தபாய வெற்றியடைவதற்கு அனைவருடைய ஒத்துழைப்பும் தொடர்ந்தும் அவசியம். கடந்த காலங்களில் நாட்டில் இருண்ட யுகம் காணப்பட்டது.

குறிப்பிட்ட தரப்பினர் மாத்திரமல்லாமல் அனைவரும் அனைத்து விடயங்களிலும் முன்னேற்ற மடைவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுப்போம்- என்றார். (த)

வேட்பாளர் வெற்றிபெற்றாலும் மக்களே தோல்வியடைந்தனர்

வேட்பாளராகப் போட்டியிட்ட அநுர தெரிவிப்பு

கொழும்பு, நவ. 19

அரசதலைவர் தேர்தலில் ஒரு வேட்பாளர் வெற்றியடைந்துள்ளாரெனினும், மக்கள் வெற்றியடையவில்லையென்று தெரிவித்துள்ளார் அநுரகுமார திசநாயக்க.

தேசிய மக்கள் சக்தியின் சார்பில் அரசதலைவர் தேர்தலில் போட்டியிட்ட அநுரகுமார திசநாயக்க நேற்றுமுன்தினம் வெளியிட்ட ஊடக அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஆட்சிக்கு வந்தவர்களுக்கு மக்கள் எதிர்கொள்ளும் சமூகபொருளாதார மற்றும் அரசியல்பிரச்சினைகளைத் தீர்க்க தீர்வுகள் இல்லை என்று தெரிவித்துள்ள அவரிடம், எதிர்பார்த்தளவு வாக்குகளைப் பெற்றுக்கொள்ள முடியவில்லையென்ற ஏமாற்றமும் அந்த அறிக்கையில் வெளிப்பட்டது.

"எதிர்பார்த்த அளவுக்கு அதிகமான வாக்குகளைப் பெறவில்லை என்பதை நாங்கள் ஒப்புக் கொள்ள வேண்டும்.

எனினும், நாட்டின் கொள்கைகளைப் பற்றி ஆழமாக விவாதிக்க பல நபர்களை ஈடுபடுத்தும் திறன் எமது இயக்கத்துக்கு நீண்டகால சாதனை" என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசதலைவர் தேர்தலின்போது, வசை, தவறான மொழிகளை பயன்படுத்தல், மலிவான வாக்குறுதி போன்ற செயல்களில் தாங்கள் ஈடுபடவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

தமக்கு வாக்களித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்த அவர், "நாங்கள் மக்களிடையே உருவாக்கிய நம்பிக்கை இறந்துவிடவில்லை. நாங்கள் எங்கள் போராட்டத்தைத் தொடருவோம், எந்தச் சூழ்நிலையிலும் பின்வாங்கமாட்டோம்" என்றும் தெரிவித்துள்ளார். (த)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கோத்தபாய வெற்றிபெற்றுவிட்டார் தமிழருக்கு இனித் தமிழீழமே தீர்வு

இப்படிக் கூறுகின்றார் இந்திய பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ்

கொழும்பு, நவ. 19

இலங்கை அரசதலைவர் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ச வெற்றி பெற்றிருப்பதால், தமிழர் களுக்குத் தமிழீழமே நிரந்தரத் தீர்வாக அமையும் என்று பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் நடைபெற்ற அரசத லைவர் தேர்தலில், ஈழத் தமிழர்க ளின் எதிர்காலப் பாதுகாப்புக் கருதி, எது நடக்கக் கூடாது என்று உலகம் முழுவதுமுள்ள தமிழர்கள் வேண் டினார்களோ, அது நடந்து விட்டது. அதாவது கோத்தபாய ராஜபக்ச அரசதலைவராகத் தெரிவுசெய்யப் பட்டுவிட்டார்.

இது இலங்கையில் அமைதியை ஏற்படுத்த எந்த வகையிலும் உத வாது.

ஐக்கிய தேசிய முன்னணியின் வேட் பாளர் சஜித் பிரேமதாசவும் கோத்த பாய ராஜபக்சவும் தமிழர்களுக்கு ஆதரவானவர்கள் அல்ல என்ற போதிலும், இந்த இருவரில் எவர் மிகவும் மோசமானவர், எவர் கொஞ்சம் மோசமானவர் என்ற அடிப்படையில்தான், அரசதலை வர் தேர்தலில் யாருக்கு வாக்க ளிக்க வேண்டும் என்பதை இலங் கையில் வாழும் தமிழர்கள் தீர்மா னிக்க வேண்டியிருந்தது.

அவர் வெற்றி பெற்றுள்ள நிலை யில் தமிழர்களுக்கு எதிராக அடக் குமுறைகள் கட்டவிழ்த்து விடப்படு வதற்கான அறிகுறிகள் தென்படத் தொடங்கியுள்ளன.

2009ஆம் ஆண்டு ஈழப் போரில் ஒன்றரை இலட்சம் தமிழர்களைக் கொடூரமான முறையில் படுகொ லைசெய்த போர்க்குற்றவாளிகள் எவரும் இனி தண்டிக்கப்பட மாட் டார்கள்.

போர்க்குற்றவாளியான கோத்த பாய ராஜபக்சவே அரசதலைவராக வந்துள்ள நிலையில், எந்தவித மான போர்க்குற்ற விசாரணையும் இனி நடக்காது. இதுவரை இரண் டாம் தர குடிமக்களாக நடத்தப்பட்ட தமிழர்கள், இனி நான்காம் தர குடி மக்களாக நடத்தப்படுவர்.

இத்தகைய சூழலில் இலங்கையில் வாழும் தமிழர்களின் நலன்களை இனி எவ்வாறு காப்பாற்றலாம்? என்பது குறித்து இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் சிந்திக்க வேண்டும். இலங்கை தேர்தல் முடிவுகள் இன் னொரு கள யதார்த்தத்தை வெளிப் படுத்தியுள்ளன.

தமிழர்கள் தனித் தீவாகவும், சிங்க ளவர்கள் தனித்தீவாகவும் வாக்க ளித்திருப்பது இரு இனங்களும் இனி சேர்ந்து வாழ வாய்ப்பில்லை என்பதையே காட்டுகின்றன. இதை அனைத்து உலக நாடுகளும் புரிந்து கொள்ள முயற்சிக்க வேண் டும். அரச தலைவர் தேர்தல் முடிவு கள் சொல்லும் பாடங்களையும், புதிய அரசதலைவர் தமிழர்களுக்கு எதிராக ஏவுவதற்குக் காத்திருக்கும் அடக்கு முறைகளையும் வைத்துப் பார்க்கும்போது ஈழத்தமிழர்களுக்கு தனித் தமிழீழம் அமைத்துத் தரு வது தான் ஈழப் பிரச்சினைக்குச் சிறந்த தீர்வாக அமையும்.

அரச தலைவர் தேர்தல் முடிவு களையே அதற்கான பொதுவாக் கெடுப்பு முடிவாகக் கருதலாம் என் றாலும் கூட, தேவைப்பட்டால் மீண் டும் ஒருமுறை பொதுவாக்கெடுப்பு நடத்தியாவது தனித்தமிழீழம் அமைத்துக் கொடுக்க ஐ.நா. அமைப்பு முன்வர வேண்டும். இதற் காக ஐக்கிய நாடுகள் அமைப்பை இந்தியா உள்ளிட்ட நாடுகள் வலியு றுத்த வேண்டும்- என்றார். (த)

மனிதநேயத்துடன் செயற்படவேண்டும் கோத்தபாய ராஜபக்ச

மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்

கொழும்பு, நவ. 19

இலங்கையின் அரச தலைவ ராகத் தேர்ந்தெடுக்கப்பட் டுள்ள கோத்தபாய ராஜபக்ச மனசாட்சியுடனும், மனிதநே யத்துடனும், சமத்துவத்துட னும் நடந்து கொள்ள வேண் டும் என தி.மு.க நம்பிக்கையு டன் எதிர்பார்க்கிறது என அந்தக் கட்சியின் தலைவரும் தமிழக எதிர்க்கட்சித் தலைவருமான ஸ்டாலின் வலியு றுத்தினார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:

இலங்கை அரச தலைவர் தேர்தலில் கோத்தபாய ராஜ பக்ச 50 சத வீதத்துக்கும் அதிகமான வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளது கண்டு, ஈழத்தமிழர்கள் உள்ளிட்ட உலகத் தமிழர்கள் அதிர்ச்சியும், ஏமாற்ற மும் அடைந்திருக்கிறார்கள்.

கோத்தபாய ராஜபக்சவின் வெற்றியை இன்றைய சூழ லில் ஜனநாயக ரீதியாக கடந்து போகவும் முடியாது. அவருடைய பழைய வரலாறு, ஈழத் தமிழ் மக்களுக்கு முற்றிலும் எதிரானது என்பதையும் அதனால் ஏற்பட்ட கொடுமையான விளைவுகளையும் இன்னும் தீர்வு காணப்படாமல் இருக்கும் பிரச்சினைகளையும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையமும் உலக நாடுகளும் நன்கு அறியும்.

முன்னர் கொண்டிருந்த பகை ஆதிக்க மேலாண்மை உணர்ச்சியில் இருந்து அவர் விடுபட்டு, தமிழ் மக்கள், அரசியல் சட்ட ரீதியாக இலங்கையின் அனைத்து உரி மைகளும் படைத்த குடிமக்களே என்பதை உணர்ந்து, அதற்கேற்ப மனசாட்சியுடனும், மனிதநேயத்துடனும், சமத்துவத்துடனும் நடந்து கொள்ள வேண்டும் எனவும் அது ஒன்றே அவருடைய அரசியல் வாழ்க்கையில் பொருள் பொதிந்த புதிய பாதையாக அமைந்திடும் என்றும் உலகச் சமுதாயம் எதிர்பார்க்கிறது.

கோத்தபாயவின் வெற்றிக்கு வாழ்த்து தெரிவித்துள்ள மோடியும், பாரதிய ஜனதா கட்சியும் ஈழத்தமிழர்களின் நலனையும், உரிமைகளையும் பாதுகாத்திடத் தேவை யான அனைத்து நடவடிக்கைகளையும் தொடக்கத்தி லிருந்தே மேற்கொள்ளவேண்டும் என்பது உலகத்த மிழர்களின் ஒருமித்த எதிர்பார்ப்பு - என்றுள்ளது. (ம)

கோத்தாவின் செயலராக ரோகித?

கொழும்பு,நவ.19

மகிந்த ராஜபக்சவின் கடைசி மகனான ரோகித ராஜபக்ச, புதிய அரச தலைவர் கோத்தபாய ராஜபக்சவின் தனிப்பட்ட செயலராக நியமிக்கப்பட வுள்ளார் என்று சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள் ளது.

கோத்தபாய ராஜபக்ச நேற்று சுபநேரத்தில் தனது பதவியை ஏற் றார்.

அதனைத் தொடர்ந்து அவரது பிரத்தியேகச் செயலராக ரோகித ராஜபக்ச இணைத்து கொள்ளப்படவுள்ளார் என்று அந்தச் செய்தி யில் தெரிவிக்கப்பட் டுள்ளது. (க)

சில கட்சிகள் இணைந்து

இனவாதம் வெளிப்படுத்தியதால்தான் மட்டக்களப்பில் தோற்றது பெரமுன

அதன் அமைப்பாளர் பரமசிவம் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 19

நடைபெற்று முடிந்த அரச தலைவர் தேர்த லின்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் சில கட்சி கள் இனவாதம் கதைத்த மையால்தான் சிறி லங்கா பொதுமக்கள் முன்னணிக்கு எதிர் பார்த்த அளவு வாக்குகள் கிடைத்திருக்கவில்லை என பொதுமக்கள் முன் னணியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் பரமசிவம் சந்திரகுமார் தெரிவித்தார். களுதாவ ளையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நேற்றுத் திங்கட்கிழமை காலை ஊடகங்களுக் குக் கருத்துத் தெரிவிக் கும் போதே அவர் இவ் வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது:

'மட்டக்களப்பு மாவட்டம் கடந்த நான்கரை வருட காலமாக அபிவிருத்தி யில் பின்தங்கியிருக்கின் றது. எனவே நாங்கள் இந்தமாவட்டத்தின்தேவை களை இனம்கண்டு தீர்த்து வைப்பதற்குரிய நடவடிக்கைகளை முன் னெடுக்கவுள்ளோம். மட் டக்களப்பு இருதயபுரத் தில் அமைந்துள்ள கட்சி யின் செயலகத்தில் மக் கள் தமது கோரிக்கை களை முன்வைக்கலாம். நடைபெற்று முடிந்த அரச தலைவர்தேர்தலின்போது மட்டக்களப்பு மாவட்டத் தில் சில கட்சிகள் இனவா தம் கதைத்தமையால் தான் எமது கட்சிக்கு இந்த மாவட்டத்தில் எதிர் பார்த்த அளவு வாக்குகள் கிடைத்திருக்க வில்லை. எமது கட்சி ஒரு இனவா தக் கட்சியல்ல. அனைவ ரையும் அரவணைத்துச் செல்கின்ற கட்சியாகும். இருந்த போதிலும் எமது வேட்பாளர் அமோக வெற்றிபெற்று அரச தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். எதிர்வரும் காலங்களில் எமது அரச தலைவர் கோத்தபாயவால் மட்டக்க ளப்பு மாவட்டத்தில் சகல அபிவிருத்திகளும் நடை பெறும். இனவிகிதாசார அடிப்படையில் சகலருக் கும் அபிவிருத்திகளைப் பகிர்ந்தளிப்போம்.

நடைபெற்று முடிந்த அரச தலைவர் தேர்த லில் எமது கட்சியினால் முன்னிறுத்தி தற்போது அரச தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருக் கின்ற கோத்தபாய ராஜ பக்சவுக்கு வாக்களித்த அனைத்து மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கும் கட் சியின் அமைப்பாளர் என்ற ரீதியில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்' என்றார். (ம)

இலங்கை சோசலிச குடியரசின் 7 அரச தலை வராகப் பதவிப் பிரமானம் செய்து கொண்ட கோத்தபாய ராஜபக்சவுக்கு வாழ்த்து தெரி வித்து, மலையகத்தில்நேற்றுக்கொண்டாட்டங் கள் நடைபெற்றன. இதன் ஒரு கட்டமாக புஸ்ஸல்லாவ நகரத்தில் ஆதரவாளர்கள் வெடி கொழுத்தி ஆரவாரத்தில் ஈடுபட்டனர். (க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், நவ. 19

யாழ்ப்பாணம் வடமராட்சி வலயத்தில் உள்ள கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்துக்கு அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அதிபர் பதவிக்கு விண்ணப்பிப்போர் இலங்கை அதிபர் சேவையில் தரம் III தரமுடையவர்களாக இருத்தல் வேண்டும், வடமராட்சி வலயத்துக் குட்பட்ட பாடசாலைகளில் நிரந்தரமாக சேவையாற்றுபவர்களாக இருத்தல் வேண்டும், விண்ணப்பதாரி ஆகக் குறைந்தது மூன்று வருடங்களுக்கு கடமையாற்றக் கூடிய வயதெல்லையை உடையவராக இருத்தல் வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி எதிர்வரும் 26 ஆம் திகதி என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

விண்ணப்பப் படிவங்களை வலயக் கல்வி அலுவலகத்தின் கல்வி நிர்வாகப் பிரிவில் பெற்றுக் கொள்ள முடியும் என வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ)

கோத்தாவுக்கு அமெரிக்க தூதுவர் வாழ்த்து

கொழும்பு, நவ. 19

புதிய அரச தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள கோத்தாபய ராஜபசவுக்கு அமெரிக்கத் தூதுவர் அலய்னா ரெப்லிட்ஸ் வாழ்த்து தெரிவித்துள்ளார். 'சக்தி வாய்ந்த இறையாண்மை மிக்க இலங்கைக்காக நல்லாட்சி, பொருளாதாரம், மனித உரிமைகள் முன்னேற்றம் மற்றும் சீர்திருத்தங்கள் ஊடாக புதிய அரச தலைவருடன் இணைந்து நடவடிக்கைகளை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம். அமைதியான முறையில் தேர்தலை நடத்தியமைக்குப் பாராட்டு" என்றும் அவர் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். (க)

எமது அணி பின்னடைவேயன்றி எமக்கு ஆதரவு குறையவில்லை

வேலுகுமார் எம்.பி. கூறுகின்றார்

கொழும்பு, நவ. 19

அரசதலைவர் தேர்தல் தொடர்பில் தமிழ் முற்போக்குக் கூட்டணியாக நாம் எடுத்த முடிவு சரியானது என்பதையே தமிழ் மக்கள் வழங்கியுள்ள பேராதரவு உறுதிப்படுத்துகின்றது. எனவே, இந்தத் தேர்தலில் நாம் ஆதரித்த அணி, பின்னடைவைச் சந்தித்திருந்தாலும் எமக்கான மக்கள் பலத்தில், ஆதரவில் எவ்வித வீழ்ச்சியும் ஏற்படவில்லை.

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

அரசதலைவர் தேர்தல் என்ற முதல் சுற்றில் தற்காலிக பின்னடைவு ஏற்பட்டிருந்தாலும் நாடாளுமன்றத் தேர்தல் என்ற 2 ஆம் சுற்றில் மீண்டெழுவதற்கான வாய்ப்பு இருக்கின்றது. அந்த வாய்ப்பை உரிய வகையில் பயன்படுத்திக்கொள்வது குறித்து ஐக்கிய தேசியக் கட்சியும் அதன் பங்காளிகளும் சிந்திக்கச் சிறப்பான அரசியல் முடிவுகளை எடுக்க வேண்டும். ஜனநாயக மக்கள் முன்னணியின் கண்டி அலுவலகத்தில் மாவட்ட செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பு நேற்று நடைபெற்றது. அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக்கட்சி தலைமையிலான கூட்டணிக்கு ஏற்பட்ட இந்தத் தோல்வி, தற்காலிக பின்னடைவு. எங்கு தவறிழைக்கப்பட்டுள்ளது என்பதை முதலில் ஆராயவேண்டும். உரிய வகையில் தயாராகி நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொண்டால் நிச்சயம் வெற்றிபெறலாம். இதனைவிடுத்து கட்சி அரசியலையும், நபர்களையும் முன்னிலைப்படுத்தி செயற்பட்டால் மீண்டெழமுடியாத நிலை ஏற்படும்.

அதேவேளை, இலங்கையின் 7 ஆவது நிறைவேற்று அதிகார அரசதலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள கோத்தபாய ராஜபக்சவுக்கு வாழ்த்துகளைத் தெரிவிக்கின்றோம். இன, மத, குல, கட்சி பேதங்களுக்கு அப்பால் இலங்கையில் வாழும் அனைவரையும் அரவணைத்துக்கொண்டு பயணிக்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன்." - என்றார். (த)

இந்தியர்கள் மூவர் கைது

கொழும்பு, நவ. 19

கட்டுநாயக்க நிலையத்தில் வைத்து மூன்று இந்தியர்கள் நேற்றுக் காலை கைது செய்யப் பட்டுள்ளனர்.

சுமார் ஒரு கிலோ 540 கிராம் தங்கத்தை சென்னைக்கு கொண்டு செல்ல முயற்சித்தனர் என்ற குற்றச்சாட்டில் இவர்கள் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்கள் 29, 32 மற்றும் 34 வயதுடையவர்கள் எனவும் மேலதிக விசாரணைகளுக்காக சுங்கப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



கோத்தாவின் கொடி இது

கொழும்பு, நவ. 19

அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச தனது செயலக கொடியை நாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ளார்.

தூய்மையான வெண் தாமரையை அடிப்படையாக கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இந்தக் கொடி, ஊழல் அற்ற ஆட்சியை சுட்டிக்காட்டுவதாக விளக்கம ளிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் ஒவ்வொரு அரச தலைவரும் தனது செயலகத்துக்குக் கொடியை உருவாக்குவது வழக்கம். அதனடிப்படையிலேயே கோத்தபாயவும் தனது கொடியை அறிமுகப்படுத்தியுள்ளார். (ம)

கோத்தபாயவை சந்தித்த இந்தியத் தூதர் தரன்ஜித்!

கொழும்பு, நவ. 19

இலங்கையின் அரச தலைவராக கோத்தபாய ராஜபக்ச தெரிவுசெய்யப்பட்டுள்ளதை அடுத்து, அவரைச் சந்தித்துப் பேசியுள்ளார் இந்தியத் தூதர் தரன்ஜித் சிங்.

இந்திய தூதுவருடனான சந்திப்பின் முக்கியத்துவம் என்ன என்று ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த கோத்தாபய ராஜபக்ச, சாதாரணமாக சந்தித்தேன் என்று மாத்திரம் குறிப்பிட்டார்.

இந்தியா, சீனாவுடனான உறவுகளுக்கு இலங்கை எந்தளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் என்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த கோத்தபாய ராஜபக்ச, 'மிகவும் முக்கியம். இந்தியாவும் சீனாவும், எமது அயல் நாடுகள், எப்போதும் எமது நீண்டகால நண்பர்களாகவும் உள்ளன. ஆனால் இந்தியா எமது அயல் நாடு என்று பதிலளித்தார். (ம)

முஸ்லிம் சமூகத்தின் தோல்விக்கு அதன் தலைமைகளே காரணம்

அரசியல் ஆய்வாளர் இப்றாஹீம் கொதிப்பு

கொழும்பு, நவ. 19

முஸ்லிம் சமூகத்தின் தோல்விக்கான முழுக் காரணம் முஸ்லிம் அரசியல் கட்சிகளின் தலைமைகளின் சுயநலம் மட்டும்தான். அத்துடன் முஸ்லிம் தலைமைகள் மக்களை ஏமாற்றுகின்றனர் என்று பிரபல அரசியல் ஆய்வாளர் எம்.எச்எம் இப்றாஹீம் தெரிவித்தார். இலங்கை சோசலிசக் குடியரசின் 7ஆவது அரசதலைவராக சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியில் போட்டியிட்ட கோத்தபாய ராஜபக்ச வெற்றிபெற்றார்.

அது குறித்து இப்றாஹீம் மேலும் தெரிவித்ததாவது:

நடைபெற்று முடிந்த அரசதலைவர் தேர்தல் இலங்கை மக்களுக்கு பொதுவான ஒரு விடயத்தைத் தெளிவுபடுத்தியுள்ளது. நாங்கள் தொடர்ச்சியாகக் கூறிவந்தோம், கோத்தபாய ராஜபக்ச தெரிவு செய்யப்படுவார் என். ஆனால் எங்கள் கருத்துக்களை முஸ்லிம் தலைமைகள் அலட்சியம் செய்தன. இவ்வாறான தலைவர்களே முஸ்லிம் சமூகத்தைக் காட்டிக் கொடுப்பவர்களாக இருந்தனர்.

எமது முஸ்லிம் சமூகமானது ஒரு கட்சியை மட்டும் நம்பாமல் பரந்து செயற்பட்டிருந்தால் இன்று இந்த வெற்றியில் நாமும் பங்காளர்களாக இருந்திருப்போம். முஸ்லிம் சமூகத்தின் இந்தத் தோல்விக்கான முழுக் காரணம் முஸ்லிம் அரசியல் கட்சிகளின் தலைமைகளின் சுயநலம் மட்டும் தான். புள்ளிவிவரம் தெரியாத தலைமைகளாக முஸ்லிம் தலைமைகள் உள்ளன. இவ்வாறு தான் 2010இல் சரத் பொன்சேகாவை அரசதலைவர் வேட்பாளராகக் கொண்டு வந்த சாணக்கியதலைமைக்கு மூக்குடைக்கப்பட்டது. அதேபோல இன்றும் சஜித் பிரேமதாசவைக் கொண்டு வந்து தற்போது மூக்குடைக்கப் பட்டு விட்டார். ஆகவே தான் முஸ்லிம் மக்களாகிய நாங்கள் இனியும் இந்த முஸ்லிம் தலைமைகளுக்குப் பின்னால் சென்று ஏமாற்றமடையக்கூடாது- என்றார். (த)

ஆதரவாளர்களிடையே மோதல் ஐந்து பேர் மருத்துவமனையில்

கொழும்பு, நவ. 19

இரண்டு அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களுக்கு இடையில் இடம்பெற்ற மோதலில் ஐந்து பேர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் பொலனறுவையில் நேற்று முன்தினம் நடந்தது எனத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவத்தில் காயமடைந்தவர்கள் ஹிங்குரக்கொட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அரச தலைவர் தேர்தலின் வெற்றியைக் கொண்டாடுவதற்காக பால் சோறு பொங்கவைப்பதற்குத் தயாரான போது, மற்றுமொரு குழுவினால் தாக்குதல் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. தாக்குதலில் காயமடைந்த 5 பேர் ஹிங்குரக்கொட மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர், அவர்களில் நால்வர் பொலனறுவை மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விழிப்புணர்வு செயற்றிட்டங்கள்

வவுனியா,நவ.19

வடக்கு மாகாண மக்களுக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நீலன் திருச்செல்வம் நம்பிக்கை நிதியத்தின் நிதி அனுசரணை ஊடாக ஓஹான் நிறுவனத்தால் இச் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

விழிப்புணர்வு வீதி நாடகங்கள்,கருத்தரங்குகள் என்பன வவுனியா கள்ளிக்குளம், புளியங்குளம், கூமாங்குளம், நேரியகுளம், செட்டிகுளம் ஆகிய இடங்களில் அண்மையில் நடைபெற்றன.

இதேவேளை வவுனியா தாதியர் கல்லூரி மாணவர்களுக்கும், வவுனியா தேசியக் கல்வியற் கல்லூரி மாணவர்களுக்கும் அண்மையில் கருத்தரங்கு நடத்தப்பட்டது. (ஐ-222)

கோத்தா அரசதலைவரானதைத் தொடர்ந்து

கொழும்பு பங்கு சந்தை அதீத வளர்ச்சி கண்டது

கொழும்பு, நவ. 19

இலங்கையின் அரசு தலைவர் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ச வெற்றியீட்டியதனை தொடர்ந்து நடைபெற்ற முதலாவது நாள் பங்கு வர்த்தகத்தில் கொழும்பு பங்குச் சந்தை தொடங்கிய முதல் பதினைந்து நிமிடங்களில் நூற்றுக்கு மேற்பட்ட புள்ளிகளால் உயர் வடைந்து பங்குச்சந்தை வரலாற்றில் புதிய சாதனை படைத்துள்ளது.

நேற்றைய பங்குச்சந்தை முடிவில் அனைத்து பங்கு விலைச் சுட்டெண் முன்னைய நாளுடன் ஒப்பிடும் போது 106.54 புள்ளிகளால் உயர் வடைந்து 6 ஆயிரத்து 129.56 எனும் இலக்கை அடைந்தது. அதே வேளை அதிகூடிய தீரவத்தன்மை வாய்ந்த ஸ்டாண்டர்ட் அண்ட் புவோஸ் விலைச் சுட்டெண் 59.52 புள்ளிகளால் உயர்வடைந்து 3 ஆயிரத்து 046.04 எனும் இலக்கை அடைந்தது. நேற்றைய ஒரு நாளில் மட்டும் கைமாற்றப்பட்ட பங்குகளின் பெறுமதி 2.4 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டதுடன் 116.4 மில்லியனுக்கும் மேற்பட்ட பங்குகள் கைமாறியிருந்தன.

கோத்தபாய ராஜபாஷவின் தேர்தல் பரப்புரையில் பல வரி தொடர்பான மாற்றங்கள் முன்மொழியப்பட்டமையும், கோத்தபாயவின் வெற்றி இலங்கை அரசியலில் ஒரு உறுதித் தன்மையை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையும் பங்குச் சந்தையின் அதீத அதிகரிப்புக்குக் காரணமாக அமைந்தது என பொருளாதார வல்லுநர்கள் கருத்து தெரிவித்தனர். பங்குச்சந்தை மேலும் வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ம)

நாட்டில் அமைதியான சூழ்நிலை

கொழும்பு, நவ.19

நாட்டில் தற்போது அமைதியான சூழ் நிலை நிலவுகின்றது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், மூத்த பொலிஸ் அத்தியட்சகருமான ருவான் குணசேகர தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்டது முதல் நேற்று (நேற்றுமுன்தினம்) வரை பாரதூரமான சம்பவங்கள் எவையும் பதிவாகவில்லை.

அனைத்து மாவட்டங்களிலும் அமைதியான சூழல் காணப்படுகின்றது.

அரச தலைவர் தேர்தல் சட்ட விதிகளை நடைமுறைப்படுத்தவும், அமைதியை நிலைநாட்டுவதற்காகவும் நாட்டில் உள்ள பொலிஸ் பிரிவுகளில் நடமாடும் மற்றும் வீதிப் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றன - என்றார். (எ)

புதிய ஜனநாயக முன்னணியை மறுசீரமைப்புச் செய்ய வேண்டும்

சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

கொழும்பு, நவ.19

புதிய ஜனநாயக முன்னணி என்ற கூட்டணி மறுசீரமைப்புக்கு உட்படுத்தப்பட வேண்டும். பழைய லிபரல் வாதக் கொள்கைகளை உடைய ஒருவருக்கு எதிர்க்கட்சித் தலைமைப் பொறுப்பை வழங்குவதை விட, நடைமுறைக்கு ஏற்ற வாறான நவீன கொள்கைகளுடனான ஊழலற்ற இளைய தலைமுறைக்கு வழிவிடுவதே சிறந்தாகும். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக ரணவக்க தெரிவித்துள்ளார்.

அவர் தனது முகநூல் பக்கத்தில் நேற்றுப் பதிவேற்றியுள்ள காணொலி ஒன்றிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது:

தற்போது அரச தலைவராகத் தெரிவாகியிருக்கும் கோத்தபாய ராஜபக்ச, கடந்த மகிந்த ராஜபக்ச அரசால் தோற்றுவிக்கப்பட்ட கடன் பொறியையும், மேற்குலக நாடுகளுக்கு எதிராக அவர்கள் உருவாக்கிய தோற்றப்பாட்டையும் எதிர்கொள்ள வேண்டும்.

அத்துடன் தமிழ், முஸ்லிம் மக்களை ஒதுக்குதல் மற்றும் அவர்களிடத்தில் அச்சத்தை ஏற்படுத்துதல் ஆகியவற்றால் எதிர்காலத்தில் ஏற்படத்தக்க சவால்களும் கோத்தபாய ராஜபக்சவின் முன்னுள்ளன.

பௌத்தர்களைப் பொறுத்தவரை பயனுடைய, அறிவுபூர்வமான ஒரு கொள்கைத்திட்டத்தை வகுத்து, அதனை நோக்கிப் பயணிப்பதை விடுத்து வெறுமனே பிறரை தகாத வார்த்தைகளால் தூசிப்பதை மாத்திரம் தொடர்ந்து முன்னெடுப்பது கவலைக்குரியதாகும்.

இப்போது தேர்தலில் வெற்றி பெறுவதற்காக கோத்தபாய ராஜபக்ச தரப்பால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் இன்னும் சில காலத்தில் அவர்களுக்குப் பெரும் சவாலாக மாறப் போகின்றன.

புதிய ஜனநாயக முன்னணி என்ற கூட்டணி மறுசீரமைப்புக்கு உட்படுத்தப்பட வேண்டும். அதன் ஊடாக இந்த முறை எமக்கு வாக்களித்துள்ள மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்று வதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதுடன், திடீர் அச்சத்திலும் வேகத்திலும் கோத்தபாய ராஜபக்சவுக்கு வாக்களித்தவர்கள் இன்னும் சில காலத்தில் அவர்களின் குடும்ப ஆதிக்கத்துக்கு எதிரான அதிருப்தியை வெளிப்படுத்தும் போது அவர்கள் அனைவரையும் ஒன்றிணைப்பதுமே எமது தற்போதைய செயற்பாடாக இருக்கவேண்டும் - என்றார். (எ)

தங்க நகைகளுக்கான தரச்சான்றிதழை சில வர்த்தகர்கள் வழங்க மறுக்கின்றனர்

மன்னார் பாவனையாளர் அதிகாரசபையிடம் மக்கள் முறைப்பாடு

மன்னார், நவ.19

மன்னார் மாவட்டத்தில் உள்ள சில நகைத் தொழிலகங்கள், மற்றும், நகைக் கடைகளில் மக்கள் பெற்றுக்கொள்ளும் நகைகளுக்கான தரச் சான்றிதழ் வழங்கப்படுவதில்லை என்று மன்னார் பாவனையாளர் அதிகார சபையிடம் முறைப்பாடுபதிவுசெய்யப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள சில பிரபல நகை தொழிலகங்கள் மற்றும் தங்க நகை விற்பனை செய்யும் நிலையங்களில் நகைகளை மக்கள் கொள்வனவு செய்யும் போதும், அதே நேரத்தில் பழைய நகைகளை அழித்து புதிய நகைகளைச் செய்யும் போதும் 24 கரட் தரத்துக்குச் செய்து தருவதாகக் கோரிப் பணம் பெறப்படுகின்றது. ஆனால் 18 தொடக்கம் 22 கரட் தரத்தி லேயே நகைகள் செய்யப் பட்டு மக்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது என்று பாதீக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

தங்க நகைகளின் தரத்தை பரிட்சித்துப் பார்க்கக் கூடிய வசதி உள்ள மன்னாரைச் சேர்ந்த சில நகைத் தொழிலகங்களும் ஏனைய நகைக் கடை உரிமையாளர்களுடன் தொடர்புவைத் திருப்பதால் அவர்கள் நகைகளின் தரத்தை பரிட்சித்து தருவதற்கு மறுப்பதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

"அவசர பணத் தேவைகளுக்காக நகைகளை அடகு வைக்க வங்கிகள் மற்றும் தனியார் அடகு பிடிக்கும் நிலையங்களுக்குக் கொண்டு செல்லும் போதே நகையின் தரம் தொடர்பான உண்மை நிலை தெரிய வருகிறது. அதன் பின்னர் சம்மந்தப்பட்ட நகைக் கடை உரிமையாளர்களிடம் சென்று கேட்கும் போது காலம் சென்று விட்டது இனி ஒன்றும் செய்ய முடியாது எனத் தெரிவிக்கின்றனர்" என்று பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பாக மன்னார் மாவட்ட பாவனையாளர் அதிகார சபையிடம் முறைப்பாடும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

"தங்க நகைகளை விற்பனை செய்யும் போது நகையின் தரத்தை உறுதிப்படுத்தும் வகையில் பற்று சீட்டு வழங்கப்பட வேண்டும். தங்கத்தின் தரத்தை உறுதிப் படுத்திய பற்றுச் சீட்டு வழங்கப்படாத நிலையில் நகை கொள்வனவு செய்யப்பட்டதில் இருந்து 90 நாள்களுக்குள் பாவனையாளர் அதிகார சபையில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்ய வேண்டும். முறைப்பாடு பதிவு செய்யும் பட்சத்தில் குறித்த நகைத் தொழிலகம் மற்றும் உரிமையாளர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்" என்று மன்னார் பாவனையாளர் அதிகாரசபை தெரிவித்தது. (ஐ - 56)

ஐ.தே.க. அமைப்பாளர் மீது தாக்குதல்

வவுனியா, நவ.19

வவுனியாவில் ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளர் மீது தாக்குதல் நடந்தப்பட்டுள்ளது என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி மாவட்ட அமைப்பாளரான கருணாதாச என்பவர் வவுனியா பொதுமருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று மாலை வெற்றிக் கொண்டாட்டங்களில் ஈடுபட்ட அரசியல் கட்சி ஒன்றின் ஆதரவாளர்கள் வெடி கொழுத்தியபோது, தனது வீட்டின் முன்பாகக் கொழுத்த வேண்டாம் என்று எதிர்ப்புத் தெரிவித்ததால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என்று கூறப்படுகின்றது.

முறைப்பாட்டுக்கு அமைய வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-110)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மா விலையை அதிகரித்து விற்றால் சட்ட நடவடிக்கை

கொழும்பு, நவ.19

கோதுமை மாவின் விலையை அதிகரிப்பதற்கு நிறுவனங்களுக்கோ அல்லது வர்த்தகர்களுக்கோ எவ்வித அனுமதியும் வழங்கவில்லை என நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது. தங்களின் எழுத்து மூல அனுமதியின்றி கோதுமை மாவின் விலையை அதிகரிப்பது சட்ட விரோதமானது என அறிக்கை ஒன்றின் ஊடாக அதிகார சபை அறிவுறுத்தியுள்ளது.

அதிக விலையில் கோதுமை மாவை விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்கள் குறித்து சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் அவ்வாறான செயல்களில் ஈடுபடுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

எவ்வித முன் அறிவித்தல்களும் இன்றி பிறிமா மற்றும் செரண்டிப் நிறுவனங்கள் கடந்த சனிக் கிழமை இரவு தொடக்கம் கோதுமை மாவிற்கான விலையை 8 ரூபாவால் அதிகரித்துள்ளது என்று அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் கூறுகின்றது. (எ)

இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உறுதியான நடவடிக்கை அவசியம்

100 நாள்கள் அவகாசம் கொடுத்து சிவாஜிலிங்கம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், நவ.19

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கான தீர்வு ஆகக் குறைந்தது இணைப்பாட்சி, சமஷ்டியைக் கொண்டதாக ஒரு ஐக்கிய இலங்கைக்குள் இருக்குமாக இருந்தால் நாங்கள் ஏற்றுக்கொள்வோம். புதிய அரச தலைவருக்கு 100 நாள்கள் அவகாசம் கொடுக்கின்றோம். அதற்குள் அவர் தீர்வுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம்.

யாழ்ப்பாணத்தில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

சஜித் பிரேமதாசவின் தோல்விக்குப் பின்பாக ரணில் விக்கிரமசிங்கவின் சூழ்ச்சி உள்ளது என்றும், அதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் துணை போயுள்ளது என்றும் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

சஜித் பிரேமதாசவைத் தோற்கடிப்பதற்கான ரணில் விக்கிரமசிங்கவின் முயற்சிக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு துணை போன தா? இல்லையா? என்பது பகிரங்கமாகும் காலம் விரைவில் வரும்.

புதிதாகப் பதவியேற்றுள்ள அரச தலைவர் தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினை தொடர்பாக எந்தக் கருத்துகளையும் நேரடியாகவோ, மறைமுகமாகவே கூறவில்லை. தமிழ் மக்கள் மிகுந்த ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

இனப்பிரச்சினைக்குச் சரியான தீர்வு, பொறுப்புக் கூறல், நீதி கிடைக்கும் வரையில் கோத்தபாய ராஜபக்சவுக்கு வாழ்த்துக் கூற முடியாது. அவரது வெற்றிக்கு வாழ்த்துக் கூறும் மனநிலையில் தமிழ் மக்கள் இல்லை. நானும் அந்த மனநிலையில் இல்லை.

சம்பிரதாயம் என்று வாழ்த்துவதும், பின்னர் வீழ்வதும், ஓடுவதுமாக இருக்க முடியாது. புதிய அரச தலைவருக்கு 100 நாள்கள் அவகாசம் கொடுக்கின்றோம். அதற்குள் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் ஐக்கிய நாடுகள் சபையின் உதவியுடன், வடக்கு கிழக்குப் பிராந்தியதில் ஒரு பொது வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என்று இலங்கையில் இருந்தும், பன்னாடுகளில் இருந்தும் அழுத்தங்களைப் பிரயோகிக்க நடவடிக்கை எடுப்போம்.

இலங்கையில் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகள் துணை நிற்க வேண்டும் - என்றார்.

(எ-106)

இனங்களிடையே பிளவை ஏற்படுத்தும் தேர்தல் முடிவு

அநுரகுமார திசாநாயக்க சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ.19

அரச தலைவர் தேர்தல் முடிவுகள் நாட்டு மக்கள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்குப் பதிலாகப் பிரிவினையை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும், தேசிய மக்கள் சக்தி இயக்கத்தின் அரச தலைவர் வேட்பாளருமான அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பு, பத்திரமுல்லயில் அமைந்துள்ள மக்கள் விடுதலை முன்னணியின் அலுவலகத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

தேர்தலின் போது எமக்கு ஆதரவாக 4 இலட்சத்து 18 ஆயிரத்து 553 வாக்குகள் வழங்கப்பட்டிருந்தன. எமக்கு வாக்களித்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். ஆனால் நாங்கள் எதிர்பார்த்த முடிவு எமக்கு கிடைக்கவில்லை. இருந்த போதும் கிடைக்கப் பெற்றுள்ள முடிவை நாம் கட்டாயம் ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும்.

நாட்டின் இரு பிரதான கட்சிகளும் தேர்தலுக்காகக் களமிறங்கியிருந்த நிலையில் எமக்கு அவர்களுடன் போட்டியிடுவதில் பெரும் சவால் ஏற்பட்டிருந்தது. எங்களுடைய தேர்தல் செயற்பாடுகளுக்காக எந்தவித சுயலாபத்தையும் எதிர்பார்க்காத பெருந்தொகையானோர் இணைந்திருந்தனர்.

எமது பரப்புரைகளில் நாட்டு மக்கள் எதிர்நோக்க வேண்டியுள்ள சவால்கள் தொடர்பில் நாம் பல விடயங்களை தெரிவித்திருந்தோம். இது வரை காலமும் தேர்தல் மேடைகள் கேலித்தனமாகவே காணப்பட்டது. ஆனால் இந்த முறை நாங்கள் நாட்டின் அபிவிருத்தி , பொருளாதார முன்னேற்றம், இன ஒற்றுமை , கலாசார பண்புகளை பாதுகாப்பது தொடர்பான பல விடயங்கள் தொடர்பில் மக்களைச் சிந்திக்க வைத்தோம்.

இந்தத் தேர்தல் முடிவுகள் நாட்டில் ஏற்படுத்தும் பாதிப்புகள் தொடர்பாக நாம் அறிவோம். எம் நாட்டு சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் மத்தியில் இன பேதத்தை ஏற்படுத்தும் வகையிலான முடிவை வழங்கியுள்ளது. இந்த முடிவுகள் நாட்டு மக்கள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு மாறாக பிரிவினையை ஏற்படுத்தும் வகையிலேயே அமைந்துள்ளது.

தேர்தலின் போது மேடைகளிலும் ஊடகங்களிலும் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் மக்கள் முடிவெடுத்துள்ளனர். வடக்கு, கிழக்கு தமிழர்கள் 2005 ஆண்டுக்குப் பின்னரான காலப்பகுதிகளில் தாம் எதிர்நோக்கிய சம்பவங்களை கருத்தில் கொண்டு வாக்களித்துள்ளனர். முஸ்லிம் மக்களும் அவர்களின் பாதுகாப்புக்காக இவ்வாறான தீர்மானத்தை எடுத்துள்ளனர். தெற்கிலுள்ள சிங்கள மக்கள் அடிப்படைவாதிகளுக்குப் பயந்தே இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

மக்களின் உண்மையான எண்ணம் இங்கு பிரதிபலிக்க வில்லை. ஆனால் தற்போது மக்களால் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பை நாம் ஏற்றுக் கொள்ளதான் வேண்டும். எதிர்வரும் காலங்களில் மக்களின் உரிமைகள் மற்றும் ஜனநாயகம் மீறப்படும் சந்தர்ப்பங்களில் நாங்கள் எப்போதும் போல் அவர்களுக்கு ஆதரவாக செயற்படுவோம் - என்றார். (எ)

கோத்தபாயவின் கருத்தை வரவேற்கிறார் நசீர் அகமட்

கொழும்பு, நவ.19

சிறுபான்மை சமூகங்களுக்கு அழைப்பு விடுத்துள்ள அரச தலைவர் கோத்தபாயவுக்கு எமது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்சியடைகின்றோம் என்று தெரிவித்துள்ளார் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும், கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான நசீர் அகமட்.

அவர் நேற்று விடுத்த அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் கூறியுள்ளதாவது:

தேர்தல் முடிவு நாட்டு மக்களுக்கு நல்லதொரு செய்தியைக் கூறியுள்ளது. இரு துருவநிலை ஏற்பட்டுள்ளமை நிரூபணமாகியுள்ளது. இதை மாற்றியமைக்க வேண்டியது காலத்தில் கட்டாயமாகும்.

இன்று (நேற்று) அவர் பதவி ஏற்ற நிகழ்வில் தெரிவித்துள்ள கருத்து மிகச் சிறப்பான ஒன்றுமாகும். இனிவரும் காலங்களில் நாம் இலங்கையர் என தொடர்ந்து பயணிக்க என்னுடன் கைகோர்த்துச் செயற்பட முன் வாருங்கள் என அவர் அழைத்திருப்பது வரவேற்கத் தக்க அம்சமாகும்.

சிறுபான்மை மக்களை அனுசரித்து அவர்களது அபிலாசைகளை நிறைவேற்றும் வகையில் அவர் தமது பணிகளைத் தொடருவாராக இருந்தால் அனைத்து சமூகங்களும் தொடர்ந்து ஏற்றுக்கொள்ளும் ஒருதலைவராக அவர் எதிர்காலத்தில் சிறப்பு பெறுவார் என்பது திண்ணம்.

அனைத்து சமூகங்களின் ஜனநாயக உரிமைகளை நிலைநாட்டும் வண்ணம் சிறந்ததொரு முன்னுதாரணம் உள்ள ஆட்சியை அவர் முன்னெடுத்து செல்ல வேண்டும் - என்றார். (எ)

பசுபிக் கருத்தரங்கு இன்று

கொழும்பு, நவ.19

கடல்சார் போர் நடவடிக்கைகள் தொடர்பாகப் பன்னாட்டுச் சட்டங்கள் தொடர்பாக விவாதிக்கபடும் 6 ஆவது ஆசிய பசிபிக் கருத்தரங்கு இன்று கொழும்பில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

நாளை புதன்கிழமை வரை இடம்பெறவுள்ள இந்தக் கருத்தரங்கை கடற்படை மற்றும் பன்னாட்டுச் செஞ்சிலுவைச் சங்கத்தினர் ஏற்பாடு செய்துள்ளனர் என்று தெரிவித்து கடற்படை அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டு முதன் முதலாக சிங்கபூரில் ஆரம்பிக்கப்பட்ட இந்த கருத்தரங்கு தாய்லாந்து , இந்தோனேசியா, மலேசியா மற்றும் சீனா ஆகிய நாடுகளில் நடைபெற்றுள்ளன. முதல் தடவையாக இலங்கையில் இடம்பெறவுள்ளது.

வங்காளம், கம்போடியா, சீனா, பீஜி, இந்தியா, இந்தோனேசியா, ஜப்பான், மலேசியா, மாலைத்தீவு, மியன்மார், நியூசிலாந்து, பிலிப்பைன்ஸ், கொரியா, சிங்கபூர், தாய்லாந்து, கிழக்கு திமோர் மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தி சுமார் 26 கடற்படை அதிகாரிகள் கலந்துக் கொள்ளவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிங்கள..

ஆனால், நான் எதிர்பார்த்த வகையில் தமிழ், முஸ்லிம் மக்களின் ஆதரவு கிடைக்கவில்லை. எனினும் நாட்டின் எதிர் காலத் திட்டம் கருதி உண்மையான இலங் கையர்கள் என்ற வகையில் அனைவரை யும் என்னுடன் கைகோர்க்குமாறு கேட் டுக்கொள்கின்றேன். நான் இன்று உங் கள் அரச தலைவர் என்ற வகையில் இந்த வேண்டுகோளை விடுக்கின்றேன். இவ்வாறு அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்தார்.

மன்னர் ஆட்சிக்குப் பெயர்போன பௌத் தர்களின் புனித பூமியாகக் கருதப்படும் அநுராதபுரம் ருவன்வெலி மகாசாய பௌத்த விகாரை வளாகத்தில் நேற்று முற்பகல் 11.48 மணிக்கு நாட்டின் 7ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச பதவிப் பிரமாணம் செய்தார்.

அதன்பின்னர் நாட்டு மக்களுக்கு அவர் உரையாற்றியபோது அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எனக்காக வாக்களித்த அனைத்து வாக் காளர்களுக்கும் எனது நன்றிகளையும் மரியாதையையும் தெரிவித்துக்கொள் கின்றேன்.

இந்த நாட்டின் அரச தலைவர் என்ற வகையில் இங்கு வாழும் அனைத்து இன மக்களுக்கும் சேவையாற்றுவதே எனது பொறுப்பாகும்.

எ க்கு வாக்களித்தவர்கள் மற்றும் எனக்கு வாக்களிக்காத அனைவரினதும் தனிப்பட்ட உரிமைகளை நான் பாதுகாப் பேன்.

தேவை இருந்தால் எம்மால் செய்ய முடி யாதது எதுவும் இல்லை. நாட்டைக் கட்டி யெழுப்பவதற்கான சூழல் ஒன்று ஏற்படப் போகின்றது. அதற்கான திட்டங்களும் செயற்பாடுகளும் எம்மிடத்தில் உண்டு என்று எனது தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தேன். எனது தேர்தல் அறிக்கையில் முன்வைத்த வாக்குறுதி களை குறுகிய காலத்தில் நிறைவே ற்று வேன்.

நான் இந்த நாட்டின் நிறைவேற்று அதி கார அரச தலைவராக உள்ளேன். நாட் டின் நலன் கருதி இந்த நிறைவேற்று அ திகாரம் கொண்ட அரச தலைவரின் அதிகாரங்களைப் பயன்படுத்த நான் ஒரு போதும் பின்னிற்க மாட்டேன்.

எனது கொள்கைகளுக்கு ஏற்ப நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்லக்கூடிய புதிய அரசை அமைப்பேன். இந்த நாட் டின் மீது எனக்குப் பற்றும், அன்பும், தூர நோக்கும் உண்டு. எதிர்காலச் சந்ததிக ளுக்காக சுபீட்சமான நாட்டைக் கட்டி யெப்ப என்னுடன் கைகோர்க்குமாறு நாட்டுப் பற்றுள்ள அனைத்து இலங்கை யர்களுக்குநான்நேசக்கரம்நீட்டுகின்றேன்.

எனது வெற்றிக்காகக் கடுமையாக உழைத்த எதிர்க்கட்சித் தலைவரும் சிறி லங்கா பொது மக்கள் முன்னணியின் தலைவருமான தலைவருமான மகிந்த ராஜபக்சவுக்கு இந்த வேளையில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். அவருக்கு எனது பிறந்தநாள் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

'சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி' என்ற பெயரில் பலத்த சவால்களுக்கு மத்தியில் கட்சியை உருவாக்கி என்னை இந்த வெற்றி நிலைக்குக் கொண்டு சென்ற கட்சியின் நிறுவுநர் பசில் ராஜபக் வுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள் கின்றேன்.

எனது வெற்றிக்காகப் பாடுபட்ட கட்சித் தலைவர்கள் மற்றும் அரசியல் பிரதிநிதிகள் என அனைவருக்கும் நன் றியைக் கூறிக்கொள்கின்றேன்.

எனது ஆட்சியில் நாட்டின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும். உங்களையும்உங் கள் பிள்ளைகளையும் நான் பாதுகாப் பேன். பயங்கரவாதம், தீவிரவாதத்துக்கு எனது ஆட்சியில் இடமில்லை. பாதுகாப்பு அமைச்சராக நானே செயற்படுவேன்.

எனது ஆட்சியின் கீழ் எந்தவொரு ஊழல், மோசடி குற்றச் செயல்கள், பெண்க ளுக்கு எதிரான வன்கொடுமைகள், போதைப்பொருள் கடத்தல்கள், பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகள் எது வும் இடம்பெற இடமளிக்கமாட்டேன் - என் றார்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கி ரம சிங்க, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜ பக்ச, ஆளும் கட்சி எதிர்க்கட்சி உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள், வெளிநாட்டுத் தூது வர்கள் எனப் பல தரப்பினரும் இந்தப் பதவியேற்பில் கலந்து கொண்டனர்.

(எ-22)

ஐ.தே.க....

கூட்டப்பட்டது. ஆனால் இரு வேறு நிலைப்பாடுகள் விவாதிக்கப்பட்டால் கூட் டம் பெரும் அமளியாகவே நடந்தது என்று தெரியவருகின்றது.

சஜித் பிரேமதாச ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரணில் விக்கிரமசிங்க தலைமை அமைச்சர் பதவியிலிருந்தும், கட்சித் தலைவர் பதவியில் இருந்தும் விலக வேண்டும் என்று வலியுறுத்தி யுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான சுஜீவ சேனசிங்க, கபீர் ஹாசீம் ஆகியோர் இந்த விடயத்தில் விடாப்பிடியாக வாதிட்டுள்ள னர்.

ரணில் விக்கிரமசிங்க இந்தப் பதவிகளில் இருந்து விலக வேண்டும் என்றும், எதிர்க்கட்சித் தலைவர் பதவியை சஜித் பிரேமதாசவுக்கு வழங்கவேண்டும் என் றும் சஜித் ஆதரவு நாடாளுமன்ற உறுப் பினர்கள் வலியுறுத்தினர் என்றும் அறிய முடிந்தது.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக சரத் பொன்சேகா, ராஜித சேனாரத்ன, தயா கமகே, விஜிதமுனி செய்சா ஆகி யோர் வாதிட்டத்தால் கூட்டத்தில் கடும் வாதப் பிரதிவாதங்கள் ஏற்பட்டுள்ளன.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிர மசிங்கவும் கடும் தொனியிலேயே கூட்டத் தில்பேசியுள்ளார்என்றுகூறப்படுகின்றது. தேர்தலில் ஏன் தோல்வியடைந்தோம் என்று கண்ணாடி முன் நின்று ஒவ்வொ ருவரும் கேட்டுப் பாருங்கள் என்று நாடா ளுமன்ற உறுப்பினர்களிடம் கோபமாகப் பேசிய ரணில் விக்கிரமசிங்க, அரச தலை வர் கோத்தபாய ராஜபக்சவுடன் பேசிய பின்னர் தேர்தல் தொடர்பான முடிவை எடுப்பேன் எனத் திட்டவட்டமாகத் தெரிவித் துள்ளார் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன. நேற்று நடந்த நாடாளுமன் றக் குழுக் கூட்டத்தில் சஜித் பிரேமதாச கலந்துகொள்ளவில்லை.

அதேவேளை, இந்த விடயம் தொடர்பாக ஆராய்வதற்காக ஐக்கிய தேசியக் கட்சி யின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் மீண் டும் கூடும் என்று அந்தக் கட்சியைச் சேர்ந்த மூத்த உறுப்பினர் ஒருவர் தெரி வித்தார். (எ)

நாட்டில்...

தலைமை அமைச்சராக உள்ளார். ஆனால் இது வரையில் 5க்கும் மேற்பட்ட அமைச்சர்கள் பதவி விலகியிருக்கி ன்ற னர். எதிர்வரும் நாள்களில் என்ன நடக்க இருக்கின்றது என்பதை அவதானிக்க வேண்டும். மக்களின் நிலைப்பாட்டை ஏற்று அதற்கேற்றதீர்மானத்தைஎடுக்கப் படும்-என்றார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரி வித்துள்ளார். (எ-22)

மைத்திரியின்...

யோரின் ஒளிப்படங்களை அத்துமீறி அகற்றினார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் பொலிஸார் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று நடந்துள்ளது. அத்துமீறி அலுவலகத்துக்குள் புகுந்த ஒருவர் அங்கு தொங்கவிடப்பட்டிருந்த ஒளிப்படங்களை அகற்றினார் என்றும், அங்கு பாதுகாப்புக் கடமையில் இருந்த பொலிஸார் அவரைக் கைது செய்து மட் டக்களப்புப் பொலிஸாரிடம் ஒப்படைத்த னர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்புப் பொலி ஸார் முன்னெடுத்துள்ளனர். (எ)

கட்சி...

ஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் மகிழுந்து, உந்துருளி ஆகியவற்றில் வந்து தாக்குதல் நடத்தி யுள்ளனர். அந்த வீட்டின் உரிமையாள ரும் அவரது மனைவியும் தாக்குதலில் காயமடைந்து மருத்துவமனையில்சேர்க் கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளவர்கள் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் ஆதரவா ளர்கள் என்று கூறப்படுகின்றது. (எ)

கனேபொல...

தோட்டத்துக்குள் புகுந்த கும்பல், யாருக்கு வாக்களித்தீர்கள் என்று கேட்டதுடன், வீடு களில் இருந்த பொருள்களை தாக்கி உடைத்து, அநாகரிகமாக நடந்தனர் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித் துள்ளனர்.

இது தொடர்பாக எட்டியந்தோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய் யப்பட்டுள்ளது என்றும் அவர்கள் குறிப் பிட்டுள்ளனர்.

சம்பவ இடத்துக்குச் சென்று பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன், அங்கு பாதுகாப்பையும் பலப்படுத்தியு ள் ளனர். (எ-22)

படங்கள்...

பாய ராஜபக்ச அறிவுறுத்தியுள்ளார்.

அரச அலுவலகங்களில் எனது படமோ, தலைமை அமைச்சரின் படமோ அல்லது அமைச்சர்களின் படங்களையோ காட்சிப் படுத்த வேண்டாம் என்று அவர் தெரிவித் துள்ளார்.

அரச அலுவலங்களில் அரச தேசிய சின னம் மட்டும் காட்சிப்படுத்தப்பட்டால் போது மானது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற அரச தலைவர் தேர்தலில் கோத்தபாய ராஜ பக்ச வெற்றி பெற்றார். அவர் நேற்று அநுராதபுரத்தில் பதவியேற்றுக் கொண் டார். இன்று அவர் தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக அரச தலைவர் செயலகத்தில் பொறுப்பேற்றுக் கொள்ள வுள்ளார். (எ)

பேச்சு...

மான மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

அரச தலைவர் தேர்தலில் புதிய ஜனநா யக முன்னணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்குத் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு ஆதரவு தெரிவித்திருந்தது. தேர் தலில் சிறிலங்கா பொதுமக்கள் முன் னணி சார்பாகப் போட்டியிட்ட கோத்தபாய ராஜபக்ச வெற்றி பெற்றுள்ளார். இந்தநி லையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ் வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தமிழ் மக்கள் இனப் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு விடயங்களை எதிர்பார்த்துத் தான் சஜித் பிரேமதாசவுக்கு ஆதவளித்த னர். ஆனால் நாட்டில் பெரும்பாலான மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட புதிய அரச தலைவர் கோத்தபாய ராஜபக்சவை நாமும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து அவர் எம்முடன் பேச்சு நடத்துவதற்கு அழைத்தால் அதற்கு நாம் தயாராகவே இருக்கின்றோம். எதிர்வரும் தினங்களில் இது தொடர்பாக ஆராயப்படும் என்றார்.

(எ-22)

ரணில்...

ராஜபக்ச நேற்று அரச தலைவராகப் பத வியேற்றுக் கொண்டார். இந்த நிகழ்வு நேற்று அநுராதபுரத்தில் உள்ள ருவன் வெலிசேய விகாரை வளாகத்தில் நடை பெற்றது.

இந்த நிகழ்வுக்கு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமங்க மற்றும் ஐக்கிய தேசிய முன்னணியின் அமைச்சர்க ளான அர்ஜுன ரணதுங்கள், ஜோன் அமரதுங்க, ரவி கருணாநாயக்க ஆகி யோர் சென்றிருந்தனர்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமங்க ருவன்வெலிசேய விகாரை வளாகத்துக் குச் சென்றபோது, அங்கு கூடியிருந்த கோத்தபாய ராஜபக்சவின் ஆதரவாளர் கள் அவர்களைப் பார்த்தவுடன் கூச்ச லிட்டுள்ளனர். (எ)

த.தே.கூ....

தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற கோத்தபாய ராஜபக்ச நேற்று அரச தலை வராகப் பதவியேற்றார். இந்த நிகழ்வு அநுராதபுரத்தில் நடைபெற்றது. அந்த நிகழ்வில் அரசியல் பிரமுகர்கள் பலர் கலந்துகொண்டனர். பலருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர்கள் எவரும் கோத்தபா யவின் பதவியேற்பு விழாவில் கலந்து கொள்ளவில்லை. அதேவேளை, தேர்த லில் வெற்றி பெற்ற கோத்தபாய ராஜபக் சவுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நேற்றுமுன்தி னம் தொலைபேசி ஊடாக வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

அரச தலைவர் தேர்தலில் வாக்களிக்கத் தனது சொந்த ஊரான திருகோ ணம லைக்குச் சென்றிருந்த இரா.சம்ப ந்தன், அங்கிருந்தவாறே தொலைபேசியில் புதிய அரச தலைவருக்கு வாழ்த்துத் தெரி வித்துள்ளார். (எ)

பாதுகாப்பு...

பூர்வமாகப் பொறுப்பேற்கவுள்ளார்.

அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச பாதுகாப்பு அமைச்சின் செயலராக நேற்று மேஜர் ஜெனரல் கமல் குணரத் னவை நியமித்தார். அரச தலைவரான தும் அவர் வழங்கிய முதலாவது நியம னம் இதுவாகும்.

மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன இறுதிப் போரின்போது இராணுவத்தின் 53ஆவது படையணிக்குத் தலைமை தாங்கியி ருந்தார்.

அதேவேளை, பாதுகாப்பு அமைச்சராகத் தானே பதவி வகிப்பேன் என்று அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச நேற்று பதவியேற்பு நிகழ்வில் உரையாற்றும் போது கு றிப்பிட்டிருந்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெட்ரோல் கிடங்குகள் மீது தாக்குதல்!

ஈரானில் பெட்ரோல் விலை உயர்வுக்கு எதிராகப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் மத்திய ஈரானில் உள்ள பெற்றோல் கிடங்குகள் தாக்கப் பட்டதாக ஈரான் அரச செய்திச் சேவையான இர்னா செய்தி வெளியிட்டது.

ஈரானின் சிர்ஜான், மஷாத், அபாடான், சிராஷ் உள் ளிட்ட பல பகுதிகளில் நடந்த போராட்டங்களின்போது அரச படைகள் நடத்திய தாக்குதல்களில் பலர் சாவ டைந்தனர். இந்த நிலையிலேயே பெட்ரோல் கிடங்கு கள் தாக்கப்பட்டுள்ளதாக ஈரான் தெரிவித்தது.

குண்டர்களே காரணம்! குற்றம் சாட்டுகிறார் கமேனி

ஈரானில் நடந்து வருகின்ற போரட்டங்களுக்கு குண் டர்களே காரணம் என்று தெரிவித்தார் அந்த நாட் டின் மூத்த தலைவர் அய துல்லா கமேனி.

ஈரானின் பல நகரங்க ளில் நடைபெற்று வரும் போராட்டங்களுக்கும், வ ன் மு றை க ளு க் கு ம் குண்டர்கள் மற்றும் எதிர்ப் புரட்சியாளர்களே காரணம் என்று அவர் குற்றம் சுமத்தினார்.

போராட்டங்களின்போது சட்ட விரோத நடவடிக்கைகள் தொடர்ந்தால் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்ப டும் என ஈரான் அரச தரப்பில் எச்சரிக்கையும் விடுக்கப் பட்டது.

ஈரான் மீது அமெரிக்கா விதித்துள்ள தடைக்குப் பிறகு ஈரான் பொருளாதாரத்தில் ஏற்பட்ட அழுத்தத்தின் அறி குறி இந்த விலை உயர்வு என்று தெரிவிக்கப்படுகிறது.

ஒரு வருடத்தைத் தொட்டது மஞ்சள் அங்கிப் போராட்டம்

பாரீஸ், நவ.19

பிரான்ஸில் ஏரிபொருள் விலை அதிகரிப்பு, வாழ்க் கைச் செலவு அதிகரிப்புப் போன்றவற்றை முறையா கக் கட்டுப்படுத்த முடியாத அந்த நாட்டின் அதிபர் இமானுவல் மக்ரோன் பதவி விலகவேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து 2018ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட மஞ்சள் அங்கிப் போராட்டமானது நேற்று முன்தினத்துடன் ஒரு வருடத்தை நிறைவுசெய்தது.

எரிபொருள் விலை உள்ளிட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டுவிட்டாலும், அரசு முன்னெடுக்கின்ற இது போன்ற தீவிர் நடவடிக்கைகளுக்கு மக்களின் முடிவு அறியப்பட வேண்டும் என்று கோரியும் அதற்கேற்ற நடைமுறைகளைச் சட்டமாக்கப்படவேண்டும் என்று கோரியும் இந்தப் போராட்டம் இன்றுவரை தொடர்கின் றமை குறிப்பிடத்தக்கது.

பெட்ரோல் விலை உயர்வு விவகாரம் ஈரான் போராட்டத்தில் 38 பேர் சாவு

தெஹ்ரான், நவ.19

ஈரானில் பெட்ரோல் உள்ளிட்ட எரி பொருள்களின் விலை 50 சதவீதத் தால் உயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து அதற்கெதிராக ஈரான் மக்கள் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் போராட்டங்களில் இடம்பெற்ற வன்முறைகள் காரண மாக ஈரான் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் 36 பேர் சாவடைந்தனர்.

இதுகுறித்து மேலும் தெரியவருவ தாவது:

ஈரானிலுள்ள தியாகிகள் சதுக்கம் என்கிற பகுதியில் நடந்த போராட் டத்தில் பெரும் வன்முறைச் சம்ப வங்கள் நடந்தன. பாதுகாப்புப் படையினர் தாக்குதல் நடத்தியதில் 36 பேர் சாவடைந்தனர். கடந்த வெள்ளிக்கிழமையிலிருந்து எரி பொருள் விலை உயர்வுக்கு எதிராக போராட்டம் நடைபெற்று வரும் நிலையில் இந்த விலை உயர்வு மூலம் கிடைக்கும் மேலதிக வருமானத்தின் மூலமாக ஏழை மக்களுக்கு உதவ முடியும் என்று ஈரான் அரசு தெரிவித்துள்ளது.

ஈரான் மீது அமெரிக்கா விதித்துள்ள பொருளாதாரத் தடைகளே இந்த விலை உயர்வுக்குக் காரணம் என்று விவாதிக்கப்பட்டு வருகின் றமை குறிப்பிடத்தக்கது.



மணிக்கு 1,010 கிலோமீற்றர் வேகம்!

பிரிட்டனைச் சேர்ந்த நிறு வனம் ஒன்று தயாரித்த 'பிளட்ஹவுண்ட்' எனும் மகிழுந்து மணிக்கு ஆயி ரத்து 10 கிலோ மீற்றர் வேகத்தில் ஓடிப் புதிய சாதனையைப் படைத் தது. இதன்மூலம் உலக வரலாற்றில் நிலத்தில் ஓடும் மகிழுந்துகளில் மணிக்கு 965 கிலோமீற் றர் வேகத்தைத் தாண்டிய ஏழாவது மகிழுந்து எனும் சிறப்பை இது பெற்றது.

ஜெட் ரக வானூர்திகளுக் குப் பயன்படுத்துகின்ற இயந்திரத்தைப் பொருத் தித் தயாரித்த குறித்த மகி முந்தை மணிக்கு ஆயி ரத்து 228 கிலோமீற்றர் வேகத்தில் பயணிக்கச் செய்கின்ற முயற்சியில் தயாரிப்பு நிறுவனம் ஈடு பட்டுள்ளது.

ஐ.எஸ்.ஐ.எஸ் சரண்

ஆப்கானிஸ்தான் படை யிடம் ஐ.எஸ்.ஐ.எஸ் ஆயுததாரிகள் 18பேர் சரணடைந்ததாக அந்த நாட்டுப்பாதுகாப்புஅமைச் சகம் தெரிவித்தது.

ஆப்கானில் நன்கர்ஹர் மாகாணத்தில் உள்ள அசின்நகரில் 24 பெண் கள் மற்றும் 31 குழந்தை களுடன் இந்தஆயுததா ரிகள் சரணடைந்தனர். இதில் சிலர் தஜிகிஸ்தான் பகுதியைச் சேர்ந்தவர் கள். ஐ.எஸ் அமைப்புக்கு எதி ராக நடத்தப்பட்டுவரு கின்ற தேடுதலுக்குப் பிறகு இவர்கள் சரண டைந்ததாக ஆப்கானில் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்தது.

பொலிவியாவிலிருந்து மெக்சிக்கோவுக்குத் தப்பியோடிய அந்த நாட்டு அதிபர் ஈவோ மோரலெஸை மெக்சிக்கோ அயலுறவு அமைச்சர் மார்செலோ எப்ரார்ட் வரவேற்றார். அண்மையில் பொலிவியாவில் நடந்து முடிந்த தேர்தலில் முறைகேடுகள் நடந்ததாகக்கூறி அங்கு போராட்டம் நடந்த நிலையில் மொரலஸ் பதவி துறந்தார். தற்போது மெக்சிக்கோ அவருக்குப் புகலிடம் அளித்துள்ளமை குறிப்பி டத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10லட்சம் முஸ்லிம்கள் அடைப்பு; சீனா அரசு அராஜகச் செயல்!

பீஜிங், நவ.19

சீனாவின் மேற்கு சின்ஜியாங் பகுதியில் கிட்டத்தட்ட 10 லட்சம் உய்குர் முஸ்லிம்கள் மற்றும் பிற சிறுபான்மை முஸ்லிம் பிரிவினர் முகாம்களில் அடைக்கப்பட்டுக் கண்காணித்து வரப்படுவதாகப் பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

சீனாவின் சின்ஜியாங் பகுதியில் அடைத்து வைக்கப்பட்டுள்ள முஸ்லிம்கள் குறித்த சீன அரசின் ஆவணங்களில் சில வெளியில் கசிந்தன. அந்த ஆவணங்களை ஆதாரமாக வைத்து தி நியூயோர்க் ரைம்ஸ் நாளிதழ் செய்தி வெளியிட்டது. அத்தோடு இது தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையும் தனது கருத்தைப் பதிவு செய்தது. சீனாவின் மேற்கு சின் ஜியாங் பகுதியில் சுமார்10லட்சம்உய்குர்முஸ்லிம்கள் மற்றும் பிற முஸ்லிம் சிறுபான்மையினர்கள் முகாம்களில் அடைக்கப்பட்டுக் கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்பட்டுக் கண்காணிக்கப்படுகிறார்கள். இது அமெரிக்கா மற்றும் பிற நாடுகளின் கடும் கண்டனங்களுக்கு ஆளாகியுள்ளதுஎன்று ஐ.நா. சார்பில் தெரிவிக்கப்பட்டது.

2014ஆம் ஆண்டு தொடருந்து நிலை யம் ஒன்றில் உய்குர் ஆயுதாரிகள் நடத்திய தாக்குதலில் 31 பேர் கொல்லப்பட்டதையடுத்துச் சீன அதிபர் ஜி ஜின்பிங், பிறப்பித்த உத்தரவுகளுக்கு அமைய இந்த மக்கள் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் தமது செய்தியில் மேலும் குறிப்பிட்டன. ஆனால் இந்தக் குற்றச் சாட்டுகளை சீனா மறுத்துள்ளது.

ஜோர்ஜியாவில் எதிர்க்கட்சியினர் போராட்டம்!

திபிலிசி, நவ.19

தேர்தல் சீர்திருத்த நடவடிக்கை தொடர்பான வாக்குறுதியை நிறைவேற்றாத ஆளுங்கட்சிக்கு எதிராக ஜோர்ஜியாவில் எதிர்க்கட்சியினர் போராட்டம் நடத்தினர். இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

தேர்தல் சீர்திருத்தம் தொடர்பாக அந்த நாட்டு நாடாளுமன்றத்தில் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. ஆனால் ஆளுங்கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களில் பலர் அதை எதிர்த்து வாக்களித்ததால் அந்தத் தீர்மானம் தோல்வியடைந்தது. இதையடுத்து எதிர்க்கட்சியினர் போராட்டத்தை ஆரம்பித்தனர். அரசு பதவி விலகி, முன்கூட்டியே நாடாளுமன்றத் தேர்தலை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து ஜோர்ஜியாவின் தலைநகர் திபிலிசியில் ஆர்ப்பாட்டங்களை நடத்திவருகின்றனர். அரசு சாரா அமைப்புகள் பலவும் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றன.

அரச அலுவலகங்களுக்கு இடையூறு ஏற்படுத்தினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அரசு எச்சரித்தும் போராட்டக்காரர்கள் கலைந்து செல்லவில்லை. இதனால் அங்கு பதற்றம் ஏற்பட்டுள்ளது.

அதிருப்தி வெளியிட்டார் டொனால்ட் ட்ரம்ப்!

லண்டன், நவ.19

அமெரிக்காவின் முன்னாள் பிரதி அரச தலைவரும் எதிர்வரும் அமெரிக்க அதிபர் தேர்தலில் போட்டியிட உள்ளவருமான ஜோ பைடனை, அடித்துக் கொல்லப்பட வேண்டிய வெறி பிடித்த நாய் என்று வடகொரியாவின் தேசிய செய்தி சேவை விமர்சித்திருந்தது.

கடந்த வெள்ளிக்கிழமை வெளியான இந்தச் செய்தி தொடர்பாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தனது அதிருப்தியை வெளியிட்டார்.

ஜோ பைடன் சுறுசுறுப்பில்லாமல் மெதுவாக வேலை செய்பவர் என்பது உண்மைதான். ஆனாலும் வெறிபிடித்த நாய் என விமர்சிக்கும் அளவுக்கு மோசமானவரல்ல அவர். அடித்துக் கொல்லப்பட வேண்டியவர் எனக் கூறியிருப்பதையும் ஏற்றுக் கொள்ள முடியாது என்று ட்ரம்ப் தனது கீச்சகப் பக்கத்தில் பதிவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய நாள்

மேடம்: உங்கள் செயல்களில் அதிக தற்காப்பு வேண்டும். தொழில், வியாபாரத்தில் இலக்கு படிப்படியாக நிறைவேறும். பண வரவை சிக்கனமாக பயன்படுத்துவீர்கள். தியானம், தெய்வ வழிபாடு மனதில் அமைதி தரும்.

இடபம்: மனதில் உற்சாகம் அதிகரிக்கும். நண்பருக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். தொழில். வியாபாரத்தில் இடையூறு விலகும். சேமிக்கும் அளவில் பண வருமானம் கிடைக்கும்.

மிதுனம்: அதிகம் பேசுவதை தவிர்ப்பதால்சுயகவுரவம்பாதுகாக்கலாம். தொழில், வியா பாரத்தில் பணி சுமை அதிகரிக்கும். முக்கிய செலவுகளுக்கான பண வரவு கிடைக்கும்.

கடகம்: உங்களின் திறமையை வளர்த்து கொள்வீர்கள். நிலுவை பணிகள் நிறைவேறும். தொழில், வியாபாரம் செழித்து வளரும். பண வரவும் நன்மையும் அதிகரிக்கும்.

சிம்மம்: உங்கள் குடும்ப உறுப்பினர்களின் எண்ணங்களுக்கு முக்கியத்துவம் தருவது நல்லது. தொழில், வியாபாரத்தில் மாறுபட்ட சூழ்நிலை இருக்கும்.

கன்னி: உங்கள் மனதில் வெகு நாள் இருந்த சஞ்சலம் தீரும். தொழில், வியாபாரத்தில்அபிவிருத்தி உருவாகும். ஆதாய பண வரவில்சேமிப்பீர்கள். உடல் ஆரோக்கியம் பலம் பெறும்.

துலாம்: உங்கள் நீண்ட நாள் எதிர்பார்ப்பு எளிதில் நிறைவேறும். நண்பர்களுடன் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரம் செழித்து வளரும்.

விருச்சிகம்: மணி திறமையை வளர்த்து கொள்வதால் சில நன்மைகளை பெறலாம். தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். குறைந்த அளவில் பணம் கிடைக்கும்

தனுசு: உங்கள்குடும்பஉறுப்பினர்களின் ஆலோசனை மனதில் நம்பிக்கையை தரும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் உழைப்பு அவசியம். பண வரவை சிக்கனமாக பயன்படுத்துவீர்கள்.

மகரம்: மன சாட்சிக்கு அதிக முக்கியத்துவம் தருவீர்கள். திட்டமிட்ட பணிகள் ஒவ்வொன்றாக நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய பரிமாணம் ஏற்படும்.

கும்பம்: உலக நடப்புகளை அறிவதில் ஆர்வம் வளரும். இஷ்ட தெய்வ அருளால் தொழிலில் உற்பத்தி, வியாபாரம் செழிக்கும்.

மீனம்: எதிர்மறையான சூழல்களில் விலகுவதால்நன்மை பெறலாம். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி சீரான முன்னேற்றம் பெறும். சேமிப்பு பணம் செலவுக்கு பயன்படும்.

ஆஸி. வீரர் பேட்டின்சனுக்கு தடை விதிப்பு

கோபம் அடைந்து எதிரணி வீரரை திட்டிய ஆஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் பேட்டின்சனுக்கு ஒரு போட்டியில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஜேம்ஸ் பேட்டின்சன், உள்ளூர் போட்டியின் போது குயின்ஸ்லாந்து வீரரை சரமாரியாகத் திட்டினார். இதுபற்றி நடுவர்கள் ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபையின் கவனத்துக்கு கொண்டு சென்றனர். இதையடுத்து அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதன்படி, அவருக்கு ஓர் பன்னாட்டுப் போட்டியில் விளையாடத் தடை விதிக்கப்பட்டது. இதனால் பிரிஸ்பேனில் ஆரம்பமாகும் பாகிஸ்தானுக்கு எதிரான முதலாவது டெஸ்டில் அவர் விளையாடமாட்டார். அவருக்குப் பதிலாக ஸ்டார்க் இணைக்கப்பட்டுள்ளார்.

இதையடுத்து பிரிஸ்பேனில் வீரர்களுடன் பயிற்சியில் ஈடுபட்டிருந்த அவர், தனது சொந்த ஊரான விக்டோரியாவுக்குத் திரும்பியுள்ளார். அடிலெய்டில், பாகிஸ்தானுக்கு எதிராக இடம் பெறும் 2 ஆவது டெஸ்ட் போட்டியில் பேட்டின்சன் பங்கேற்பார்.

வல்வை - கலட்டி இறுதியில் மோதல்

யாழ்ப்பாணம், நவ.19

கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 35 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு கொலின்ஸ் பழைய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் வல்வை விளையாட்டுக்கழகஅணியைஎதிர்த்துகலட்டிவிளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

நேற்று இடம்பெற்ற வல்வை அணிக்கும், மனோகரா விளையாட்டுக் கழக அணிக்கும் இடையில் இடம்பெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தின் ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் தலா 2 கோல்களைப் பதிவு செய்ய ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக சம நிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில் வல்வை விளையாட்டுக் கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மற்றுமொரு போட்டியில் கலட்டி விளையாட்டுக் கழக அணிக்கும், அண்ணா சிலையடி விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் கலட்டி விளையாட்டுக் கழக அணி 6:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)

ஜெகமீட்பர் அணி மகுடம் சூடியது

யாழ்ப்பாணம், நவ.19

ஜ.ஓம்.எம். நிறுவனத்தின் அனுசரணையில் உருத்திரபுரம் சனசமூக நிலையம் நடத்திய கிளிநொச்சி கால்பந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட கால்பந்தாட்ட அணிகளுக்கு இடையிலான அழைக்கப்பட்ட 12 அணிகள் மோதும் கால்பந்தாட்டத் தொடரில் வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக்கழக அணி கிண்ணம் வென்றது.

உருத்திரபுரம் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜெயந்திநகர் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் வலைப்பாடு ஜெகமீட்பர்விளையாட்டுக் கழக அணி 6:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. (23)

மும்பை அணியில் இருப்பை தக்க வைத்த மலிங்க

2020ஆம் ஆண்டு ஐ.பி.எல். ஏலத்தையொட்டி, மும்பை இந்தியன்ஸ் அணிக்காக கடந்த பதினொரு வருடங்களாக விளையாடிய இலங்கை அணியின் நட்சத்திர வேகப் பந்து வீச்சாளரான லசித் மலிங்கவை தக்கவைத்துக் கொள்ள அந்த அணி தீர்மானித்துள்ளது.

இதேநேரம், நான்கு தடவைகள் ஐ.பி.எல் சம்பியனாகத்தெரிவாகியமும்பை அணி, இந்தமுறை தமது அணியில் இருந்து 12 வீரர்களை விடுவிக்க நடவடிக்கை எடுத்திருப்பதுடன், கடந்த வருடம் அந்த அணிக்கு சம்பியன் பட்டத்தை வென்று கொடுப்பதற்கு காரணமாக இருந்த 18 வீரர்களை தொடர்ந்து தக்கவைத்துக் கொள்ளவும் தீர்மானித்துள்ளது.

ஐ.பி.எல் தொடரின் 2020ஆம் ஆண்டின் பருவத்துக்கான வீரர்கள் ஏலம் அடுத்த மாதம் கொல்கத்தாவில் இடம்பெறவுள்ளது.

இதில் ஐ.பி.எல். ஆரம்பித்த காலத்திலிருந்து மும்பை இந்தியன்ஸ் அணிக்காக விளையாடி வரும் இலங்கை அணியைச் சேர்ந்த ஒரேயொரு வீரரான லசித் மலிங்கவை தொடர்ந்து அந்த அணியுடன் தக்கவைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மும்பை இந்தியன்ஸ் தக்க வைத்துக் கொண்ட வீரர்கள்:

ரோஹித் ஷர்மா, ஹர்திக் பாண்டியா, ஜஸ்பிரித் பும்ரா, குருணல் பாண்டியா, இஷான் கிஷன், சூர்யா குமார் யாதவ், ராகுல் சஹார், அன்மோல்பிரீத் சிங், ஜெயந்த் யாதவ், ஆதித்யா தாரே, அனுகுல் ராய், தவால் குல்கர்னி, பொல்லார்ட், ஷெர்பேன் ரதர்ஃபோர்ட், லசித் மலிங்க, மிட்செல் மெக்லெனகன், ட்ரெண்ட் போல்ட்.

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணி வாகை

யாழ்ப்பாணம், நவ.19

இலங்கை பாடசாலை துடுப்பாட்டச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான 13 வயதுப் பிரிவினருக்கான கடினப்பந்து துடுப்பாட்டத் தொடரில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணி 112 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி அணி 32. 2 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 106 ஓட்டங்களை பெற்றது. இதில் டிமல்ரன் 48 ஓட்டங்களையும், டன்சன் 15 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். துளசிகன், கௌதமன் தலா 3 இலக்குகளை வீழ்த்தினர்.

தனது முதலாவது இன்னிங்ஸைக் காகத் துடுப்பெடுத்தாடிய தெல்லிப் பழை மகாஜனாக் கல்லூரி அணி 42 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 218 ஓட்டங்களைப் பெற்று போட்டியை இடை நிறுத்தியது. அணி சார்பில் ரகசீகன் 52 ஓட்டங்களையும், துசாகன், ஜோவேல் றொசான் ஆகியோர் தலா 36 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் டிமல்ரன் 3 இலக்குகளையும், டன்சன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர். (23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதம் தவறவிட்டமைக்கு டோனிதான் காரணம்

உண்மையை போட்டுடைத்த கம்பீர்

டோனி சொன்ன அந்த ஒரு வார்த்தையால் தான் உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் என்னுடைய சதம் பறிபோனது என்று முன்னாள் இந்திய வீரர் கம்பீர் நினைவு கூர்ந்துள்ளார்.

இந்தியாவில் கடந்த 2011ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டியில் இந்தியா - இலங்கை அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

இந்தப் போட்டியில் கம்பீர் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். 122 பந்தில் 97 ஓட்டங்கள் எடுத்த நிலையில் போல்ட் செய்யப்பட்டு ஆட்டமிழந்து சதம் அடிக்கும் வாய்ப்பை இழந்ததார்.

நான் சதம் அடிக்காமல் போனதற்கு, அந்த பந்துப்பரிமாற்றத்துக்கு முன்னர் டோனி என்னிடம் ஞாபகப்படுத்திய அந்த ஒரு வார்த்தைதான் என கம்பீர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் நான் 97 ஓட்டங்கள் எடுத்திருக்கும் போது என்ன நிகழ்ந்தது என்ற கேள்வியை பலமுறை கேட்டிருக்கிறார்கள். நான் ஒவ்வொருவருக்கும் சொன்னது, 97 ஓட்டங்கள் எடுப்பதற்கு முன், என்னுடைய தனிப்பட்ட ஓட்ட எண்ணிக்கையை நான் நினைத்தது கிடையாது.

தற்போது நான் ஆட்டமிழப்பதற்கு முன்னைய பந்துப்பரிமாற்றத்தில் நடந்ததை நினைத்து பார்க்கிறேன். அப்போது டோனி என்னிடம் இன்னும் மூன்று ஓட்டங்கள் இருக்கிறது. மூன்று ஓட்டங்கள் அடித்தால் உங்களுடைய சதம் பூர்த்தியாகும் என்று கூறினார்.

உங்களது மனநிலை திடீரென தனிப்பட்ட ஆட்டம் நோக்கி செல்லும்போது, உங்களுக்கு படபடப்பு ஏற்படும். அதற்கு முன்பு வரை இலங்கை நிர்ணயித்த இலக்கை எட்ட வேண்டும் என்று நினைப்பு இருந்தது. இந்த ஒரு நினைப்பு மட்டுமே இருந்திருந்தால், ஒருவேளை நான் எளிதாக சதம் அடித்திருக்கலாம்.

90 ஓட்டங்கள் எடுத்திருக்கும் வரை நிகழ்காலத்தில் இருந்தேன். ஆனால், உடனடியாக 100 ஓட்டங்களுக்கு இன்னும் மூன்று ஓட்டங்கள்தான் இருக்கிறது என்பதை நான் நினைத்த உடன், படபடப்பு தொற்றிக் கொண்டது.

நான் ஆட்டமிழந்து வீரர்கள் அறைக்கு திரும்பும்போது எனக்குள்ளே நான் சொல்லிக் கொண்டது, எஞ்சிய வாழ்நாள் முழுவதும் இந்த 3 ஓட்டங்கள் பெரிய பிரச்சினையாக இருக்கும் என்பதுதான். அது உண்மையானது. தற்போது கூட, நீங்கள் ஏன் அந்த 3 ஓட்டங்களை எட்ட முடியவில்லை என்று மக்கள் கேட்கிறார்கள். இதனால் இந்த விடயத்தை நினைவு கூர்கின்றேன் - என்றார்.

ஏ.ரி.பி. உலக ரென்னிஸ் தொடர்;

கிரீஸ் வீரர் சிட்சிபாஸ் கிண்ணம் வென்றார்

ஏ.ரி.பி. உலக ரென்னிஸ் போட்டியின் இறுதி ஆட்டத்தில் கிரீஸ் வீரர் சிட்சிபாஸ் கிண்ணம் வென்றார்.

உலகின் முதல் 8 இடங்களில் உள்ள முன்னணி வீரர்கள் பங்கேற்ற ஏ.ரி.பி. ரென்னிஸ் இறுதிச் சுற்று லண்டனில் நடந்தது.

இதன் இறுதிப் போட்டியில் ஆஸ்திரியா வீரரான டொமினிக் தீம் எதிர் கிரீஸ் வீரர் ஸ்டெபானஸ் சிட்சிபாஸ் மோதினர்.

இதில் 21வயதான சிட்சிபாஸ் 6:7, 6:2, 7:6 என்ற செற் கணக்கில் டொமினிக் தீம்மை வீழ்த்தி கிண்ணத்தைச் சுவீகரித்தார்.

முதல் 3 இடங்களில் உள்ள நடால், ரோஜர் பெடரர், ஜோகோவிச் ஆகியோரை வீழ்த்தி இருவரும் இறுதிப்போட்டிக்கு முன்னேறி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த வெற்றியின் மூலம் சிட்சிபாஸ் ஏ.ரி.பி. கிண்ணத்தை இளம் வயதில் வென்ற 2 ஆவது வீரர் என்ற பெருமையை பெற்றார்.

இந்தப் பட்டத்தை வென்ற முதல் கிரீஸ் வீரர் என்ற சாதனையையும் அவர் படைத்தார்.

2001ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவை சேர்ந்த லைடன் ஹெவிட் 20 வயதில் இந்த கிண்ணத்தைப் பெற்றிருந்தார்.

இந்தப் போட்டியில் அரையிறுதிக்கு தகுதி பெறாமல் போனாலும் இந்த ஆண்டின் தர வரிசைப் பட்டியலில் ரபேல் நடால் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார். ஜோகோவிச் 2ஆவது இடத்திலும், பெடரர் 3ஆவது இடத்தில் உள்ளனர்.

இறுதிப்போட்டியில் விளையாடிய டொமினிக் தீம் ஓர் இடம் முன்னேறி 4ஆவது இடத்தை பிடித்தார். கிண்ணம் வென்ற சிட்சிபாஸ் 6ஆவது இடத்தில் உள்ளார்.

தம்பி அடித்த பந்தால் அண்ணனுக்கு காயம்

ஆஸ்திரேலியாவில் மார்ஷ் கோப்பைக்கான உள்நாட்டு ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் போது வெஸ் அகர் அடித்த பந்து தாக்கியதில் ஆஷ்டன் அகருக்கு காயம் ஏற்பட்டது.

ஆஸ்திரேலியாவில் மார்ஷ் கோப்பைக்கான உள்நாட்டு ஒருநாள் கிரிக்கெட் தொடர் நடந்து வருகிறது. அடிலெய்டுவில் நேற்று நடந்த ஆட்டம் ஒன்றில் மேற்கு அஸ்திரேலியா- தெற்கு அஸ்திரேலியா அணிகள் மோதின.

இதில் தெற்கு ஆஸ்திரேலியா அணி துடுப்பெடுத்தாடிய போது அந்த அணியின் வெஸ் அகர் அடித்த ஒரு பந்தை பிடியெடுக்க முயற்சி செய்ய அவரது சகோதரரான ஆஷ்டன் அகரை தாக்கி அவர் காயமடைந்தார். இதனால் அவர் உடனடியாக மைதானத்தை விட்டு வெளியேற்றப்பட்டு அவருக்கு சிகிச்சை அளிக்கப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுகிய காலத்தில் வெற்றிகளை குவிப்போம்

ஹக்கால் தெரிவிப்பு

தலைசிறந்த அணிகளுக்கு எதிராக அதிக எண்ணிக்கையிலான டெஸ்ட் போட்டிகளில் விளையாட வேண்டும் என பங்களாதேஷ் அணித் தலைவர் தெரிவித்துள்ளார்.

இறுதி ஏழு மாதங்களில் இரண்டு டெஸ்ட் போட்டியில் மட்டுமே விளையாடியுள்ளோம்.

எங்களால் உடனடியாக வெற்றி பெற முடியாமல் இருக்கலாம் ஆனால் ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளில் வெற்றிகளை பெறுவோம் இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் அணி இன்னிங்ஸால் தோல்வியடைந்தது. இந்தத் தோல்வியை அந்த அணித் தலைவர் மொமினுல் ஹக்கால் எளிதாக ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

இதுகுறித்து அவர் தெரிவிக்கையில்;

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடர் முடிந்த உடன் பயிற்சியாளருடன் இணைந்து டெஸ்ட் அணியை பற்றி விவாதிக்க இது நல்ல வாய்ப்பாக இருக்கும்.

அணியின் கட்டமைப்பு பற்றி விவாதிக்க முடியும். தற்போது எங்களால் உடனடியாக வெற்றிகளை பெற முடியாமல் இருக்கலாம், ஆனால் இன்னும் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் எங்களால் வெற்றியை ஈட்ட முடியும்.

மனதளவில் தயாராகி விட்டால், நேர்மறையாக சிந்திக்க முடியும். டெஸ்ட் கிரிக்கெட் கட்டமைப்பு பற்றி யோசித்தால் மன நிலை அதிலேயே இருக்க வேண்டும். அதன்பின் தானாகவே டெஸ்ட் போட்டியை பற்றி சிந்திக்க தோன்றும்.

நாங்கள் ஏராளமான டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளோம். இறுதி ஏழு மாதங்களில் பார்த்தீர்கள் என்றால், இரண்டு போட்டிகளில் மட்டுமே விளையாடியுள்ளோம். ஏனைய அணிகளைப் போன்று நாங்கள் டெஸ்ட் போட்டிகளில் விளையாட வில்லை. இது மிக முக்கியமான வேறுபாடு- என்றார்.

லக்ஸம்பேர்க்கை வீழ்த்தி போர்த்துக்கல் அபாரம்

யூரோ கிண்ணத்துக்கான தகுதிச் சுற்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் லக்ஸம்பேர்க்கை வீழ்த்தியது போர்த்துக்கல்.

உக்ரைன், போர்த்துக்கல், சேர்பியா, லக்ஸ்சம்பேர்க், லித்துவேனியா அணிகள் பி பிரிவில் இடம்பிடித்துள்ளன. உக்ரைன் அனைத்து ஆட்டங்களிலும் வெற்றிபெற்று முதலிடத்தில் உள்ளது.

ஆட்டம் ஆரம்பித்த 39ஆவது நிமிடத்தில் போர்த்துக்கல் அணி வீரர் பேர்மெண்டஸ் ஒரு கோலைப் போட முதல் பாதி ஆட்டத்தில் போர்த்துக்கல் அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பித்ததும் இரு அணி வீரர்களும் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் இல்லை என்பதை நிரூபிக்கும் வகையில் ஆடினர். ஆட்டத்தின் இறுதி வரையில் பரபரப்பு காணப்பட்டது. எனினும் ஆட்டத்தின் 86ஆவது நிமிடத்தில் போர்த்துக்கல் அணித் தலைவர் ரொனால்டோ கோல் ஒன்றைப் பதிவு செய்ய ஆட்ட நேர முடிவில் போர்த்துக்கல் அணி 2:0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

போர்த்துக்கல் அணி வீரர்கள் 12 தடவைகள் எதிரணியின் கோல் கம்பங்களை நோக்கி பந்தை நகர்த்திய போதும் அவர்களால் இரண்டு கோல்களையே பெற முடிந்தது. லக்ஸ்சம்பேர்க் அணிக்கு 4 கோனர் முறையில் கோல்கள் அடிப்பதற்கான வாய்ப்புகள் காணப்பட்ட போதிலும் அதனை தவறவிட்டிருந்தனர்.

இந்த வெற்றியின் மூலம் போர்த்துக்கல் அணி 8 போட்டிகளில் 5 போட்டிகளில் வெற்றி பெற்று சேர்பியா அணியை பின் தள்ளி 2ஆம் இடத்துக்கு முன்னேறியுள்ளது.

உள்நாட்டு போட்டிகளில்

சிறப்பாக விளையாடினால் சர்பராஸுக்கு அணியில் இடம்

இம்ரான் கான் அறிவிப்பு

அணித் தலைவர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட சர்பராஸ் அகமது உள்நாட்டு தொடரில் சிறப்பாக விளையாடினால் பாகிஸ்தான் அணிக்கு திரும்பலாம் என அந்த நாட்டு தலைமை அமைச்சர் இம்ரான்கான் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணித் தலைவராக இருந்தவர் சர்பராஸ் அகமது. அவர் டெஸ்ட் மற்றும் ரி-20 அணித் தலைவர் பதவியில் இருந்து அதிரடியாக நீக்கப்பட்ட நிலையில், அணியில் இருந்தும் நீக்கப்பட்டார்.

இந்த நிலையில் அவரது கிரிக்கெட் வாழ்க்கை முடிந்துவிட வில்லை. உள்நாட்டு போட்டியில் சிறப்பாக விளையாடினால் அணியில் மீண்டும் அவருக்கு இடம் உண்டு என பாகிஸ்தான் தலைமை அமைச்சர் இம்ரான் கான் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

ரி-20 கிரிக்கெட்டில் விளையாடுவதை வைத்து வீரரின் ஆட்டத்தை நிர்ணயிக்க முடியும் என்று நான் நினைக்கவில்லை. ஆனால், டெஸ்ட் மற்றும் ஒரு நாள் கிரிக்கெட் சரியானது. உள்ளூர் போட்டிகளில் சிறப்பாக விளையாடினால் சர்பராஸ் அகமதுவால் மீண்டும் பாகிஸ்தான் அணிக்கு திரும்ப முடியும்- என்றார்.

சிறுநீரகம் தேவை
49 வயதுடைய பெண் ஒருவருக்கு O அல்லது A இரத்தவகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவைப்படுகின்றது. (CS/29394) (11,17)
076 793 6945

பந்தை சேதப்படுத்திய விவகாரம்:

நிக்கோலஸ் பூரனுக்கு ஸ்டீவ் ஸ்மித் ஆதரவு

ஆப்கானிஸ்தான் அணிக்கெதிரான ஆட்டத்தில் பந்தை சேதப்படுத்தி தடைக்குள்ளான நிக்கோலஸ் பூரனுக்கு ஸ்மித் ஆதரவு தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலிய அணியின் தலை சிறந்த வீரரான ஸ்மித் பந்தை சேதப்படுத்திய விவகாரத்தில் சிக்கி ஓராண்டு தடைக்குப்பின் தற்போது பன்னாட்டு கிரிக்கெட் போட்டிக்கு திரும்பியுள்ளார். முதல் தொடரான ஆஷஸில் அபாரமான ஆட்டத்தை வெளிப் படுத்தினார்.

இதற்கிடையில் ஆப்கானிஸ்தான் -மேற்கிந்தியத்தீவுகள் அணிகள் மோதிய ஆட்டத்தின் போது மேற்கிந்தியத்தீவுகள் வீரர் நிக்கோலஸ் பூரன் பந்தை சேதப் படுத்தியது தெரிய வந்தது. இதனால் அவருக்கு நான்கு போட்டிகளில் விளையாட தடைவிதித்தது ஐசிசி.

இந்த நிலையில் இந்தப் பிரச்சினையில் இருந்து மீண்டு வலுவான வீரராக வருவார் என ஸ்மித், நிக்கோலஸ் பூரனுக்கு ஆதரவாக கருத்து தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஸ்மித் தெரிவிக்கையில்;

ஒவ்வொருவரும் மாறுபட்டவர்கள். அதேபோல் ஒவ்வொரு கிரிக்கெட் சபையும் மாறுபட்டது. ஒரு குறிப்பிட்ட பிரச்சினையை அவரவர் வழிகளில் கையாள்வார்கள். என்னைப் பொறுத்த வரைக்கும், முகத்தில் அறையப்பட்டு அதை எதிர்கொண்டேன். எனக்கு நிக்கோலஸ் பற்றி தெரியும். அவருடன் சிறிய காலம் கிரிக்கெட் விளையாடியுள்ளேன். அவர் திறமையான வீரர். அவருக்கு சிறந்த எதிர்காலம் உள்ளது. அவர் தவறில் இருந்து பாடம் கற்றுக் கொண்டு, அதில் இருந்து கடந்து செல்வார் என நினைக்கிறேன்.

நான் இந்த விடயத்தை கடினமாக உணர்ந்ததில்லை. நான் கடந்த காலத்தில் இருந்து விலகி வந்துவிட்டேன். தற்போது வரவிருக்கும் கிரிக்கெட் போட்டிகள் மீது கவனம் செலுத்துகிறேன்.

கரிபீயன் பிறீமியர் லீக்கில் பூரனுடன் விளையாடியுள்ளேன். அவர் ஒரு தலைசிறந்த வீரராக இருக்கப்போகிறார் என்று நினைக்கிறேன்-என்றார்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் திருவனந்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.11.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org